# VETRII IAS STUDY CIRCLE

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 2017

© **VETRII IAS STUDY CIRCLE**

First Edition - 2016

**Pages : 166**

**Size :(140 x210)mm**

***Published by***

**VETRII IAS STUDY CIRCLE**

F Block New No. 1, 9th Street,

1st Avenue main Road, Chinthamani,

Anna Nagar (E), Chennai – 102.

Phone: 044 – 26265326 / 9600124042 / 9840097666

www.vetriias.com

E-mail: vetriiias@gmail.com, vetriiias2011@gmail.com

© All rights reserved with the publisher. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without the written permission of the publisher, will be responsible for the loss and may be punished for compensation under copyright act.

# இயக்குநர் வாழ்த்து மடல்



**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின்.**

**பொருள் :**

ஒன்றை பற்றி நினைத்தவர் நினைத்தபடியே செயல் புரிவதில் உறுதியடைந்தவராக இருந்தால் நினைத்தவாறு வெற்றியே பெறலாம்.

**என் அன்பிற்கினிய மாணவர்களுக்கு!**

மேற்கண்ட வள்ளுவரின் வாய்மொழியினை மெய்பிக்க விடா முயற்சியுடன், கடினமாக உழைத்து நேர்மையான வழியில் மாணவர்கள் தங்கள் வெற்றியினை அடைய **வெற்றி ஆட்சிபணிகள் பயிற்சி நிறுவனம்** சரியான வழிகாட்டுதலுடன், தரமான பயிற்சியினை அளித்து ஒவ்வொரு மாணவரின் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி அவர்களின் குறிக்கோள்களை நிறைவு செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறது.

நம் பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு அனைத்து பாடத்திலும் அடிப்படை அறிவை தெளிவுபடுத்தும் வகையில் வகுப்புகள் நடத்தப்பட்டு அதனை விளக்கும் வகையில் நம்முடைய அனைத்து கையேடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலினை படித்து பயன்பெற மீண்டும் ஒருமுறை என்னுடைய வாழ்த்துகளை உங்களுக்கு உரித்தாக்கி கொள்கிறேன்.

**(மு. சண்முகம்)**

வெற்றி ஆட்சிபணிகள் பயிற்சி நிறுவனம்

# நடப்பு நிகழ்வுகள்

## பொருளடக்கம்


| எண் | பாடத்தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | அரசியல் | 1 |
| 2. | பொருளாதாரம் | 5 |
| 3. | ஆளுமைகள் | 10 |
| 4. | விருதுகள் மற்றும் மரியாதைகள் | 18 |
| 5. | இராணுவம் | 23 |
| 6. | அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் | 28 |
| 7. | விளையாட்டுகள் | 33 |
| 8. | தமிழ்நாடு | 53 |
| 9. | இந்தியா - தேசியம் | 65 |
| 10. | உலகம் | 83 |
| 11. | திட்டங்கள் | 92 |
| 12. | கட்டுரை | 94 |
| 13. | பொது அறிவு | 97 |
| 14. | வினா - விடைகள் | 99 |

# அரசியல் நிகழ்வுகள்

## அமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி கடந்து வந்த பாதை:

- அ.தி.மு.க.வில் கிளைச் செயலாளராக அரசியலில் அடியெடுத்து வைத்த எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக தேர்வானது வரை அவர் அரசியலில் கடந்து வந்த பாதை.

- **சேலம் மாவட்டம் எடப்பாடியை** அடுத்த நெடுங்குளம் கிராமத்தில் சிலுவம்பாளையம் பகுதியைச் சேர்ந்த **கருப்ப கவுண்டர், தவசாயம்மாள்** தம்பதியின் இளைய மகன் எடப்பாடி பழனிச்சாமி (63).

- அதிமுகவில் உறுப்பினராக இருந்த எடப்பாடி பழனிச்சாமி **1986-ல்** நெடுங்குளம் ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். எம்.ஜி.ஆர் மறைவுக்கு பின்னர் அதிமுகவில் ஜானகி, ஜெயலலிதா அணிகள் பிரிந்தபோது, முத்துசாமி ஜானகி அணிக்கும், செங்கோட்டையன் ஜெயலலிதா அணிக்கும் சென்றனர்.

- அப்போது, செங்கோட்டையனுக்கு ஆதரவாக ஜெயலலிதா அணியில் இணைந்து **1989-ம் ஆண்டு சேவல் சின்னத்தில்** எடப்பாடி தொகுதியில் போட்டியிட்டு முதல் முறையாக எம்எல்ஏவாக தேர்வானார் பழனிச்சாமி.

- பிளவுபட்டிருந்த அ.தி.மு.க ஒன்றிணைந்த பின்னர் 1991-ல் நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் எடப்பாடியில் போட்டியிட்டு எம்எல்ஏவாக தேர்வானார்.

- 1992-1996 வரை ஆவின் தலைவராக இருந்தார். பின்னர் 1996-ல் சட்டப்பேரவைத் தேர்தலில் தோல்வியடைந்தார். 1998-ல் திருச்செங்கோடு நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றார்.

- **1999 மற்றும் 2004-ம்** ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தார். அப்போது சிமெண்ட் வாரிய தலைவராக நியமிக்கப்பட்டார். 2006-ல் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். **2011-ம்** ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று முதல் முறையாக **நெடுஞ்சாலைத் துறை** அமைச்சராக நியமிக்கப்பட்டார். 2016-ம் ஆண்டு தேர்தலிலும் வெற்றி பெற்று மீண்டும் அமைச்சரானார்.

## பாஜகவில் இணைந்தார் எம்.ஜி.ஆர். பேரன்:

- மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களின் பேரன் **என்.சி.ஆர்.பிரவீன்** பாஜகவில் இணைந்தார். எம்.ஜி.ஆரின் மூத்த சகோதரரும் நடிகருமாக விளங்கிய **எம்.ஜி.சக்கரபாணி.** அவர்களின் பேரன் எம்.சி.ஆர்.பிரவீன்.

- இவர், பாஜகவில் இணைந்தார். அக்கட்சியின் சார்பில் சென்னையில் நடந்த கூட்டத்தில் பிரவீன் தன்னை கட்சியில் இணைத்து கொண்டார்.
- எம்.சி.ஆர்.பிரவீன், **சென்னையில்** உள்ள ஒரு நிறுவனத்தில் **மனிதவளத் துறை ஆலோசராக** பணிபுரிந்து வருகிறார்.

## ‘எம்ஜிஆர் - அம்மா - தீபா பேரவை’ புதிய அமைப்பை தொடங்கினார் தீபா:

- **‘எம்ஜிஆர் - அம்மா - தீபா பேரவை**’ புதிய அமைப்பை ஜெயலலிதாவின் அண்ணன் மகள் **தீபா** தொடங்கினார்.
- அதைத் தொடர்ந்து முறைப்படி பேரவையின் பெயர் மற்றும் கொடியை தீபாவும், அவரது கணவர் மாதவனும் கூட்டாக அறிமுகம் செய்தனர். புதிய அமைப்புக்கு ‘**எம்ஜிஆர் - அம்மா - தீபா பேரவை**’ என பெயரிடப்பட்டுள்ளது.
- தீபா அறிமுகம் செய்த **கருப்பு, சிவப்பு நிற கொடியின் நடுவில் எம்ஜிஆருக்கு ஜெயலலிதா செங்கோல் கொடுக்கும் படம்** இடம் பெற்றுள்ளது.

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவராக காதர்மொய்தீன் தேர்வு:

- **இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவராக கே.எம். காதர் மொகிதீன்** தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- கடந்த ஜனவரி 31-இல் நடைபெற்ற நாடாளுமன்ற கூட்டத் தொடரின்போது இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி உரையாற்றினார்.
- அப்போது, இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் தேசியத் தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சரும், மக்களவை உறுப்பினருமான **இ-அஹமது சாஹிப்புக்கு** திடீரென மாரடைப்பு ஏற்பட்டது.
- மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர், அங்கு உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து, கட்சியின் தேசிய செயற்குழு கூட்டம் **சென்னையில்** நடைபெற்றது.
- இதில், கட்சியின் தாற்காலிக தேசியத் தலைவரும், பொதுச் செயலாளருமான பேராசிரியர் கே.எம். காதர் மொய்தீன் தேசியத் தலைவராக ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டார்.

### இந்தியாவில் முஸ்லீம் லீக்:

- இந்தியாவில் முஸ்லீம் மக்களுக்காக **1906-ல் நவாப் சலீம் முல்லாகான்”** அகில இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கை ஆரம்பித்தார்.
- அவருக்கு பின்னர் **முகமது அலி ஜுன்னா** அதனை நடத்தி வந்தார்.
- பாகிஸ்தான் பிரிவினைக்கு பின் இதன் தலைவரானார் **காயிதேமில்லத்.**

## சுஷ்மா, முரளி மனோகர் ஜோஷி பெயர்கள் பரிசீலனை:

- குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியின் பதவிக் காலம் வரும் ஜூலை மாதம் நிறைவு பெறுகிறது.
- இதையொட்டி, புதிய குடியரசுத் தலைவரைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் அறிவிப்பை **உத்தரப் பிரதேசம், பஞ்சாப், கோவா, மணிப்பூர்** உள்ளிட்ட ஐந்து மாநில சட்டப்பேரவைத்

தேர்தல் வாக்கு எண்ணிக்கைக்குப் பிறகு அறிவிக்க தலைமைத் தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

- மக்களவைத் தலைவர் **சுமித்ரா மகாஜன்** (74), **ஜார்க்கண்ட் மாநில ஆளுநர் திரௌபதி முர்மு (59) ஆகிய பெண் தலைவர்கள்**, குடியரசுத் தலைவர் பதவிக்கான தேர்தலில், வேட்பாளராக முன்மொழியப்பட்டால் அதைப் பெண்களுக்கான அங்கீகாரமாகக் கருதும் பிரசாரமாக மேற்கொள்ளலாம் என்று திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

## காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாட்டுவில் - கர்நாடக அரசு அணை கட்ட அனுமதிக்க கூடாது:

- காவிரி ஆற்றின் குறுக்கே **மேகேதாட்டு** பகுதியில் புதிய அணை கட்ட கர்நாடக அரசு முடிவெடுத்துள்ளது. காவிரி ஆற்றின் வடிநில மாநிலங்களின் ஒப்புதல் பெறாமல் கர்நாடக அரசு தன்னிச்சையாக முடிவு எடுத்துள்ளது.
- மேலும் அணை கட்டுவதற்கு மத்திய அரசின் நீர்வளத் துறையின் அனுமதியை பெற திட்டமிட்டுள்ளது. கர்நாடக அரசின் இந்த நடவடிக்கை காவிரி நடுவர் மன்றத் தீர்ப்புக்கு எதிரானது.
- எனவே, அணை கட்டுவதற்கு மத்திய அரசின் நீர்வள மேலாண்மை, மின்சாரம், சுற்றுச்சூழல், வனம், காலநிலை மாற்றம் உட்பட எந்த துறையும் அனுமதி வழங்கக் கூடாது.
- நீரிலிருந்து மின்சாரம் எடுக்கப் போவதாக கூறி புதிய அணை கட்டும் திட்டத்தை கர்நாடக அரசு செயல்படுத்த நினைக்கிறது என்றார் தமிழக முதல்வர்.

## மணிப்பூர்: முதன்முறையாக முஸ்லிம் பெண் தேர்தலில் போட்டி:

- **மணிப்பூர்** மாநிலத்தில் சட்டப் பேரவைத் தேர்தலில் முதல் முறையாக முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் போட்டியிடுகிறார். **நஜீமா பீவி** என்ற அந்தப் பெண் வேட்பாளர், **இரோம் ஷர்மிளாவின்** புதிய அரசியல் கட்சியான **'மக்கள் எழுச்சி நீதிக் கூட்டணி'** சார்பில் போட்டியிடுகிறார்.

## நாகாலாந்து புதிய முதல்வராக சுரோஜெலி லிஜிட்சு பதவியேற்பு:

- நாகாலாந்தின் புதிய முதல்வராக **சுரோஜெலி லிஜிட்சு** பதவியேற்றார். அவருடன் 11 அமைச்சர்களும் பதவியேற்றுக் கொண்டனர்.
- கோஹிமாவிலுள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில், சுரோஜெலிக்கும், அமைச்சர்களுக்கும் ஆளுநர் **பி.பி.ஆச்சார்யா** பதவிப் பிரமாணமும் ரகசியக் காப்பு பிரமாணமும் செய்துவைத்தார்.

- 81 வயதாகும் சுரோஜெலி, தற்போது எம்.எல்.ஏ.வாக இல்லை. இதனால், அவர் 6 மாதங்களுக்குள் ஏதேனும் ஒரு தொகுதியில் போட்டியிட்டு எம்.எல்.ஏ.வாக தேர்வாக வேண்டும். அங்கு முதல்வராக இருந்த **டி.ஆர்.ஜிலியாங்** தனது பதவியை ராஜினாமா செய்தார்.
- நாகாலாந்து உள்ளாட்சித் தேர்தலில் **பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு** அளிக்கும் அவரது அரசின் முடிவுக்கு எதிராக பல்வேறு பழங்குடியின அமைப்புகள் போராட்டங்களில் ஈடுபட்ட நிலையில், அவர் பதவி விலகினார். **சுரோஜெலி லிஜிட்சு** முதல்வராக ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

## வர்த்தகத் துறை அமைச்சர்:

- வர்த்தகத் துறை அமைச்சர் பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்ட **வில்பர் ராஸ்** நாடாளுமன்ற நியமனங்கள் குழு முன்பாக ஆஜரானார்.
- பரவலான நன்மதிப்பைப் பெற்ற அவரிடம், குடியரசுக் கட்சி, ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் மிகுந்த மரியாதையுடன் துறை சார்ந்த கேள்விகளைக் கேட்டனர்.
- அமெரிக்க அரசியல் சாசனப்படி, அதிபரின் நியமனப் பரிந்துரை மீதான வாக்களிப்புக்குப் பிறகே **வில்பர் ராஸ்** அமைச்சராகப் பொறுப்பேற்க இயலும்.
- வி.எல்.ராஸ் என்னும் நிதி நிறுவனத்தின் உரிமையாளரான வில்பர் ராஸ் அமெரிக்காவின் பெரும் கோடீஸ்வராகளில் ஒருவர்.
- **மெக்சிகோ, கனடா** போன்ற நாடுகளுடன் ஏற்படுத்தப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்யப் போவதாக அவர் தெரிவித்தார்.
- சர்வதேச உடன்படிக்கைகள் அனைத்துமே சில ஆண்டுகளுக்கு ஒருமுறை நாட்டின் நலன் கருதி மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

## வாக்கெடுப்பில் எடப்பாடி பழனி சாமி வெற்றி:

- சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் **முதல்வர் எடப்பாடி பழனிசாமி** வெற்றி பெற்றார்.

## தமிழக சட்டப் பேரவை:

- தமிழக சட்டப் பேரவையில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக பிப்ரவரி 18 அன்று நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் **முதல்வர் எடப்பாடி பழனிசாமி 122 வாக்குகள்** பெற்று வெற்றி பெற்றார். இதன்மூலம், **தமிழகத்தின் 13வது முதலமைச்சராக எடப்பாடி பழனிசாமி** அவர்கள் தேர்வு செய்யப்பட்டது உறுதியாகியுள்ளது.

## தமிழ்த் தாத்தாவுக்கு மரியாதை...

- **தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதய்யரின் 163-ஆவது** பிறந்தநாளை முன்னிட்டு சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் உள்ள அவரது சிலைக்கு கீழே வைக்கப்பட்டிருந்த படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி, அமைச்சர்கள்.

# பொருளாதார நிகழ்வுகள்

## சமீபத்தில் ரிசர்வ் வங்கியிடமிருந்து “பேமண்ட் பேங்க்”:

- சமீபத்தில் ரிசர்வ் வங்கியிடமிருந்து **“பேமண்ட் பேங்க்”** அமைப்பதற்கான அனுமதியைப் பெற்றுள்ள அமைப்பு - **இந்திய அஞ்சல் துறை.** இதன் மூலம் **Paytm, Airtel** நிறுவனங்களைத் தொடர்ந்து, இந்திய அஞ்சல் துறை மூன்றாவது நிறுவனமாக, பேமண்ட் வங்கிகளை அமைக்கவுள்ளது.

## பொருளாதாரக் கணக்கெடுப்பு:

- பொருளாதாரக் கணக்கெடுப்பு 2016-2017 இன் படி இந்தியாவில், 2017-18 நிதியாண்டில் விவசாயத் துறை **4.1%** வளர்ச்சி பெறும் என கணிக்கப்பட்டுள்ளது. மேலும், மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜி.டி.பி) 6.75% லிருந்து 7.5% வரை வளர்ச்சியிருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

## “Operation Clean Money”:

- **“Operation Clean Money”** எனப்படுவது **வருமான வரித் துறையினால் துவங்கப்பட்டுள்ள திட்டமாகும்.** இதன் முக்கிய நோக்கம், பண மதிப்பிழப்பு நடவடிக்கைக்கு பின்னர் வங்கிகளில் செலுத்தப்பட்டுள்ள **பணத்தின் உண்மைத்தன்மையை** சோதித்தறிவதாகும்.

## விக்ரம் மாயே:

- தேசிய பங்குச் சந்தையின் புதிய தலைமை செயல் அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குநராக **விக்ரம் மாயே** தேர்வு செய்யப்பட்டுள்ளார். **விக்ரம் மாயே** தற்போது **ஐ.டி.எப்.சி.** வங்கியின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி பொறுப்பில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மத்திய அரசின் மொத்த விலைப் பட்டியல்:

- மத்திய அரசின் மொத்த விலைப் பட்டியலின் படி **2015-2016** ஆம் ஆண்டில் **பணவீக்கம் - 2.5%** குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## “DigiGaon”:

- **“DigiGaon”** என்பது, மத்திய பட்ஜெட் 2017-2018 ல் அறிவிக்கப்பட்டுள்ள புதுமையான திட்டமாகும் இதன் மூலம், **தொலை மருத்துவம் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் வாயிலாக கல்வி மற்றும் திறன் மேம்பாடு** ஆகிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## 2017-2018 பட்ஜெட்:

- 2017-2018 பட்ஜெட்டில், ரிசர்வ் வங்கியின் கீழ் "**பணப்பரிமாற்ற ஒழுங்குமுறை வாரியம்**" அமைக்கபடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பின் தலைவராக **ரிசர்வ் வங்கியின் ஆளுநர்** செயல்படுவார்.

## சிறந்த தகவல் தொழில்நுட்ப தொழில் துவக்க நிறுவன விருது:

- மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சரவையின் **"2016 ஆம் ஆண்டின் சிறந்த தகவல் தொழில்நுட்ப தொழில் துவக்க நிறுவன விருது", 'லூசிடஸ்' எனப்படும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.** இந்த நிறுவனம், மத்திய அரசின் டிஜிட்டல் பணவர்த்தனைக்கான மொபைல் செயலியான **"பீம்" செயலி** தயாரிப்பில் முக்கிய பங்கு வைத்தது. BHIM (Bharat Interface for Money) எனப்படுவது ஆதார் எண்ணை அடிப்படையாகக் கொண்டு மொபைல் போன் வழியாக பண பரிமாற்றங்கள் செய்வதற்கான செயலியாகும்.

## நேரடி வரி வருமானம் 10% உயர்வு:

- நடப்பு நிதி ஆண்டில் ஏப்ரல் முதல் ஜனவரி வரையான காலத்தில் **நேரடி வரி வருமானம் 10.79 சதவீதம்** அதிகரித்துள்ளது.
- இதேபோல **மறைமுக வரி வருமானம் 23.9 சதவீதம்** அதிகரித்து உள்ளது என்று நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- ஆண்டு பட்ஜெட் மதிப்பீட்டில் எதிர்பார்க்கப்பட்ட வரி வருவாயில் இதுவரை **68.7 சதவீதம்** எட்டப்பட்டுள்ளதாக நிதி அமைச்சகம் அறிக்கை தெரிவிக்கிறது.

## ரிசர்வ் வங்கி நிதிக் கொள்கை:

- **ரிசர்வ் வங்கி நிதிக் கொள்கை** ஆய்வில் வங்கி கடன்களுக்கான வட்டி விகிதங்கள் குறைக்கப்படவில்லை.
- இது சந்தை எதிர்பார்ப்பிற்கு மாறாக அமைந்தது.
- மேலும், நடப்பு நிதி ஆண்டில் பொருளாதார வளர்ச்சி **6.9 சதவீதமாகவும்**, அடுத்த நிதி ஆண்டில் இது **7.4 சதவீதமாகவும்** இருக்கும் என்று ரிசர்வ் வங்கி தெரிவித்தது.

## ஜிடிபி 5.7% ஆக குறையும் - நொமுரா ஆய்வில் தகவல்:

- இந்தியாவின் உள்நாட்டு மொத்த உற்பத்தி (ஜிடிபி) 2017 ஆண்டின் ஜனவரி முதல் மார்ச் மாதத்தில் **5.7 சதவீதமாக** சரியும் என்று **நொமுரா ஆய்வு** கூறியுள்ளது.

- 2017-ம் ஆண்டின் முதல் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி குறையும் என எதிர்பார்ப்பதாகவும் இந்த ஆய்வில் கூறியுள்ளது.
- இது சமீபத்திய அதிகபட்ச சரிவாக இருக்கும் என்று அறிக்கையை வெளியிட்டு **நொமுரா நிறுவனத்தின் மூத்த பொருளாதார அறிஞர் சோனல் வர்மா** குறிப்பிட்டுள்ளார்.
- நொமுரா வெளியிட்டுள்ள அறிக்கைபடி, **2016** ஜுலை-செப்டம்பர் காலாண்டில் ஜிடிபி வளர்ச்சி 7.3 சதவீதமாகவும், அக்டோபர்-டிசம்பர் காலாண்டில் வளர்ச்சி சற்றே சரிந்து **6 சதவீதமாகவும்** இருந்தது.
- இந்த நிலையில் 2017-ம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களின் **ஜிடிபி வளர்ச்சி 5.7 சதவீதமாக** சரியும் என்று குறிப்பிட்டுள்ளது.

## ஐஎம்எப் (சர்வதேச செலாவணி நிதியம்):

- **ஐஎம்எப்-ன் ஆசிய-பசிபிக் பிராந்தியத்தின் துணை இயக்குநரும் மற்றும் இந்தியாவின் தலைவருமான பால் ஏ கேஷின்** கூறியதாவது:
- இந்தியாவைப் பற்றிய வருடாந்திர அறிக்கையில் 2016-17-ம் ஆண்டு இந்தியாவின் வளர்ச்சி 6.6 சதவீதமாக இருக்கும் என ஐ.எம்.எப் குறிப்பிட்டுள்ளது.
- பணமதிப்பு நீக்கத்தால் குறுகிய கால பாதிப்புகள் மட்டுமே ஏற்படும்.
- அடுத்த சில வருடங்களில் **8 சதவீத வளர்ச்சியை** அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கை குறித்து கேஷின் கூறுகையில்.
- “கடந்த சில வருடங்களில் இந்தியாவின் செயல்பாட்டை வைத்து **ஐஎம்எப் வளர்ச்சி விகிதத்தை** கணக்கிட்டுள்ளது.
- ˙ நிதி கொள்கை வடிவமைப்பு போன்றவையும் சிறப்பாக இருக்கிறது என்று தெரிவித்தார்.

## அந்நிய நேரடி முதலீடு 18% உயர்வு:

- **அந்நிய நேரடி முதலீடு** (எப்டிஐ) கடந்த ஆண்டில் **18 சதவீதம்** அதிகரித்துள்ளது.
- 2015-ம் ஆண்டில் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட அந்நிய நேரடி முதலீடு 3,992 கோடி டாலராகும்.
- சேவைத் துறை, தொலைத் தொடர்பு, வர்த்தகம், கம்ப்யூட்டர் ஹார்டு வேர், சாப்ட்வேர் மற்றும் ஆட்டோமொபைல் துறைகளில் அதிக முதலீடுகள் வந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.
- பெருமளவிலான அந்நிய நேரடி முதலீடு **சிங்கப்பூர், மொரீஷியஸ், நெதர்லாந்து, ஜப்பான்** ஆகிய நாடுகளிலிருந்து வந்துள்ளது.

- அந்நிய நேரடி முதலீடுகள் அதிகரிப்பால் டாலருக்கு நிகரான ரூபாயின் மாற்று மதிப்பு ஸ்திரமாக நிலைத்திருக்க வழியேற்றப்பட்டுள்ளது.

## ஆதித்ய பிர்லா நூவோ வருவாய் 8% உயர்வு:

- பன்முக வர்த்தகத்தில் ஈடுபட்டு வரும் **ஆதித்ய பிர்லா நூவோ** நிறுவனத்தின் மூன்றாம் காலாண்டு வருவாய் 8 சதவீதம் அதிகரித்தது.
- கடந்த நிதி ஆண்டின் இதே கால அளவில் ஈட்டிய வருவாய் ஒப்பிடு இது **8.11 சதவீதம்** அதிகம் ஆகும்.
- ஐடியா தொலைத் தொடர்பு வர்த்தகத்தின் வாயிலாக கிடைத்த வருவாய் **4 சதவீதம்** சரிவடைந்து இருந்தது என்று ஆதித்ய பிர்லா நூவோ அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## பணவீக்கம் 5.25% அதிகரிப்பு:

- நாட்டின் பொதுப் பணவீக்கம் சென்ற ஜனவரி மாதத்தில் **5.25 சதவீதமாக** அதிகரித்தது.
- மத்திய அரசு வெளியிட்ட புள்ளி விவரத்தில் கடந்த ஆண்டு ஜனவரியில் (-) 1.07 சதவீதமாகவும், டிசம்பரில் 3.39 சதவீதமாகவும் காணப்பட்டது.

## புதிய 1,000 ரூபாய் நோட்டுகள் வெளியிடும் திட்டம் இல்லை:

- **புதிய 1,000 ரூபாய் நோட்டுகள் வெளியிடும்** திட்டம் எதுவும் மத்திய அரசிடம் இல்லை என்று பொருளாதார விவகாரங்கள் துறை செயலர் **சக்திகாந்த தாஸ்** தெரிவித்தார்.
- **பழைய ரூ. 500, ரூ. 1,000** நோட்டுகள் செல்லாது என்று பிரதமர் மோடி கடந்த ஆண்டு **நவம்பர் மாதம் 8-**ஆம் தேதி அறிவித்தார். **புதிய ரூ. 500, ரூ. 2,000** நோட்டுகள் புழக்கத்தில் விடப்பட்டதைத் தொடர்ந்து, அந்த கட்டுப்பாடுகள் படிப்படியாக விலக்கப்பட்டு வருகின்றன.
- பண விநியோகத்தை தினசரி அடிப்படையில் ரிசர்வ் வங்கி கண்காணித்து வருவதாகவும் **மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி** தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

## தேசிய சராசரியைவிட ஜார்க்கண்ட் 5% கூடுதல் வளர்ச்சியடையும்:

- இந்தியாவின் சராசரி பொருளாதார வளர்ச்சியை விட **4 முதல் 5 சதவீதம்** அதிக வளர்ச்சியை ஜார்க்கண்ட் மாநிலம் பெறும் என மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- மாநிலத் தலைநகர் **ராஞ்சியில்** நடைபெற்ற **உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில்** அருண் ஜேட்லி பேசியதாவது: மாநிலத்தின் தற்போதைய பொருளாதார வளர்ச்சி, **தேசிய சராசரியைவிட 1 சதவீதம்** அதிகமாக உள்ளது என்றார்.

## **"மூடி முதலீட்டாளர்கள் சேவை":**

- **"மூடி முதலீட்டாளர்கள் சேவை"** எனும் அமைப்பு, 2017 ஆம் ஆண்டில் **இந்தியா 7.1** பொருளாதார வளர்ச்சியுடன் வேகமான பொருளாதார வளர்ச்சியில் **ஜி-20 நாடுகளிலேயே முதலிடத்தில்** இருக்கும் என கணித்துள்ளது.

## **மாநிலங்களுக்கு இழப்பீடு வழங்கும் சட்டத்துக்கு ஒப்புதல்:**

- சரக்கு - சேவை வரிவிதிப்பை (ஜிஎஸ்டி) அமல்படுத்தும்போது மாநிலங்களுக்கு ஏதேனும் வருவாய் இழப்பு ஏற்பட்டால், அதற்கு உரிய இழப்பீடு வழங்க வகை செய்யும் சட்டத்துக்கு ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.
- இதனை முழுமையாக அமல்படுத்தத் தேவையான ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி (ஜி-ஜிஸ்டி), மத்திய ஜிஎஸ்டி (சி-ஜிஎஸ்டி) உள்ளிட்ட துணைச் சட்டங்களுக்கு அடுத்த கூட்டத்தில் ஒப்புதல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- **நாடு முழுவதும் ஒரே சீரான வரி விதிப்பை உறுதி செய்வதற்காக ஜிஎஸ்டி மசோதாவை** மத்திய அரசு கொண்டுவந்தது. எனினும், ஜிஎஸ்டி வரிவிதிப்பால் மாநிலங்களுக்கு ஏதேனும் வருவாய் இழப்பு ஏற்பட்டால், **முதல் 5 ஆண்டுகளுக்கு 100 சதவீத இழப்பீடு** வழங்க வகை செய்யும் மசோதாவுக்கு கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

மத்திய கலால்வரி தினம் : பிப்ரவரி - 24

# ஆளுமைகள்

## “ஆப்பிரிக்க ஒன்றிய கமிஷனின்”:

- “ஆப்பிரிக்க ஒன்றிய கமிஷனின்” தலைவராக **மௌஸ்ஸா ஃபக்கி மஹாமத்** நியமிக்கப்பட்டுள்ளார்.

## சி.பி.ஐ யின் புதிய இயக்குநராக அலோக் குமார்:

- சி.பி.ஐ யின் புதிய இயக்குநராக **அலோக் குமார்** நியமிக்கப்பட்டுள்ளார்.
- சி.பி.ஐ யின் இயக்குநர்கள்

| ஆண்டு | பெயர் |
|---|---|
| 2010 - 2012 | A.P. சிங் |
| 2012 - 2014 | ரஞ்சித் சின்ஹா |
| 2014 - 2016 | சுனில் சின்ஹா |
| 2016 - 2017 (3 Dec – 19 Jan) | ராகேஷ் அஸ்தானா |

## “Contemporary West Asia – Perspectives on Change and Continuity”:

- “Contemporary West Asia – Perspectives on Change and Continuity” எனும் புத்தகத்தின் ஆசிரியர் - **சுஜாதா ஐஸ்வர்யா.**

## கைலாஷ் சத்யார்த்தி:

- கைலாஷ் சத்யார்த்தி தனக்கு வழங்கப்பட்ட நோபல் பரிசின் அசல் பதக்கத்தை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியிடம் கடந்த 2015-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒப்படைத்து விட்டார். அது தற்போது குடியரசுத் தலைவர் மாளிகை அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கைலாஷ் சத்யார்த்தி பற்றி:

- இந்தியாவின் **கைலாஷ் சத்யார்த்தி** மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த **சிறுமி மலாலாவுக்கு 2014-ம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு** வழங்கப்பட்டுள்ளது. இவர் நோபல் பரிசு பெற்ற **7-வது இந்தியர்** ஆவார்.

- மேலும், **அமைதிக்கான நோபல் பரிசு பெறும் இரண்டாவது இந்தியர்**, அமைதிக்கான நோபல் பரிசைப் பெறும் இந்தியாவில் பிறந்த முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- **மத்தியப் பிரதேச மாநிலத்தைச் சார்ந்த கைலாஷ் சத்யார்த்தி 1990-ம் ஆண்டு "பச்பன் பச்சாவோ ஆந்தோலன்" (குழந்தையைப் பாதுகாப்போம் இயக்கம்) என்ற அமைப்பை நிறுவி,** நாட்டில் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்க பாடுபட்டு வருகிறார். இந்த அமைப்பு மூலம் இதுவரை இந்தியாவில் 80 ஆயிரம் குழந்தைகளை பல்வேறு சுரண்டல்களில் இருந்து மீட்டு, அவர்கள் கல்வி கற்க உதவியுள்ளார்.

## வேளாண்துறையில் சிறந்த பங்களிப்பு:

- வேளாண்துறையில் சிறந்த பங்களிப்பு மற்றும் இந்திய அளவிலும், சர்வதேச அளவிலும் கிராமப்புற மேம்பாட்டுக்கான உயரிய பங்களிப்பு ஆகியவற்றை அங்கீகரித்து சென்னையை சேர்ந்த **வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களுக்கு கனடா நாட்டின் கவர்னர் ஜெனரல் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.**
- எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்ளை கனடா நாட்டில் உள்ள பல்வேறு அரசு துறைகளோடு இணைந்து சதுப்புநிலங்களை மீட்டெடுத்தல், கடலோர மேலாண்மை மண்டல மேம்பாடு, வேளாண் துறை செயல்பாடுகளில் அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பணிகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**M.S. சுவாமிநாதன்:**

- பிறந்த தினம் : 7 Aug 1925 (கும்பகோணம்)

**விருது:**

- "வால்வோ" விருது
- மகசேசே விருது
- **இந்திய பசுமை புரட்சியின் தந்தை** என்று அழைக்கப்படுபவர்.

## "Veerappan, Chasing the Brigand":

- "Veerappan, Chasing the Brigand" என்ற புத்தகத்தின் ஆசிரியர் - **K. விஜயகுமார்.IPS**

## "ஹைட்டி" நாட்டின் அதிபர்:

- "ஹைட்டி" நாட்டின் அதிபராக **ஜோவ்னெல் மோய்ஸ்** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## "சோமாலியா" நாட்டின் அதிபர்:

- "சோமாலியா" நாட்டின் அதிபராக **முகமது அப்துல்லாகி முகமது** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## "Welcome to Nowhere":

- "Welcome to Nowhere"? எனும் புத்தகத்தின் ஆசிரியர் **- எலிசபத் லாய்ர்ட்**

## "அஸோசாம்":

- **"அஸோசாம்"** (Associated Chambers of Commerce of India (ASSOCHAM) அமைப்பின் தலைவராக **சந்தீப் ஜஜோடியா** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## சந்தீப் ஜஜோடியா:

- தொழில் துறை அமைப்பான அசோசேம் அமைப்பின் புதிய தலைவர்.
- இதற்கு முன்பு அசோசேம் அமைப்பின் மூத்த துணைத் தலைவர், தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளில் இருந்துள்ளார்.
- 1966-ல் பிறந்தவர்.
- மூன்நெட் குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்.
- ஓம் பிரகாஷ் ஜிண்டாலின் மருமகன்.
- தனது நிறுவனத்தை சுரங்கம், உலோகம், மின் உற்பத்தி துறைகளில் முக்கிய நிறுவனமாக வளர்க்க இலக்கு வைத்துள்ளார்.
- ஸ்பான்ஞ் இரும்பு உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.
- விளையாட்டு ஆர்வலர்.
- இந்திய குத்துச் சண்டை கழகத்தின் முதல் தலைவராகவும் இருந்தவர்.
- இந்திய குத்துச் சண்டை குழுவுக்கு அதிகாரபூர்வமான ஸ்பான்சராகவும் உள்ளார்.
- கிரிக்கெட்டுக்கு மாற்றாக விளையாட்டுகளை வளர்க்க மூன் நெட் ஸ்போர்ட்ஸ் அறக்கட்டளையை தொடங்கியுள்ளார்.
- டெல்லி பல்கலைக் கழகத்தில் வணிகவியல் பட்டம் பெற்றவர்.

**அஸோசாம்:**

- ஆரம்பிக்கப்பட்டது : 1920, 97 years
- தலைமையகம் : டெல்லி
- தலைவர் : சந்தீப் ஜஜாரியா

## இந்திய பட்டய கணக்காளர்கள் நிறுவனம்:

- இந்திய பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் தலைவராக **நீலேஷ் சிவ்ஜி விகாம்சே** நியமிக்கப்பட்டுள்ளார்.

**ICAI:**

- தொடங்கப்பட்டது - 1949 July 1
- தலைமையகம் - டெல்லி
- தலைவர் - நீலேஷ் சிவ்ஜி விகாம்சே

## எல்.ஐ.சி.யின் நிர்வாக இயக்குநராக ஹேமந்த் பார்கவா நியமனம்:

- மத்திய அரசுக்கு சொந்தமான எல்.ஐ.சி. நிறுவனத்தின் புதிய நிர்வாக இயக்குநராக **ஹேமந்த் பார்கவா** நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- தற்போது எல்.ஐ.சி. நிறுவனத்தின் தில்லி அலுவலகத்தில் மண்டல மேலாளராகப் பணியாற்றி வரும் **ஹேமந்த் பார்கவா** அந்த நிறுவனத்தின் புதிய நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அப்பதவியில், வரும் 2019-ஆம் ஆண்டு ஜூலை 31-ஆம் தேதி வரையில் நீடிப்பார். எல்.ஐ.சி. நிறுவனத்தின் உயர் நிர்வாகக் குழு, தலைவர் மற்றும் மூன்று நிர்வாக இயக்குநர்களை உள்ளடக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

**LIC:**

- ஆரம்பிக்கப்பட்டது - செப்டம்பர் 1, 1956
- தலைமையகம் - மும்பை
- தலைவர் - V.K. சர்மா

## 'செபி'யின் புதிய தலைவராக அஜய் தியாகி நியமனம்:

- இந்திய பங்குச் சந்தை ஒழுங்காற்று ஆணையத்தின் (செபி) புதிய தலைவராக **அஜய் தியாகி** நியமனம் செய்யப்பட்டுள்ளார். பிரதமர் தலைமையிலான அமைச்சரவை நியமனக்குழு இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளது.
- நிதி அமைச்சகத்தின் மூத்த அதிகாரியான **அஜய் தியாகி ஹிமாச்சல் பிரதேசத்தில் 1984-ஆம் ஆண்டு ஐ.ஏ.எஸ்.** பதவியில் சேர்ந்தார்.
- தற்போது, செபியின் தலைவராக இருந்து வரும் **யு.கே. சின்ஹாவின்** பதவிக் காலம் வரும் மார்ச் 1-ஆம் தேதியுடன் நிறைவடைய உள்ளது.

- இதையடுத்து, அஜய் தியாகி அந்தப் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளார். அவரது பதவிக்காலம் 5 ஆண்டுகள் என்று அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Sebi:**
- ஆரம்பிக்கப்பட்டது - 12 ஏப்ரல் 1992
- தலைமையகம் - மும்பை
- தலைவர் - அஜய் தியாகி

**செபியின் தலைவர்கள்**

| வரிசை | பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 8th | U.K. சின்ஹா | 2011 - 2017 |
| 7th | C.B. பாவே | 2008 - 2011 |
| 1st | Dr. S.A. தேவ் | 1988 - 1990 |

## உளவுத்துறை ஐ.ஜி.யாக டேவிட்சன் தேவாசீர்வாதம் நியமனம்:

- உளவுத்துறை ஐ.ஜி.யாக **டேவிட்சன் தேவாசீர்வாதம்** நியமிக்கப்பட்டுள்ளார்.
- தமிழக உளவுத்துறை ஐ.ஜி.யாக இருந்த **சத்தியமூர்த்தி** தற்போது விடுப்பில் இருக்கிறார்.
- இந்நிலையில், காவலர் நலப்பிரிவு ஐ.ஜி.யாக இருந்த எஸ்.டேவிட்சன் தேவாசீர்வாதம் உளவுப்பிரிவு ஐ.ஜி.யாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.
- இதற்கான உத்தரவை முதன்மை செயலாளர் **அபூர்வ வர்மா** வெளியிட்டார்.

- டேவிட்சன் 1995-ம் ஆண்டு ஐபிஎஸ் பயிற்சியை முடித்து பணியில் சேர்ந்தார்.
- இவர் க்யூ பிரிவு ஐ.ஜி, மேற்கு மண்டல ஐ.ஜி, காவல் துறை தலைமையிட நிர்வாகப் பிரிவு ஐ.ஜி.யாக பணியாற்றியிருக்கிறார்.
- ஏற்கெனவே உளவுத்துறை ஐ.ஜி.யாகவும் இருந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## என்எஸ்இ புதிய சிஇஓ சம்பளம் ரூ.8 கோடி:

- என்எஸ்இ புதிய தலைமைச் செயல் அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டிருக்கும் **விக்ரம் லிமயே** சம்பளம் ஆண்டுக்கு ரூ.8 கோடி என நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.
- அடுத்த ஐந்தாண்டுகளுக்கு நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

- நிதிச்சேவை துறையில் 25 ஆண்டுகளுக்கு மேலான அனுபவம் கொண்டவர். கடந்த 2005-ம் ஆண்டு முதல் **ஐடிஎப்சி** நிறுவனத்தில் பணிபுரிகிறார். **என்எஸ்இ 1992-ம்** ஆண்டு தொடங்கப்பட்டது. அப்போது முதல் நிறுவனத்தில் பணியாற்றியவர் **சித்ரா ராமகிருஷ்ணா.**
- அவர் ராஜினாமா செய்ததால், **என்எஸ்இ தலைவர் அசோக் சாவ்லா தலைமையிலான குழு விக்ரம் லிமயேவை** நியமித்தது.

## இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தலைவராக டிசிஏ ரங்கநாதன் நியமனம்:

- **இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் தலைவராக டிசிஏ ரங்கநாதன்** நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- இவர் **எக்ஸிம் வங்கியின்** முன்னாள் தலைவராக இருந்தவர்.
- அதே போல **பஞ்சாப் நேஷனல் வங்கியின் தலைவராக சுனில் மேத்தா** நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.இருவரும் மூன்று ஆண்டுகளுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொது மேலாளர் **கே. சுவாமிநாதன்**, அதே வங்கியில் செயல் இயக்குநராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்
- ஸ்டேட் பேங்க் ஆப் பிகானீர் அண்ட் ஜெய்ப்பூரின் முதன்மை பொதுமேலாளர் **அசோக் குமார் பிரதான்,** யுனைடெட் பேங்க் ஆப் இந்தியாவின் செயல் இயக்குநராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- அலகாபாத் வங்கியின் பொதுமேலாளர் **பி. ரமண மூர்த்தி**, சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாவின் செயல் இயக்குநராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## அமெரிக்க தேசிய பாதுகாப்பு:

- அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் **மைக்கேல் ஃபிளிப்** தனது பதவியிலிருந்து விலகுவதாக அறிவிப்பை வெளியிட்டார்.
- அந்நாட்டின் அதிபராக டிரம்ப் பொறுப்பேற்றதும், முன்னாள் மூத்த ராணுவ அதிகாரியான மைக்கேல் ஃபிளிப் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.
- புதிய அரசின் முதல் நியமனங்களில் ஒன்றாக அது அமைந்தது.

## நோபல் பரிசு பெற்ற பொருளாதார வல்லுநர் கென்னத் ஆரோ மறைவு:

- நோபல் பரிசு பெற்ற அமெரிக்க பொருளாதார மேதை **கென்னத் ஜே ஆரோ** தனது 95-ஆவது வயதில் காலமானார்.
- பொருளாதாரத்துக்காக மிக இளைய வயதில் நோபல் பரிசு பெற்றவர் என்ற பெருமை கொண்ட அவர், **சந்தை அபாயங்கள், புத்தாக்கம், சந்தை அடிப்படைக் கணிதவியல்** ஆகியவை குறித்து கோட்பாடுகளை உருவாக்கியுள்ளார்.

- சமநிலைக் கோட்பாடு குறித்த **கணிதவியலின் முன்னோடியாகத்** திகழ்ந்ததற்காக, **கென்னத் ஜே ஆரோவுக்கும்,** பிரிட்டன் பொருளாதார மேதை சர் ஜான் ஆர் ஹிக்ஸுக்கும் கடந்த 1772-ஆண்டின் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு சமமாக பிரித்து வழங்கப்பட்டது.

**கென்னத் ஆரோ:**

- பிறந்தது - 23 ஆகஸ்ட் 1921, அமெரிக்கா
- 1972 - பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு பெற்றார்
- கண்டுபிடிப்பு - பொது பொருளாதார சமநிலையை பற்றிய நோக்கம், பகுப்பாய்வு, உத்திகள்
- 2004 - அறிவியலுக்கான தேசிய பதக்கம் பெற்றார்

## இயக்குநர் மித்ரதாஸ் காலமானார்:

- **பழம் பெரும் திரைப்பட இயக்குநர் மித்ரதாஸ்** (103) உடல் நலக்குறைவால் சென்னையில் காலமானார்.
- மதுரையை பூர்வீகமாக கொண்ட மித்ரதாஸ், அமெரிக்கன் கல்லூரியில் பட்டப்படிப்பு படித்தவர்.
- 1942-ஆம் ஆண்டு முதல் 1945-ஆம் ஆண்டு வரை நடந்த **2-வது உலகப்போரின் போது பிரிட்டிஷ் ராணுவத்தில் பணியாற்றிய மித்ரதாஸ்,** அதன் பின் திரைத் துறையில் நுழைந்தார்.

## டாடா சன்ஸ் குழுமத்தின் தலைவராக என்.சந்திரசேகரன் இன்று பதவியேற்பு:

- டாடா சன்ஸ் குழுமத்தின் தலைவராக **என்.சந்திரசேகரன்** பதவியேற்கிறார்.
- முன்னதாக தலைவர் பொறுப்பிலிருந்து **சைரஸ் மிஸ்திரி** கடந்த ஆண்டு நீக்கப்பட்டார்.
- இதையடுத்து, டாடா கன்சல்டன்ஸி நிறுவனத்தில் தலைமைப் பொறுப்பில் இருந்த என்.சந்திரசேகரன் (54) புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இந்நிலையில், அவர் தலைவராக தற்போது பொறுப்பேற்கிறார்.
- **'சந்திரா' என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும்** அவர், 150 ஆண்டுகள் பாரம்பரியம் மிக்க டாடா குழுமத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் **பார்சி இனத்தைச் சாராத முதல் நபர்** என்பது குறிப்பிடத்தக்கது.

## துணை ஆட்சியர் ஆகிறார் பி.வி.சிந்து:

- **ஆந்திர மாநில அரசு** தனக்கு வழங்கிய துணை ஆட்சியர் வேலையை ஏற்க பிரபல பாட்மிண்டன் வீராங்கனையான **பி.வி. சிந்து** ஒப்புக்கொண்டுள்ளார்.

- **ரியோ ஒலிம்பிக் போட்டியில் பாட்மிண்டன்** பிரிவில் இந்திய வீராங்கனையான **பி.வி. சிந்து வெள்ளிப் பதக்கத்தை** வென்றார்.
- இதைத்தொடர்ந்து அவருக்கு ரூ. 3 கோடி பரிசளித்த **ஆந்திர அரசு குரூப்-1 பிரிவில்** அவர் விரும்பும் வேலையை வழங்கத் தயாராக இருப்பதாக அறிவித்தது.
- சிந்து தற்போது **பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தில்** வேலை பார்த்து வருகிறார்.

## ஹாங்காங்கில் நடைபெற்ற ஆசிய ஸ்குவாஷ் சம்மேளன:

- ஹாங்காங்கில் நடைபெற்ற ஆசிய ஸ்குவாஷ் சம்மேளன (ஏ.எஸ்.எப்) **37-ஆவது ஆண்டு** பொதுக்குழு கூட்டத்தின்போது அதன் துணைத் தலைவராக **தேவேந்திரநாத் சாரங்கி** தேர்வு செய்யப்பட்டார். **சாரங்கி**, தற்போது இந்திய ஸ்குவாஷ் ராக்கெட் சம்மேளன தலைவராக உள்ளார். ஏ.எஸ்.எப். துணைத் தலைவர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட **2-ஆவது இந்தியர் சாரங்கி** ஆவார்.

**சர்வதேச தாய்மொழி தினம் - பிப்ரவரி 21**

# விருதுகள் மற்றும் மரியாதைகள்

## மின் ஆளுகைக்கான சிறந்த மாநிலங்களுக்கான விருது:

- மின் ஆளுகைக்கான சிறந்த மாநிலங்களுக்கான விருது 2017 பெற்றுள்ள மாநிலங்கள் - **ராஜஸ்தான் மற்றும் தெலுங்கானா.**

## பி.சி.ராய் தேசிய விருது:

- இந்திய மருத்துவ கவுன்சிலால் வழங்கப்படும் 2016 ஆம் ஆண்டிற்கான **டாக்டர் பி.சி.ராய் தேசிய விருது P. ரகுராம்** என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**பி.சி.ராய் விருது:**

- இந்திய மருத்துவ கழகத்தால் **1976-ல் பிதான் சந்திர ராய்** நினைவாக நிறுவப்பட்ட விருதாகும்.

**2014-ல் பி.சி.ராய் விருது பெற்றவர்கள்:**

- எச்.என். ரவீந்திரா
- எஸ். கிருஷ்ணா
- பி.எஸ். அருணகுமாரி
- தமயந்தி
- எச்.ஜி. சிவானந்த்

## உலகின் சிறந்த இசை:

- உலகின் சிறந்த இசை ஆல்பத்திற்கான கிராமி விருது 2017 **"Sing Me Home"** என்ற ஆல்பத்திற்காக, இந்திய - அமெரிக்க இசையமைப்பாளர் **சந்தீப் தாஸ்** அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

## இந்திய வம்சாவளி நடிகர் தேவ் படேலுக்கு பா஼ப்டா விருது:

- இந்திய வம்சாவளி ஹாலிவுட் நடிகர் **தேவ் படேலுக்கு** பிரிட்டனின் மிக உயர்ந்த திரைப்பட விருதான **பா஼ப்டா விருது** வழங்கப்பட்டது. **'லயன்'** என்ற ஹாலிவுட் திரைப்படத்தில் நடித்ததற்காக **சிறந்த துணை நடிகர் விருது தேவ் படேலுக்கு** வழங்கப்பட்டது.
- **இந்தியருக்கு விருது:** இந்நிலையில், 'லயன்' என்ற ஹாலிவுட் திரைப்படத்தில் நடித்ததற்காக சிறந்த துணை நடிகருக்கான பா஼ப்டா விருது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தேவ் படேலுக்கு வழங்கப்பட்டது. இவர், ஏற்கெனவே **ஆஸ்கர் விருது பெற்ற 'ஸ்லம்டாக் மில்லியனர்'** என்ற ஹாலிவுட் திரைப்படத்தில் கதாநாயகனாக நடித்தது குறிப்பிடத்தக்கது.

**தேவ் படேல்:**

- இங்கிலாந்து நாட்டு திரைப்பட நடிகர் ஆவர்.
- இவர் இந்திய நாட்டின் சேர்ந்த **குஜராத்தி இனத்தை** சேர்ந்தவர்.
- 2008 : சிலம் டாக் மில்லியனர் என்ற படிக்தில் நடிக்தவர்.

## 7 வயது மும்பை சிறுவனுக்கு கேண்டிடேட் மாஸ்டர் பட்டம்:

- மும்பையைச் சேர்ந்த **குஷ் பகத்** (7) என்ற சிறுவனுக்கு **'கேண்டிடேட் மாஸ்டர்'** பட்டம் வழங்கி **உலக செஸ் சம்மேளனம்** கௌரவித்துள்ளது. இதுகுறித்து, உலக செஸ் சம்மேளனமான 'ஃபிடே' வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது:
- '7 வயது உள்பட்டோருக்கான பிரிவில் மகாராஷ்டிர மாநில சாம்பியன்ஷிப்-2016' போட்டியில் வெற்றி வாகை சூடிய பகத், ரஷியாவின் சோச்சியில் நடைபெற்ற 7 வயதுக்கு உள்பட்டோருக்கான உலக பள்ளிகள் சாம்பியன்ஷிப் போட்டியில் பட்டம் வென்றார்.
- **ஐக்கிய அரபு அமீரகத்தில்** நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில் **3 தங்கப் பதக்கங்கள் வென்றார்.** அந்தப் போட்டியில் அவரது சிறப்பான செயல்பாட்டுக்காக அவருக்கு கேண்டிடேட் மாஸ்டர் பட்டம் வழங்கி **ஃபிடே கௌரவிக்கிறது** என்று கூறப்பட்டுள்ளது.

## ஹாக்கி வீரர் சந்தீப்புக்கு கௌரவ டாக்டர் பட்டம்:

- **இந்திய ஹாக்கி வீரர் சந்தீப் சிங்குக்கு** பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த தேஷ் பகத் பல்கலைக்கழகம் கௌரவ **டாக்டர் பட்டம்** வழங்கியது.
- இந்திய ஹாக்கி அணியின் சிறந்த டிராக்ஃப்ளிக்கராக இருந்த சந்தீப் சிங், கடந்த 2012 லண்டன் ஒலிம்பிக் போட்டிக்குப் பிறகு காயம் காரணமாக, இந்திய அணியில் வாய்ப்பளிக்கப்படுவதும், பின்பு பறிக்கப்படுவதுமாக இருந்து வருகிறார்.
- ஹாக்கி முன்னாள் கேப்டன் **திலீப் திர்கிக்குப்** பிறகு கௌரவ டாக்டர் பட்டம் பெறும் **2-ஆவது இந்திய ஹாக்கி வீரர்** என்ற பெருமையை **சந்தீப்** பெற்றுள்ளார்.

**சந்தீப் சிங்:**

- 2010 - அர்ஜீனா விருது.
- ஓர் இந்திய தொழில் முறை வளைதடி பந்தாட்ட வீரர் ஆவார்.
- இவர் இந்திய ஆடவர் தேசிய வளைதடி பந்தாட்ட குழுவின் முன்னாள் தலைவரும் ஆவார்.
- ஹரியானா காவல் துறையில் இணை கண்காணிப்பாளராக உள்ளார்.
- இலண்டனில் நடந்த 2012 கோடை கால ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கு தேர்வு பெற்ற முன்னணி ஆடவர் வளைதடி பந்தாட்ட வீரர் ஆவார்.

## தமிழ் எழுத்தாளர் வண்ணதாசன் உள்பட 24 பேருக்கு 'சாகித்ய அகாதெமி' விருது:

- 2016-ஆம் ஆண்டுக்கான **சாகித்ய அகாதெமி விருதுகள்** தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் **வண்ணதாசன்** உள்பட பல்வேறு மொழிகளைச் சேர்ந்த 24 எழுத்தாளர்களுக்கு வழங்கப்பட்டன.
- சாகித்ய அகாதெமி அமைப்பின் சார்பில் ஆண்டுதோறும் பல்வேறு மொழிகளில் வெளியாகும் சிறந்த இலக்கியப் படைப்புகள் தேர்வு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.
- இந்நிலையில், **தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், பெங்காலி, ஹிந்தி, குஜராத்தி, மைதிலி** உள்பட 24 இந்திய மொழிகளில் வெளியான சிறுகதை, கவிதைகள், நாவல் கட்டுரை

திறனாய்வு அல்லது விமர்சனம் ஆகிய படைப்புகளில் சிறந்தவை தேர்வு செய்யப்பட்டு 2016-ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமி விருதுகள் கடந்த மாதம் அறிவிக்கப்பட்டன.

- வண்ணதாசனின் **'ஒரு சிறு இசை'** என்ற சிறுகதைத் தொகுப்பு நூலும் விருதுக்குத் தேர்வானது.
- இதையொட்டி, தில்லியில் சாகித்ய அகாதெமி விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.
- அகாதெமி தலைவர் **விஷ்வநாத் பிரசாத் திவாரி** தலைமை வகித்து எழுத்தாளர்கள் **வண்ணதாசன் (தமிழ்), பிரபா வர்மா (மலையாளம்), பபினேனி சிவசங்கர் (தெலுங்கு), நஸீரா சர்மா (ஹிந்தி)** உள்பட 24 மொழிகளைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்கு **சாகித்ய அகாதெமி** விருதுகளை வழங்கினார்.
- படைப்புகளின் எழுத்தாளர்களுக்கு தலா ரூ.1 லட்சம் பரிசுத் தொகையும், பாராட்டுப் பட்டயமும் வழங்கப்பட்டது. **'சீரியன் மென்' என்ற மனு ஜோசஃப்** எழுதிய ஆங்கில நாவலை தமிழில் **'பொறுப்புமிக்க மனிதர்கள்'** என்ற பெயரில் மொழியாக்கம் செய்ததற்காக எழுத்தாளர் **பூர்ண சந்திரன்** தேர்வாகியுள்ளார்.

**வண்ணதாசன் யார்?:**

- திருநெல்வேலியைச் சேர்ந்த எழுத்தாளர் வண்ணதாசனின் இயற்பெயர் சி. கல்யாண சுந்தரம் (71).
- கல்யாண்ஜி என்ற பெயரில் கவிதைகளும், வண்ணதாசன் என்ற பெயரில் சிறுகதைகளும் எழுதி வருபவர்.
- மணிப்பூரி, மராத்தி, டோக்ரி, மைதிலி, ஒடியா, ராஜஸ்தானி, தமிழ் எழுத்தாளர்கள் 2016-ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமி விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டனர்.
- அதில் வண்ணதாசனும் ஒருவர்.
- இவர் எழுதிய 15 சிறுகதைகள் அடங்கிய 'ஒரு சிறு இசை' எனும் தொகுப்பு நூல் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டிருந்தது.
- இவரது தந்தையும், திறனாய்வாளருமான மறைந்த தி.க.சிவ சங்கரன் 2000 இல் சாகித்ய அகாதெமி விருதைப் பெற்றிருந்தார்.
- இந்நிலையில், 16 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது அவரது மகனான வண்ணதாசன் இந்த விருதைப் பெற்றுள்ளார்.

## சாகித்ய அகாதெமி விருது

| ஆண்டு | நூல் | பெயர் |
|---|---|---|
| 2012 | தோல் | டி. செல்வராஜ் |
| 2013 | கோற்கை | ஜோடி குரூஸ் |
| 2014 | அஞ்ஞாடி | பூ மணி |
| 2015 | இலக்கிய சுவடுகள் | ஆ. மாதவன் |

**விருதுப் பட்டியல்:**

- சிறந்த படம் - **மூன்லைட்**
- சிறந்த நடிகர் - **கேஸி அ.ஃலீக்** (மான்செஸ்டர் பை தி ஸீ)
- சிறந்த நடிகை - **எம்மா ஸ்டோன்** (லா லா லேண்ட்)
- சிறந்த இயக்குநர் - **டெமின் சேஸிலில்** (லா லா லேண்ட்)
- சிறந்த அசல் திரைக்கதை - **கென்னத் லானெர்கன்** (மான்செஸ்டர் பை தி ஸீ)
- சிறந்த தழுவல் திரைக்கதை - **பெர்ரி ஜென்கின்ஸ் மற்றும் தாரல் மெக்கிரனி** (மூன்லைட்)
- சிறந்த பாடல் - **சிட்டி ஆ.ஃப் ஸ்டார்ஸ்** (லா லா லேண்ட்)
- சிறந்த பின்னணி இசை - **ஜஸ்டின் ஹார்விட்ஸ்** (லா லா லேண்ட்)
- சிறந்த ஒளிப்பதிவு - **லீனஸ் சான்ட்கிரீன்** (லா லா லேண்ட்)
- சிறந்த குறும்படம் - **சிங்** (லை.ஃப் ஆக்ஷன் பிரிவு)
- சிறந்த ஆவணக் குறும்படம் - **தி வைட் ஹெல்மெட்ஸ்**
- சிறந்த படத்தொகுப்பு - **ஜான் கில்பெர்ட்** (ஹக்சா ரிட்ஜ்)
- சிறந்த விஷுவல் எ.ஃபெக்ட் - **தி ஜங்கிள் புக்**
- சிறந்த காட்சி வடிவமைப்பு - **டேவிட் வாஸ்கோ, சான்டிரெனால்ட்ஸ்** (லா லா லேண்ட்)
- சிறந்த அனிமேஷன் திரைப்படம் - **சூடோபியா**
- சிறந்த அனிமேஷன் குறும்படம் - **பைபர்**
- சிறந்த அன்னிய மொழி திரைப்படம் - **தி சேல்ஸ்மேன்** (ஈரானிய படம்)
- சிறந்த துணை நடிகை - **வியோலா டேவிஸ்** (.ஃபென்சஸ்)
- சிறந்த துணை நடிகர் - **மஹெர்சலா அலி** (மூன் லைட்)
- சிறந்த ஒலிக்கலவை - **கெவின் ஓ 'கோனல், ஆன்டி ரைட், ராபர்ட் மெக்கன்சி, பீட்டர் கிரேஸ்** (ஹெக்சா ரிட்ஜ்)
- சிறந்த ஆவணப்படம் - **ஓ ஜோ மேட் இன் அமெரிக்கா**
- சிறந்த ஆடை வடிவமைப்பு - **பென்டாஸ்டிக் பீஸ்ட்ஸ் அன்ட் வேர் டு.ஃபைன்ட் தெம்**
- சிறந்த ஒப்பனை, சிகையலங்காரம் - **சூசைட் ஸ்குவாட்**

**ஜாக்கி சானுக்கு சிறப்பு விருது:**

- பிரபல ஹாலிவுட் நடிகர் **ஜாக்கி சானுக்கு சிறப்பு ஆஸ்கர் விருது** அளிக்கப்பட்டது.
- ஹாலிவுட் திரைப்படத்துறைக்கு அவர் ஆற்றிய சிறப்பான பங்களிப்பைப் பாராட்டும் வகையில் இந்த விருது அளிக்கப்பட்டது.
- 1960-ஆம் ஆண்டுகளில் இருந்து நடித்து வரும் **ஜாக்கி சான்**, 150-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.
- 62 வயதாகும் அவர், நடிகர் மட்டுமல்ல, இயக்குநர், தயாரிப்பாளர், சண்டைக் காட்சி வடிவமைப்பாளர், பாடகர் என பல்வேறு தளங்களில் பணியாற்றி வருகிறார்.

## விருது பெற்ற முதல் முஸ்லிம் நடிகர்:

- இந்த ஆண்டு சிறந்த துணை நடிகருக்கான விருது **மூன்லைட்** படத்தில் போதைப்பொருள் வியாபாரியாக நடித்த **மஹர்செலா** அலிக்கு வழங்கப்பட்டது.
- இதன் மூலம் **ஆஸ்கர் விருது பெற்ற முதல் முஸ்லிம் நடிகர்** என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.
- கிறிஸ்தவராகப் பிறந்த மஹர்செலா அலி, பள்ளி இறுதி வகுப்பின்போது முஸ்லிமாக மதம் மாறினார்.

## லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 89-வது ஆஸ்கர் விருது விழா:

- விழாவில் தனது தாயார் அனிதாவுடன் பங்கேற்ற இந்திய வம்சாளி நடிகர் **தேவ் படேல்.**
- ஆஸ்கர் விருது விழாவில் பங்கேற்ற இந்திய நடிகை **பிரியங்கா சோப்ரா ,**விருந்தில் பங்கேற்ற இந்திய நடிகை **பிரீடா பின்டோ.**
- விழாவில் பங்கேற்ற **இந்திய சிறுவன் சன்னி** பவார். இவர் தி லயன் என்ற ஹாலிவுட் படத்தில் நடித்துள்ளார்.

**உலக சமூக நீதி தினம் - பிப்ரவரி 20**

# இராணுவ நிகழ்வுகள்

## இராணுவத்தினர் மற்றும் மருத்துவத் துறையினர்:

- ராணுவத்தினர் மற்றும் மருத்துவத் துறையினரின் உபயோகத்திற்கான பிரத்யேக திறனூட்டப்பட்ட **பருத்தி துணி ரகத்தினாலான பருத்தி ஆடையை** காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழக பேராசிரியர் **சேதுராமன்** மற்றும் ஆராய்ச்சி **மாணவி தி.சூர்யபிரபா** இணைந்து கண்டுபிடித்துள்ளனர்.

### பருத்தி ஆடையின சிறப்பு :

- பருத்தி ஆடைகளுக்கு பல்வேறு சிறப்பு அம்சங்கள் இருந்தாலும், நோய்த்தொற்று தடுப்பின்மை, விரைவாக நீர் உறிஞ்சும் தன்மை உள்ளிட்ட சில குறைபாடுகள் காரணமாக, ராணுவ வீரர்களும், மருத்துவத் துறையினரும் பயன்படுத்த முடியாத நிலை இருந்து வருகிறது.
- இதற்குத் தீர்வு காணும் வகையில், இவர்களது கண்டுபிடிப்பின் படி, **தாமிர அசிடேட் என்ற வேதிப் பொருளில் பருத்தி ஆடைகளை நனைத்து அஸ்கார்பிக் அமிலம் மூலமாக பருத்தியின் புறப்பரப்பில் தாமிரத்தைப் படியவைத்து அதன் மீது ஸ்டியரிக் அமிலம் பூசப்படுகிறது.** இதனால், அதிக நீர் விலக்கும் தன்மை, பாக்டீரியாக்களை கொல்லும் தன்மை, ரத்தக் கறை படியாத தன்மை மற்றும் நீர், எண்ணெய் போன்ற கலவையினை பிரிக்கும் தன்மையுடன் மாற்றியமைக்கப்பட்ட பருத்தி துணிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

## "AMAN 2017":

- "AMAN 2017" என்ற பெயரில் பன்னாட்டு கடற்படை பயிற்சியை நடத்திய நாடு - **பாகிஸ்தான்.**

## சூரிய ஆற்றல்:

- சூரிய ஆற்றல் பயன்பாட்டின் மூலம் முற்றிலும் பசுமை மயமாக்கப்பட்டுள்ள இந்திய கப்பல் படையின் கண்காணிப்பு கப்பல் - **ஐ.என்.எஸ். சர்வேஜ்ஷா**

## அதிநவீன இடைமறி ஏவுகணை: இந்தியா வெற்றிகரமாக சோதனை:

- எதிரிநாட்டு ஏவுகணையை நடுவானில் இடை மறித்து தாக்கி அழிக்கும் அதி நவீன ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக சோதித்துள்ளது.
- அந்த ஏவுகணையை விஞ்ஞானிகள் சோதித்து பார்த்தனர். **ஒடிசா மாநிலம், அப்துல்கலாம் தீவில்** அந்த ஏவுகணை சோதனை நடத்தப்பட்டது.

## ரிலையன்ஸ் டி ஃபன்ஸ்-அமெரிக்க கடற்படை வர்த்தக உடன்பாடு:

- போர்க் கப்பல்களில் பழுது நீக்கித் தருவது தொடர்பாக **ரிலையன்ஸ் டி ஃபன்ஸ் & என்ஜினியரிங் மற்றும் அமெரிக்க கடற்படை** இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து ரிலையன்ஸ் டி ஃபன்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:
- அமெரிக்க போர்க் கப்பல்களை பழுது பார்ப்பது தொடர்பாக அமெரிக்க கடற்படை மற்றும் ரிலையன்ஸ் டி ஃபன்ஸ் இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.
- **குஜராத்தின் பிபவாவில்** உள்ள ரிலையன்ஸ் கப்பல் கட்டும் தளத்தில் அமெரிக்க கப்பல்களை பழுது நீக்குவது மற்றும் மறுவடிவமைப்பு செய்யும் பயணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

## ஐஎன்எஸ் விராட் போர்க்கப்பல்:

- இந்திய கடற்படையில் **இரண்டாவது விமானம்தாங்கி** போர்க்கப்பலான **ஐஎன்எஸ் விராட்** வரும் மார்ச் 6-ஆம் தேதி ஓய்வு பெற உள்ளதாக துணைத் தளபதி **கிரீஷ் லூத்ரா** தெரிவித்துள்ளார்.
- **ஐஎன்எஸ் விராட்** கப்பல் **இந்திய கடற்படையில் 30 ஆண்டு காலம்** சேவையாற்றியுள்ளது.
- அதற்கு முன் **அது பிரிட்டன் கடற்படையில் 27 ஆண்டுகள்** இருந்தது.
- இந்திய கடற்படையில் இருந்து **ஐஎன்எஸ் விக்ராந்த்** ஏற்கெனவே ஓய்வு பெற்றுவிட்டது என்றார் அவர்.

- பிரிட்டன் கடற்படையில் **'ஹெச்எம்எஸ்ஹெர்மிஸ்'** என்ற பெயரில் இயங்கி வந்த ஐஎன்எஸ் விராட் கப்பல் அங்கு **1959-**ஆம் ஆண்டு முதல் சேவையாற்றியது.
- அக்கப்பலை **1980-ஆம்** ஆண்டுகளில் இந்தியா விலைக்கு வாங்கியது.
- **1987-**இல் நமது கடற்படையில் அது இணைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.
- **இந்திய கடற்படை வரலாற்றிலேயே நீண்ட காலம் சேவையாற்றிய கப்பல் ஐஎன்எஸ் விராட்** ஆகும்.
- மொத்தம் 58 ஆண்டுகள் கடற்படையில் பணியாற்றி இருக்கும் இந்த கப்பல் வரும் மார்ச் 6-ம் தேதி முறைப்படி ஓய்வுப் பெறுகிறது.

## சென்னை துறைமுகம் வந்தது வங்கதேச கடலோரக் காவல்படை கப்பல்:

- **வங்கதேசத்தின் கடலோரக் காவல்படை கப்பலான 'தாஜுதீன்' சென்னை** துறைமுகம் வந்தடைந்தது.
- இந்தியக் கடலோரக் காவல்படை **டி.ஐ.ஜி. சௌகான்** தலைமையிலான இந்தியக் கடலோரக் காவல்படை அதிகாரிகள் இந்த கப்பலை வரவேற்றனர்.
- இந்தியக் கடலோரக் காவல்படையின் ரோந்துக் கப்பலான '**பகீரதர்**' இங்குள்ள சிறப்பு தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றனர்.
- இரு கப்பல்களையும் இரு நாட்டு வீரர்களும் பார்வையிடுகின்றனர்.

## ஆயுத இறக்குமதியில் இந்தியா முதலிடம்:

- சர்வதேச அளவில் கடந்த 5 ஆண்டுகளில் ஆயுத விற்பனை முன் எப்போதும் இல்லாத வகையில் அதிகரித்திருப்பதாகவும், **ஆயுத இறக்குமதியில் இந்தியா தொடர்ந்து முதலிடத்தில்** இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.
- இதுதொடர்பாக **ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி** நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த 2012 முதல் 2016 வரையிலான காலத்தில் ஆயுத இறக்குமதியில் **இந்தியா** தொடர்ந்து **முதலிடத்தை** தக்க வைத்துக் கொண்டது.
- அதாவது சர்வதேச அளவிலான ஒட்டு மொத்த ஆயுத இறக்குமதியில் இந்தியாவின் பங்கு மட்டும் **13 சதவீதமாக** இருந்தது.
- இது 2007 முதல் 2011 வரையிலான காலத்தில் **9.7 சதவீதமாக** இருந்தது.
- அப்போதும் **இந்தியா தான் இறக்குமதியில் முதலிடத்தில்** இருந்தது.
- கடந்த 5 ஆண்டுகளில் இந்தியாவுக்கு அடுத்தபடியாக, **சவுதி அரேபியா (8.2%), ஐக்கிய அரபு அமீரகம், சீனா மற்றும் அல்ஜீரியா** ஆகியவை அடுத்தடுத்த இடங்களைப் பிடித்தன.

## அமெரிக்க போர்க்கப்பல்கள் ரோந்து:

- **தென்சீனக்கடலில் அமெரிக்காவின்** 2 போர்க்கப்பல்கள் புதிதாக ரோந்து பணியில் இணைந்துள்ளது.
- **தென் சீனக் கடல்** பகுதி முழுவதையும் **சீனா** சொந்தம் கொண்டாடி வருகிறது.
- இதன் காரணமாக **சீனாவுக்கும் வியட்நாம், மலேசியா உள்ளிட்ட தென்கிழக்கு** ஆசிய நாடுகளுக்கும் இடையே மோதல் நீடிக்கிறது.
- **தென் சீனக் கடலில்** செயற்கை தீவுகளை உருவாக்கியுள்ள **சீன ராணுவம்** அங்கு **விமானப் படை தளத்தையும்** அமைத்துள்ளது.
- மேலும் அந்த கடல் பகுதியில் கடந்த 2015 முதல் அமெரிக்க கப்பல்கள் தொடர்ந்து ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றன.
- இந்நிலையில் புதிதாக 2 போர்க்கப்பல்களைத் தென் சீனக் கடல் பகுதிக்கு அமெரிக்க கடற்படை அனுப்பியுள்ளது.
- **யு.எஸ்.எஸ்.கார்ல் வின்சன்** என்ற விமானம் தாங்கி போர்க்கப்பல் மற்றும் **யுஎஸ்எஸ் வெய்னி இ-மேயர்** என்ற போர்க்கப்பல் ரோந்து பணியில் இணைந்துள்ளன.

## ICGS AYUS:

- **ICGS AYUSH** எனப்படுவது பிப்ரவரி 2017ல், புதிதாக **இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டுள்ள கடலோர பாதுகாப்பு கப்பல்** ஆகும். இது கொச்சி கடற்பகுதியில் நாட்டிற்கு அர்பணிக்கப்பட்டது.

## “கிரிப்பன் வகை போர் விமானங்கள்”:

- இந்தியாவிற்கு “**கிரிப்பன் வகை போர் விமானங்கள்**” இறக்குமதி செய்யவுள்ள நாடு - **ஸ்வீடன்**

## ஆடம் வோக்ஸ்:

- பிப்ரவரி 2017ல், **ஆடம் வோக்ஸ்** என்ற ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

## Stockholm International Peace Research Institute (SIPRI):

- Stockholm International Peace Research Institute (SIPRI) அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, 2012-2016 ஆண்டுகளில் உலகளவில் ஆயுத இறக்குமதி செய்த நாடுகளில் **இந்தியா முதலிடத்திலுள்ளது.** இந்தியாவிற்கு அடுத்ததாக, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சீனா மற்றும் அல்ஜீரியா ஆகிய நாடுகள் உள்ளன.

## இந்தியா - இஸ்ரேல்:

- இஸ்ரேல் அதிபர் **ரூவென் ரிவ்லின்** கடந்த நவம்பர் மாதம் அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்தார். அப்போது, இரு நாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்புத் துறை ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவது தொடர்பாக **பிரதமர் மோடியும்**, ரிவ்லினும் விவாதித்தனர்.
- அதன் அடிப்படையில் தொலைதூரத்தில் உள்ள இலக்குகளை துல்லியமாகத் தாக்க வல்ல **நவீனரக ஏவுகணையை இரு நாடுகளும் இணைந்து தயாரிப்பது தொடர்பாக ஒப்பந்தம்** மேற்கொள்ளப்பட்டது.
- ரூ. 17,000 கோடி மதிப்பீட்டிலான அந்தத் திட்டத்தின்கீழ் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பும் (டிஆர்டிஓ), இஸ்ரேல் ராணுவ விமானத் தயாரிப்பு நிறுவனமும் இணைந்து ஏவுகணையை வடிவமைக்க உள்ளன.
- சுமார் **70 கிலோ மீட்டர்** தொலைவிலுள்ள இலக்குகளை துல்லியமாகத் தாக்கும் வகையில் அவை மேம்படுத்தப்பட உள்ளன.

## TROPEX 2017:

- **TROPEX 2017** - எனப்படுவது **இந்திய கடற்படையினால்** ஆண்டுதோறும் நடைபெறும், ஒரு மாத **இராணுவப் பயிற்சியாகும்.**

## ஈரான் கடற்படைப் போர்ப் பயிற்சியில் ஏவுகணைகள் பரிசோதனை:

- ஈரான் தனது கடற்படைப் போர்ப் பயிற்சியின் போது நவீன ஏவுகணைகளை ஏவி பரிசோதித்ததாக தெரிவித்துள்ளன.
- இதுகுறித்து 'ஃபர்ஸ்' செய்தி நிறுவனம் தெரிவித்ததாவது: **'விலாயத் 95'** என்ற பெயரில் தெற்குக் கடல் பகுதியில் நிகழ்த்தப்பட்ட கடற்படைப் போர்ப் பயிற்சியின் போது **'நாஸர்'** என்ற **'குரூஸ்'** வகை ஏவுகணை வெற்றிகரமாகப் பரிசோதித்துப் பார்க்கப்பட்டதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் **ஹுசேன் டெஹ்கான்** கூறினார் என்று அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்தது.
- மேலும், **'தஸ்னீம்'** செய்தி நிறுவனம் கூறுகையில், **'லேசர்' கதிர்களின் வழிகாட்டுதலுடன் இலக்குகளைத் தாக்கி அழிக்கும்** மற்றொரு வகை ஏவுகணையும் கடற்படைப் போர் பயிற்சியின் போது பரிசோதிக்கப்பட்டது.

- ரஷியாவின் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணையை அடிப்படையாகக் கொண்டு அந்த ஏவுகணை உருவாக்கப்பட்டதாக 2012-ஆம் ஆண்டே செய்திகள் வெளியானது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க கடற்படை அமைச்சர்:

- அமெரிக்க கடற்படை அமைச்சர் பொறுப்புக்குப் பரிந்துரைக்கப்பட்ட **பிலிப்பில்டென்**, தனிப்பட்ட காரணங்களுக்காக அந்தப் பதவியை ஏற்க விரும்பவில்லை என்று கூறியுள்ளார்.
- அமெரிக்க பாதுகாப்புத் துறை பொறுப்புக்கு அமைச்சர் நியமிக்கப்படும் அதே வேளையில், அவர் கீழ் ராணுவம், கடற்படை, விமானப் படை ஆகிய முப்படைகளுக்கும் தனித்தனி அமைச்சர்கள் நியமிக்கப்படும் வழக்கம் அந்த நாட்டில் உள்ளது.
- அந்தந்தப் படையின் வீரர்கள் நியமனம், ஊதிய நிர்ணயம் முதல் அவர்கள் சார்ந்துள்ள படையை பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது வரை அனைத்தையும் அந்த அமைச்சர் தான் நேரடியாகத் கட்டுப்படுத்தி வருகிறார்.

**உலக வானொலி தினம் - பிப்ரவரி 13**

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## "The Man who could never say no":

- **"The Man who could never say no"** எனும் புத்தகத்தின் ஆசிரியர் - வரலாற்றாய்வாளர் **எஸ்.முத்தையா.**

## செவ்வாய் கிரகத்தில்:

- செவ்வாய் கிரகத்தில் இரண்டு பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னதாகவே எரிமலை வெடிப்பு நடந்துள்ளதாக **நாசா விண்வெளி** ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

## "டாங்ஃபெங் 5C":

- "டாங்ஃபெங் 5C" எனப்படும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை வெற்றிகரமாக சோதித்துள்ள நாடு - **சீனா**

## தட்டம்மை- ருபெல்லா தடுப்பூசி பிரச்சாரம்:

- நாடெங்கிலுமுள்ள 41 கோடி குழந்தைகளுக்கு செலுத்தவிருக்கும், **தட்டம்மை- ருபெல்லா** தடுப்பூசி பிரச்சாரம் கர்நாடக மாநிலம் பெங்களூரு நகரில் துவக்கி வைக்கப்பட்டது.

## அறிவியல் தொழில்நுட்பம்:

- **அறிவியல் தொழில்நுட்பம்**, கண்டுபிடிப்பு ஆகிய துறைகளில் **பிரான்ஸ் நாட்டுடனும்**, **சுகாதாரம் மற்றும் மருத்துவத் துறைகளில் வியட்நாம்** நாட்டுடனும், இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் ஒப்பந்தத்திற்கான அனுமதியை மத்திய கேபினட் பிப்ரவரி 2016 ல் வழங்கியுள்ளது.

## "Telemetry & Telecommand Processor":

- "Telemetry & Telecommand Processor" - என்பவை இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தினால் உருவாக்கப்பட்டுள்ள, **செயற்கைக் கோள் வடிவமைப்பு,** சோதனை போன்றவற்றிற்கான தொழில்நுட்பமாகும்.

## "Aero India 2017":

- "Aero India 2017" எனப்படும் **11 வது சர்வதேச விண்வெளி மற்றும் பாதுகாப்பு கண்காட்சி பெங்களூரு** நகரில் நடைபெறவிருக்கிறது.

## வெள்ளிக் கிரகமே அடுத்த இலக்கு:

- வெள்ளிக்கிரகத்தில் ஆராய்ச்சி மேற்கொள்வதற்கான செயற்கைக்கோளை அனுப்புவதே அடுத்த இலக்கு என்று **இஸ்ரோ தலைவர் கிரண் குமார்** தெரிவித்தார்.
- செவ்வாய்கிரகத்தில் ஆராய்ச்சி மேற்கொள்வதற்கான செயற்கைக்கோளை அனுப்புவதற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.
- **மங்கள்யாண்** வெற்றியைத் தொடர்ந்து செவ்வாய்கிரகத்தில் என்ன மாதிரியான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளலாம் என்ற திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மத்திய

அரசுக்கு அனுப்பப்படும். இப்போது, **மங்கள்யாண் விண்கலத்தின் ஆயுள் காலம் இரண்டு ஆண்டுகளாக** அதிகரிக்கப்பட்டுள்ளது என்றார்.

**ISRO:**

- தொடங்கப்பட்டது - ஆகஸ்ட் 15, 1969
- தலைமையகம் - கியு பெல்ரோட் (பெங்களூர்)
- தலைவர் - கிரண் குமார்
- 1975 - இந்தியாவின் முதல் செயற்கைக் கோள் ஆரியபட்டா இஸ்ரோவில் அமைக்கப்பட்டு விண்ணில் ஏவப்பட்டது.

## ஏவுகணை தொழில்நுட்ப மேம்பாடு: எல் & டி - ஐரோப்பிய நிறுவனம் ஒப்பந்தம்:

- இந்தியாவில் ஏவுகணை தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் வகையில் **எல் & டி நிறுவனம்**, ஐரோப்பிய பாதுகாப்புத் துறை நிறுவனமான **எம்.பி.டி.ஏ. வுடன்** ஒப்பந்தம் மேற்கொண்டது.
- உள்நாட்டில் பாதுகாப்புத் துறைக்குத் தேவையான பல்வேறு வகையான ஏவுகணைகளை வடிவமைத்து இந்தியாவிலேயே தயாரிக்கும் வகையில் இந்தக் கூட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- **'இந்தியாவில் தயாரிப்போம்** ' திட்டத்துக்கு இது வலு சேர்ப்பதுடன் உள்நாட்டு ஆயுத தளவாட தொழில்நுட்பத்தை ஊக்குவிக்கும் என்றார் அவர்.
- **எல் & டி எம்.பி.டி.ஏ.** என்று பெயரிடப்பட்ட இந்தக் கூட்டுத் திட்டத்தில் **எல் & டி-யின்** பங்கு மூலதனம் **51 சதவீதமாகவும்**, ஐரோப்பிய பங்குதாரர் நிறுவனமான **எம்.பி.டி.ஏ.** -வின் பங்கு மூலதனம் **49 சதவீதமாகவும்** இருக்கும்.
- இந்தக் கூட்டுத் திட்டத்தின் மூலம், ஐந்தாம் தலைமுறை ராணுவ பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் (ஏடிஜி எம்5எஸ்), கடலோர பாதுகாப்பு ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களைத் தாக்கி அழிக்கும் அதிவேக ஏவுகணைகள் உருவாக்கப்பட உள்ளன.

## விண்வெளி ஆராய்ச்சியால் தொழில் வளர்ச்சி, வேலைவாய்ப்பு அதிகரிக்கும்:

- இந்திய விண்வெளி ஆராய்ச்சியில் ஏற்பட்டு வரும் தொடர் வளர்ச்சியால், தொழில் வளர்ச்சி ஏற்பட்டு வேலை வாய்ப்பு அதிகரிக்கும் என்று **திருவனந்தபுரம் விக்ரம் சாராபாய் விண்வெளி ஆய்வு மைய இயக்குநர் டாக்டர் கே.சிவன்** தெரிவித்தார்.
- இஸ்ரோவின் செயற்கைக்கோள் ஏவுகலனுக்கான எரிபொருளைத் தயாரிப்பதற்கு மூன்று கலவை இயந்திரங்கள், திருவொற்றியூர் **கேசிபி நிறுவனத்தில்** தயாரிக்கப்பட்டன.

## பூமியை போன்ற 7 கிரகங்கள் நாசா கண்டுபிடிப்பு:

- **பூமியை போன்ற 7 கிரகங்கள்** இருப்பதை அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பான 'நாசா'வின் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
- நமது பூமியில் இருந்து சுமார் 39 ஒளி ஆண்டுகள் தொலைவில் இந்த கிரகங்கள் உள்ளன.
- இவற்றில் 3 கிரகங்களில் தண்ணீர் உறையாமல் நீர்மத்தன்மையுடன் இருப்பதால், உயிரினங்கள் இருப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளன.
- **டிராபிஸ்ட்-1:** இந்த 7 கிரகங்களும் ஒரு நட்சத்திரத்தைச் சுற்றி அமைந்துள்ளன. இதற்கு **'டிராபிஸ்ட்-1'** எனப் பெயரிடப்பட்டுள்ளது. அந்த நட்சத்திரம் ஒளிரும் தன்மை சூரியனைவிட 2,000 மடங்கு குறைவு. எனவே, இந்தக் கிரகங்களில் அதிக குளிர் நிலவி வருகிறது.

- மையமாக அமைந்துள்ள நட்சத்திரத்துக்கு அருகில் உள்ள கிரகத்தில் குளிர் அதிகமாகவும், அடுத்தடுத்து அமைந்துள்ள கிரகங்களில் குளிர் குறைவாகவும் உள்ளது.
- **இரவு, பகல் மாற்றம் இல்லை:** பூமி தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருவதால் நமக்கு இரவு, பகல் மாறி மாறி வருகிறது. ஆனால், இந்த 7 கோள்களும் ஒரே கோணத்தில் தான் நட்சத்திரத்தை சுற்றி வருகின்றன.
- எனவே, இவற்றில் பகல் இருக்கும் பகுதி எப்போதும் பகலாகவும், இரவு இருக்கும் பகுதி எப்போதும் இரவாகவும் தான் இருக்கும். பகல் பகுதியில் இருந்து இரவுப் பகுதிக்கு அதிவேகமாக காற்று வீசி வருகிறது. இதனால், மாறுபட்ட கால நிலை நீடிக்கும்.
- **அருகருகே அமைவு:** இந்த 7 கிரகங்களும் ஒரு நாளில் கண்டுபிடிக்கப்படவில்லை.
- 7 கிரகங்களும் பூமியைப் போன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.
- நாசாவின் 'ஸ்பிட்சர் ஸ்பேஸ்' தொலைநோக்கி மூலம் விஞ்ஞானிகள் இந்த கிரகங்களைக் கண்டறிந்துள்ளனர். விண்வெளி ஆய்வுத் துறையில் இது முக்கிய மைல் கல்லாகக் கருதப்படுகிறது.

## இஸ்ரோவின் உலக சாதனையால் இந்தியர்களுக்குப் பெருமை: சீனா புகழாரம்:

- ஒரே ராக்கெட் மூலம் **104 செயற்கைக்கோள்களை** வெற்றிகரமாக விண்ணில் ஏவி இஸ்ரோ விஞ்ஞானிகள், இந்தியர்களுக்குப் பெருமை சேர்த்துள்ளனர் என்று சீனா புகழாரம் சூட்டியுள்ளது.
- **ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் அமைந்துள்ள சதீஷ் தவண் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி சி.37 ராக்கெட் மூலம் 104 செயற்கைக்கோள்கள்** ஏவப்பட்டன.
- இந்தியாவின் **கார்டோசாட் 2, ஐஎன்எஸ் 1 ஏ, ஐஎன்எஸ் 1 பி** ஆகிய செயற்கைக்கோள்களும், வெளிநாடுகளின் 101 செயற்கைக்கோள்களும் அந்த ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டன. விண்வெளி ஆராய்ச்சித் துறையில் இத்தகைய புதிய உலக சாதனையைப் படைத்தது இந்தியர்களுக்குப் பெருமை சேர்க்கும் விஷயம்.
- **அமெரிக்கா, சீனா** போன்ற நாடுகளைக் காட்டிலும் குறைவான நிதியே விண்வெளி ஆராய்ச்சிக்காக **இந்தியா** ஒதுக்கீடு செய்கிறது இருப்பினும் இந்த வெற்றியை சாத்தியமாக்கியிருக்கிறார்கள் இஸ்ரோ விஞ்ஞானிகள். இதன் மூலம் பல படிப்பினைகளை இந்தியாவிடம் இருந்து கற்றுக் கொள்ள முடியும். அடுத்ததாக வெள்ளி கிரகத்துக்கு செயற்கைக்கோள் அனுப்பப் போவதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

**இஸ்ரோ ஆராய்ச்சி:**

- காட்சாட் - 2 - செயற்கை கோள் (இந்தியா)
- PSIVC – 37 ராக்கெட்
- 104 - செயற்கை கோள்
- 96 செயற்கை கோள் - அமெரிக்கா
- மற்றவை - இஸ்ரேல், கஜகஸ்தான் நெதர்லாந்து சுவிட்சர்லாந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ்
- 2014 - ஒரே சமயத்தில் செயற்கை கோள்களை ரஷ்யா விண்ணில் செலுத்தியது
- தற்போது இந்தியா ரஷ்யாவின் சாதனையை முறியடித்தது
- 2005 - கார்சாட் செயற்கை
- 2007 - கார்சாட் - 2 A செயற்கை கோள்
- 2016 - கார்சாட் - 2 C செயற்கை கோள்

## கடலுக்கு அடியில் ஷிலாண்டியா:

- கடலுக்கு அடியில் **ஷிலாண்டியா** என்ற புதிய கண்டம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
  - இப்புதிய கண்டம் உருவானது எப்படி என்பது குறித்த ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.
  - உலகில் தற்போது **ஆசியா, ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா** என 6 கண்டங்கள் உள்ளன. தற்போது புதியதாக ஒரு கண்டம் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
  - இது தென்பசிபிக் கடலுக்கு அடியில் உள்ளது. அதாவது தற்போதுள்ள **நியூசிலாந்துக்கு** அடியில் கடலுக்குள் மூழ்கி கிடப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
  - இந்த புதிய கண்டத்துக்கு **“ஷிலாண்டியா”** என்று பெயரிடப்பட்டுள்ளது. இது அண்டை கண்டமான ஆஸ்திரேலியாவின் மூன்றில் 2 மடங்கு அளவு கொண்டது.
  - அதாவது 50 லட்சம் சதுர கிலோமீட்டர் பரபரப்புள்ள ஷிலாண்டியா கண்டம் பசிபிக் கடலுக்கு அடியில் 94 சதவீதம் மூழ்கி கிடக்கிறது. மேலும் இந்த கண்டமானது நியூசிலாந்தை போன்று 3 மடங்கு பெரியது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

## 3 விடை தெரியாத மர்மங்கள்:

1. **குளிர் சூரியன்:**
   - சூரியனின் வளிமண்டலத்தைவிட அதன் மேற்பரப்பு குளிர்ந்து காணப்படுவதுதான் விஞ்ஞானிகளுக்கே விந்தையாக இருந்து வருகிறது.
   - சூரியன் மேற்பரப்பின் வெப்பநிலை **5,500 டிகிரி செல்ஷியஸ்** தான்.
   - ஆனால் அதனைச் சுற்றிப் படர்ந்திருக்கும் வளிமண்டலத்தின் வெப்பநிலை எவ்வளவு தெரியுமா? **20 லட்சம் டிகிரி செல்ஷியஸ்!**
   - பூமியின் மேற்பரப்பை விட்டு உயரே செல்லச் செல்ல **வெப்பம் குறைந்து குளிர்ச்சி அதிகரிக்கும்.**
   - ஆனால் சூரியனின் மேற்பரப்பிலிருந்து உயரே செல்லச் செல்ல வெப்பம் அதிகரிப்பது ஏன் என்பதுதான் யாருக்கும் புரியாத புதிர்!
2. **சூரியப் புயல்:**
   - சூரியனிலிருந்து சக்திவாய்ந்த துகள்பொருள்கள் அனைத்து திசைகளிலும் புயலாக வீசிக் கொண்டிருக்கிறது.
   - இந்தப் புயலின் வேகம், கொஞ்ச நஞ்சமல்ல... மணிக்கு பல லட்சம் கிலோ மீட்டர்கள்!
   - இவ்வளவு உக்கிரமாக வீசும் இந்தப் புயலைத் தூண்டுவது எது என்பதற்கு எந்த விஞ்ஞானியாலும் இதுவரை பதில் சொல்ல முடியவில்லை.
3. **மர்மக் கதிர்வீச்சு:**
   - சூரியனிலிருந்து அவ்வப்போது ஒருவகையான சக்தி வாய்ந்த கதிர் வெளிப்பட்டுக் கொண்டிருப்பதை விஞ்ஞானிகள் கவனித்துள்ளனர்.
   - அந்தக் கதிர்கள் **‘எக்ஸ்ரே’** போன்று ஊடுருவும் தன்மை கொண்டவை.
   - தகுந்த பாதுகாப்பு இல்லாவிட்டால், விண்வெளியில் மிதக்கும் ஆய்வுக் கலங்களுக்கும், அவற்றின் மூலம் ஆய்வு மேற்கொள்ளும் விஞ்ஞானிகளுக்கும் அந்தக் கதிர்கள் ஆபத்தை ஏற்படுத்தக் கூடியவை.

- இந்தக் கதிர்கள் எவ்வாறு உருவாகின்றன என்பது விஞ்ஞானிகளுக்கு விடை தெரியா கேள்வியாகவே இருந்து வருகிறது.

## சூரியனுக்கு நாஸாவின் விண்கலம்!: அவிழுமா மூன்று (மர்ம) முடிச்சு?

- சூரியனுக்கு அடுத்த ஆண்டு விண்கலம் அனுப்ப, அமெரிக்க விண்வெளி ஆய்வு மையம் (நாஸா) திட்டமிட்டுள்ளது.
- இதுவரை இல்லாத அளவு நெருக்கத்தில் சென்று, இந்த விண்கலம் சூரியனைக் குறித்து மேற்கொள்ளவிருக்கும் ஆய்வு, அந்த மர்ம முடிச்சுகளுக்கு விடை தருவதற்கான வாய்ப்பு மிக அதிகம் என்கிறார் **நாஸா விஞ்ஞானி எரிக் கிறிஸ்டியன்.**
- இதுகுறித்து **'லைவ் சயன்ஸ்'** இதழிடம் அவர் கூறுகையில், "சூரியனை நோக்கிய எங்களது முதல் ஆய்வு இது.
- நிலவைப் போலவோ, செவ்வாய் கிரகத்தைப் போலவோ இந்த ஆய்வில் சூரியனின் மேற்பரப்புக்கு சென்று எங்களால் ஆய்வு செய்ய முடியாது என்பது உண்மைதான்.
- இருந்தாலும், இதுவரை இல்லாத நெருக்கத்துக்குச் சென்று, அதாவது தகிக்கும் சூரியனை எந்த அளவுக்கு தாங்க முடியுமோ, அவ்வளவு நெருங்கிச் சென்று எங்களது விண்கலம் ஆராய்ச்சி மேற்கொள்ளவிருக்கிறது.
- இதன்மூலம், இதுவரை விடை காண முடியாமல் விஞ்ஞானிகள் திணறி வந்த 3 கேள்விகளுக்கு விடை கிடைக்கக் கூடும்.
- சூரியனின் மேற்பரப்பை விட அதன் வளிமண்டலம் எவ்வாறு பன்மடங்கு வெப்பத்துடன் காணப்படுகிறது, சூரியனின் மேற்பரப்பில் தொடர்ந்து ஏற்படும் அக்கினிப் புயலைத் தூண்டுவது எது, விண்வெளியில் மிதக்கும் விண்கலங்கள், விண்வெளி வீரர்கள் ஆகியோருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் சக்தி வாய்ந்த துகள்களை சூரியன் அவ்வப்போது வெளியிடுவது எப்படி ஆகிய கேள்விகளுக்கு இதுவரை விடை தெரியாமல் இருந்து வந்தது.
- இதற்காக, **1,370 டிகிரி செல்ஷியஸ்** வெப்பத்தையும் தாங்கக்கூடிய திறனை விண்கலத்துக்குத் தரும் **11.4 செ.மீ. தடிமன்** கொண்ட கரிமக் கலப்புப் பொருளை உருவாக்கியுள்ளோம்.
- மேலும், வெப்பத்தால் பாதிக்கப்படக்கூடிய ஆய்வுக் கருவிகளைப் பாதுகாக்கும் வகையில், புதிய குளிரூட்டிக் குழாய்களையும் தயாரித்துள்ளோம் என்றார் அவர்.
- நாஸாவின் இந்தத் திட்டத்துக்கு **'சோலார் புரோப் பிளஸ்'** எனப் பெயரிடப்பட்டுள்ளது.

**தேசிய குடற்புழு நீக்க நாள் - பிப்ரவரி 10**

# விளையாட்டு நிகழ்வுகள்

## இந்திய டேபிள் டென்னிஸ் கூட்டமைப்பு:

- இந்திய டேபிள் டென்னிஸ் கூட்டமைப்பின் தலைவராக **துஷ்யந்த சௌதாலா** நியமிக்கப்பட்டுள்ளார்.

**துஷ்யந்த சௌதாலா:**

- இவருடன் இரண்டு கண்காணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்
- **குல் தீப் வாட்ஸ்** - இந்திய ஒலிம்பிக் சங்கத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றார்.
- **அஸ்வினி குமார்** - இந்திய விளையாட்டு ஆணையம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றார்.

## ஐந்து முறை தேசிய சாம்பியன் பட்டம்:

- ஐந்து முறை தேசிய சாம்பியன் பட்டம் வென்ற இந்திய கார் பந்தய வீரரான **கௌரவ் கில்லுக்கு** ஆண்டின் **சிறந்த மோட்டார் பந்தய வீரர் விருது** வழங்கப்பட்டது.

## அகில இந்திய டென்னிஸ் சங்கத்தின்:

- அகில இந்திய டென்னிஸ் சங்கத்தின் (ஏஐடிஏ) தலைவராக **பிரவீன் மகாஜன்** போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். இவர், 2020 வரை ஏஐடிஏ தலைவராக இருப்பார். முன்னாள் வருவாய் அதிகாரியான பிரவீண் மகாஜன், ஏஐடிஏவின் **முதல் பெண் தலைவர்** ஆவார்.

**பிரவீன் மகாஜன்:**

- மகாஜன் முன்னாள் D. RS அதிகாரி அகில இந்திய டென்னிஸ் சங்கத்தின் முதல் பெண் தலைவர் ஆவார்.
- முந்தைய தலைவர் - **அனில் கண்ணா**
- துணை தலைவர்கள்
  1. சிந்தன் பரிக் (குஜராத்)
  2. அனில் மஹாஜன் (மத்திய பிரதேசம்)

**AITA:**

- ஆரம்பிக்கப்பட்டது - 1920
- தலைமையகம் - டெல்லி
- செயல்பாடு - இந்தியாவில் டென்னிஸ் போட்டிகளை திட்மிடுதல் மற்றும் நடத்துதல்.

## இந்தியாவைச் சார்ந்த லக்ஷ்யா சென்:

- இந்தியாவைச் சார்ந்த **லக்ஷ்யா சென்** உலகளவிலான ஜீனியர் பேட்மிண்டன் தரவரிசையில் **முதலிடத்தைப்** பிடித்துள்ளார்.

**லக்ஷ்யா சென்:**
- இவருடைய சகோதரர் **சிராகும் சென்** தரவரிசையில் **2-ம் இடம்** பிடித்துள்ளார்.
- பிறந்த தினம் : 16 ஆகஸ்ட் 2001
- இவர் **உத்தரகாண்ட் மாநிலத்தை** சேர்ந்தவர் பேட்மிட்டன்
- இவர் 2016-ல் இந்திய சர்வதேச தொடரில் **லீ ஜீ ஜே** வை தோற்கடித்து முதலிடத்தை தக்கவைத்தார்.

## ஹாங்காங்கில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ்:

- ஹாங்காங்கில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் **இந்திய ஆடவர் அணி தங்கப் பதக்கம்** வென்றது. இதன்மூலம் ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் **2-ஆவது முறையாக தங்கப் பதக்கத்தைக்** கைப்பற்றியுள்ளது **இந்தியா.** முன்னதாக 2011-இல் இந்தியா, பாகிஸ்தானை வீழ்த்தி சாம்பியன் ஆனது குறிப்பிடத்தக்கது.

## தேசிய டேபிள் டென்னிஸ் போட்டி:

- தேசிய டேபிள் டென்னிஸ் போட்டியில் தமிழக வீரரான **சரத் கமல்** 7-ஆவது முறையாக சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

**சரத் கமல்:**
- அசந்தா சரத் கமல் இந்தியா, தமிழ்நாடு மாநில தொழில் முறை மேசை பந்தாட்ட வீரர்.
- 2004 - கோலாம்பூரில் மேசை பந்தாட்ட போட்டியில் ஆண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் தங்கம் வென்றார்.
- 2004 - அர்ஜீனா விருது பெற்றார்.

## டி20 உலகக் கோப்பை:

- **கேரள மாநிலம் கொச்சியில்** நடைபெற்ற **பார்வையற்றோர் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட்** போட்டி நடைபெறுகிறது.

## டி20 கிரிக்கெட் போட்டியில்:

- டி20 கிரிக்கெட் போட்டியில் ஆட்டமிழக்காமல் **300 ரன்கள் எடுத்த உலகின் முதல் வீரர்** என்ற சாதனையை **தில்லியைச் சேர்ந்த மோஹித் அலாவத்** (21) படைத்துள்ளார்.

## "11 மில்லியன் இலக்கு திட்டம்":

- "**11 மில்லியன் இலக்கு திட்டம்**" – மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறையினால் அறிவிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் நாடெங்கிலுமுள்ள 11 மில்லியன் குழந்தைகளை கால்பந்து விளையாட்டுகளில் பங்குபெற செய்வதாகும். இந்தியாவில் நடைபெறவுள்ள **FIFA U – 17 World Cup 2017** போட்டிகளைப்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**FIFA World Cup**

| **ஆண்டு** | **நடைபெற்ற இடம்** |
|---|---|
| 2014 | பிரேசில் |
| 2010 | தென்னாப்பிரிக்க |
| 2006 | ஜெர்மனி |
| 2002 | ஜப்பான்/தென் கொரியா |

## அமெரிக்காவின் நியூ ஆர்லியன்ஸ் உலகளவிலான முகாம்:

- **அமெரிக்காவின் நியூ ஆர்லியன்ஸ்** நகரில் பிப்ரவரி 2017 ல் நடைபெறவிருக்கும், எல்லைகளற்ற கூடைபந்து விளையாட்டு உலகளவிலான முகாமில் கலந்து கொள்ள இந்தியாவிலிருந்து **அக்ஸய் வர்மா** மற்றும் **பிரியங்கா பிரபாகரா** ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## வெளிநாட்டில் நடைபெறும் டி-20 கிரிக்கெட்:

- வெளிநாட்டில் நடைபெறும் டி-20 கிரிக்கெட் போட்டியில் ஒப்பந்தத்தின் மூலம் விளையாடவிருக்கும் **முதல் இந்திய கிரிக்கெட் வீரர்** எனும் பெருமையை "**யூசுஃப் பதான்**" பெற்றுள்ளார். இவர் மார்ச் 2017-ல் நடைபெறவிருக்கும் "ஹாங்காக் லீக் டி-20 போட்டியில்" விளையாடவிருக்கிறார்.

## நியூஸ்லாந்து கிராண்ட் பிரிக்ஸ் 2017:

- **நியூஸ்லாந்து கிராண்ட் பிரிக்ஸ் 2017** கார் பந்தயத்தில் வெற்றி பெற்றுள்ள **இந்திய வீரர் - ஜெகன் தருவாலா.**

## சர்வதேச மேஜைப் பந்து கூட்டமைப்புகள்:

- சர்வதேச மேஜை பந்து கூட்டமைப்பின் மூலம் நடத்தப்படும் **“இந்தியா ஓபன் 2017”** முதல் முறையாக **புது தில்லியில்** நடைபெறவுள்ளது.

## பிராட்மேன், திராவிட் சாதனையை முறியடித்த விராட் கோலி:

- வங்கதேசத்துக்கு எதிராக இரட்டைச் சதமடித்ததன் மூலம் தொடர்ச்சியாக **4 டெஸ்ட்** தொடர்களில் **இரட்டைச் சதமடித்த முதல் வீரர்** என்ற சாதனையை படைத்துள்ளார் **விராட் கோலி.**
- முன்னதாக **டான் பிராட்மேன், ராகுல் திராவிட்** ஆகியோர் தொடர்ச்சியாக 3 தொடர்களில் **இரட்டைச் சதமடித்ததே** சாதனையாக இருந்தது.
- முன்னதாக **மேற்கிந்தியத் தீவுகள், நியூஸிலாந்து, இங்கிலாந்து** அணிகளுக்கு எதிரான டெஸ்ட் தொடர்களில் கோலி இரட்டைச் சதமடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.
- கேப்டனாக 4-ஆவது இரட்டைச் சதத்தை விளாசியுள்ளார் கோலி.
- இதன்மூலம் அதிகமுறை 200 அல்லது அதற்கு மேற்பட்ட ரன்களைக் குவித்த கேப்டன்கள் வரிசையில் **டான் பிராட்மேன், மைக்கேல் கிளார்க், கிரீம் ஸ்மித்** ஆகியோருடன் **2-ஆவது** இடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளார் **கோலி.**
- **பிரையன் லாலா 5 சதங்கள்** அடித்ததே இன்றளவும் சாதனையாக உள்ளது.
- அதே நேரத்தில் **இந்திய கேப்டன்களில் கோலிக்கு** அடுத்தபடியாக **மன்சூர் அலிகான் பட்டோடி, சுநீல் கவாஸ்கர், சச்சின் டெண்டுல்கர், தோனி** ஆகியோர் தலா ஒரு இரட்டைச் சதம் மட்டுமே விளாசியுள்ளனர்.
- இதுதவிர டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அதிக இரட்டைச் சதங்களை விளாசிய இந்தியர்கள் வரிசையில் **சுநீல் கவாஸ்கருடன் 4-ஆவது** இடத்தைப் பிடித்துள்ளார் **கோலி.**
- **சச்சின், சேவாக்** ஆகியோர் தலா 6 முறை 200 அல்லது அதற்கு மேற்பட்ட ரன்களை குவித்து முதலிடத்தில் உள்ளனர். **ராகுல் திராவிட்** 5 இரட்டைச் சதங்களை விளாசியுள்ளார்.

## 10-ஆவது ஐ.பி.எல்: ஏப்ரல் 5-இல் தொடக்கம்:

- இந்தியன் பிரீமியர் லீக் (ஐபிஎல்) கிரிக்கெட்டின் **10-ஆவது** ஐ.பி.எல் ஆண்டு போட்டிகள் ஏப்ரல் 5-ஆம் தேதி **ஹைதராபாதில்** தொடங்குகிறது.

- இந்த ஆண்டுக்கான முதல் ஆட்டத்தில் நடப்புச் சாம்பியனான சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியும், கடந்த சீசனில் 2-ஆவதாக வந்த ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியும் மோதுகின்றன.
- இறுதி ஆட்டமும், **ஹைதராபாதில் உள்ள ராஜீவ் காந்தி மைதானத்தில்** மே 21-ஆம் தேதி நடைபெற உள்ளது.

## 'சிறந்த விளையாட்டு வீரர்' விருது வென்றார் உசேன் போல்ட்:

- **உலகின் மின்னல் வேக மனிதராக** வர்ணிக்கப்படும் தடகள வீரர் **உசேன் போல்ட்**, 2017-ஆம் ஆண்டுக்கான **'சிறந்த விளையாட்டு வீரர்' விருதும்**, ரியோ ஒலிம்பிக் போட்டியில் ஜிம்னாஸ்டிக்ஸ் பிரிவில் தங்கம் வென்ற அமெரிக்க வீராங்கனை **சைமன் பில்ஸ் 'சிறந்த விளையாட்டு வீராங்கனை' விருதும்** வென்றுள்ளனர்.
- இதில் **உசேன் போல்ட், 4-ஆவது முறையாக** இந்த விருதை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.
- இதன்மூலம், **இந்த விருதை 4 முறை வென்ற** டென்னிஸ் வீரர் **ரோஜர் ஃபெடரர்**, வீராங்கனை **செரீனா வில்லியம்ஸ், அலைச்சருக்கு (சர்ஃப்) வீரர் கெல்லி ஸ்லேட்டர்** ஆகியோரின் வரிசையில் **உசேன் போல்ட்** இணைந்துள்ளார்.
- விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கும் வீரர், வீராங்கனைகளுக்கு **'லாரஸ்'** என்ற அமைப்பு ஆண்டுதோறும் விருது வழங்கி கௌரவித்து வருகிறது.
- விளையாட்டு **உலகின் 'ஆஸ்கார்'** விருதாக மதிக்கப்படும் இந்த விருது, கடந்த **2000-ஆம்** ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.

**உசேன் போல்ட்:**
- இவர் ஜமைக்கவீரர்
- உலகின் மின்னல் மனிதர் என்று அழைக்கப்படுபவர்
- 100மீ 9.58 உலக சாதனை 2009 பெர்லின்
- 200மீ 19.19 உலக சாதனை 2009 பெர்லின்
- 400மீ 45.28 கிங்ஸ்டன் 2007

## சிறந்த 'மீண்டு வந்த வீரர்':

- லண்டன் ஒலிம்பிக்கின்போது ஓய்வு பெறுவதாக அறிவித்து, பின்னர் ரியோ ஒலிம்பிக்கில் களம் இறங்கி **5 தங்கப் பதக்கங்கள்** வென்ற **அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கேல் பெல்ப்ஸ், 'சிறந்த மீண்டு வந்த வீரர்' விருதை** பெற்றார்.
- அப்போது அவர், 'எனது கடந்த கால விளையாட்டு வாழ்க்கையை திரும்பிப் பார்க்கிறேன்.
- அவற்றில், **ரியோ ஒலிம்பிக் தான்**, நான் பங்கேற்ற போட்டிகளிலேயே மிகச்சிறந்த ஒன்றாகும்' என்று கூறினார்.

### மைக்கேல் பெல்ப்ஸ்

| **ஆண்டு** | **ஒலிம்பிக் நடைபெற்ற இடம்** | **பதக்கங்கள்** |
|---|---|---|
| 2004 | ஏதென்ஸ் | 8 பதக்கங்கள் |
| 2008 | பெய்ஜிங் | 8 பதக்கம் |
| 2012 | லண்டன் | 6 பதக்கம் |
| 2016 | ரியோ டி ஜெனிரோ | 5 பதக்கம் |

27 பதக்கங்களைப் பெற்ற அதிக பதக்கம் பெற்றோர் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.

## கவாஸ்கர், தோனி சாதனைகளை முறியடித்த விராட் கோலி:

- **கோலி** தலைமையிலான இந்திய அணி வங்கதேசத்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியோடு சேர்த்து தொடர்ச்சியாக **19 டெஸ்ட் போட்டிகளில்** தோல்வியை சந்திக்கவில்லை.
- இதன்மூலம் **அதிக போட்டிகளில் இந்திய அணி தோல்வியை சந்திக்காமல்** வழிநடத்திய **கேப்டன்** என்ற பெருமையைப் பெற்றுள்ளார் **விராட் கோலி.**
- முன்னதாக **1976 முதல் 1980** வரையிலான காலங்களில் **சுநீல் கவாஸ்கர்** தலைமையிலான இந்திய அணி தொடர்ச்சியாக **18 போட்டிகளில்** தோல்வியை சந்திக்காமல் இருந்ததே சாதனையாக இருந்தது.
- இதற்கடுத்தபடியாக **கபில்தேவ்** தலைமையிலான இந்திய அணி **1985 முதல் 1987** வரையிலான காலங்களில் தொடர்ச்சியாக **17 போட்டிகளில்** தோல்வியை சந்திக்காமல் இருந்துள்ளது.

- கோலி தலைமையிலான இந்திய அணி **தொடர்ச்சியாக 6 டெஸ்ட்** தொடர்களை கைப்பற்றியுள்ளது.
- இதன்மூலம் இந்தியாவுக்கு தொடர்ச்சியாக **அதிக டெஸ்ட் தொடர்களை வென்று தந்த கேப்டன்** என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- முன்னதாக **2008 முதல் 2010** வரையிலான காலங்களில் **தோனி** தலைமையிலான இந்திய அணி தொடர்ச்சியாக **5 தொடர்களை** வென்றதே சாதனையாக இருந்தது.
- கோலி தலைமையிலான இந்திய அணி 2015 முதல் தற்போது வரையிலான காலத்தில் **இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், தென் ஆப்பிரிக்கா, நியூஸிலாந்து, இங்கிலாந்து, வங்கதேசம்** ஆகிய அணிகளுக்கு எதிரான 6 தொடர்களை கைப்பற்றியுள்ளது.

- இதன்மூலம் டெஸ்ட் வரலாற்றில் தொடர்ச்சியாக அதிக போட்டிகளில் தோல்வியை சந்திக்காத அணிகளின் வரிசையில் **இந்தியா 5-ஆவது இடத்தைப்** பிடித்துள்ளது.
- மேற்கிந்தியத் தீவுகள் அணி **1982 முதல் 1984** வரையிலான காலங்களில் தொடர்ச்சியாக **27 டெஸ்ட் போட்டிகளில்** தோற்காமல் இருந்ததே இன்றளவும் சாதனையாக உள்ளது.

## ஒருநாள் தரவரிசை

| தரம் | நாடு |
|---|---|
| 1st | தென் ஆப்பிரிக்கா |
| 2nd | ஆஸ்திரேலியா |
| 3rd | நியூசிலாந்து |
| 4th | இந்தியா |

- 2002-ல் புதிய தரவரிசை முறை அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு தென் ஆப்பிரிக்கா அணி தரவரிசையில் முதலிடத்தை பிடிப்பது. இது 5வது முறையாகும்.

## விராட் கோலி:

- கோலி தலைமையில் இதுவரை 23 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள இந்திய அணி, அதில் 15 வெற்றிகளைப் பெற்றுள்ளது.
- இதன்மூலம் முதல் 23 போட்டிகளில் அதிக வெற்றிகளைப் பெற்றுத்தந்த கேப்டன்களின் வரிசையில் **ரிக்கி பாண்டிங், மைக்கேல் வாகன்** ஆகியோருடன் **2-ஆவது இடத்தைப்** பகிர்ந்து கொண்டார் **கோலி.** முன்னாள் ஆஸ்திரேலிய கேப்டன் **ஸ்டீவ் வாஹ்** (23 போட்டிகளில் 17 வெற்றிகள்) **முதலிடத்தில்** உள்ளார்.

**விராட் கோலி:**

- இந்திய டெஸ்ட் அணியின் கேப்டன் விராத் கோஹ்லி இந்தியாவிற்கு வெளியில் இரட்டை சதம் அடித்த முதல் இந்திய கேப்டன் ஆவார்.
- முதல் டெஸ் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான 200 ரன்கள் எடுத்தார்.
- இந்தியாவிற்கு வெளியில் 200 ரன்களை குவித்த 5வது கேப்டன் ஆவார்.

## அஸ்வின்:

- இந்திய சுழற்பந்து வீச்சாளர் **அஸ்வின் 4-ஆவது** இன்னிங்ஸில் மட்டும் **50 விக்கெட்டுகளை** வீழ்த்தியுள்ளார்.
- **பிஷன் சிங் பேடி, அனில் கும்ப்ளே** ஆகியோருக்கு அடுத்தபடியாக இந்த மைல்கல்லை எட்டிய 3-ஆவது இந்தியா வீரர் **அஸ்வின்** ஆவார்.
- 4-ஆவது இன்னிங்ஸில் 50 அல்லது அதற்கு மேற்பட்ட விக்கெட்டுகளை வீழ்த்தியவர்களில் அஸ்வினிடமே பெஸ்ட் ஸ்டிரைக் ரேட் உள்ளது.

## ஏடிபி சாம்பியன்!:

- **பிரான்ஸின் மான்ட்பெல்லியர்** நகரில் நடைபெற்ற **ஏடிபி உலக டூர் டென்னிஸ்** போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற மகிழ்ச்சியில் **ஜெர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவ்** பிரான்ஸின் **ரிச்சர்ட் காஸ்கட்டை** தோற்கடித்தார்.

## இங்கிலாந்து டெஸ்ட் அணியின் கேப்டனாக ஜோ ரூட் நியமனம்:

- **இங்கிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் அணியின் புதிய கேப்டனாக ஜோ ரூட்** நியமிக்கப்பட்டுள்ளார்.
- அந்த அணியின் கேப்டனாக இருந்த **அலாஸ்டர் குக்,** தனது பதவியை ராஜிநாமா செய்ததைத் தொடர்ந்து **துணை கேப்டனான ஜோ ரூட்** இப்போது கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஆல்ரவுண்டர் **பென்ஸ்டோக்ஸ்,** துணை கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## அஸ்வின் புதிய சாதனை:

- இந்திய சுழற்பந்து வீச்சாளரான **அஸ்வின்**, குறைந்த டெஸ்ட் போட்டிகளில் **250 விக்கெட்களை** வீழ்த்திய பந்து வீச்சாளர் என்ற புதிய சாதனையை படைத்துள்ளார்.

- அவர் மொத்தம் 45 போட்டிகளில் 250 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார்.

## இதற்கு முன்னர் 250 விக்கெட்களை வீழ்த்தியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. 48 போட்டிகளில் | 250 விக்கெட் | டென்னிஸ் லில்லி | ஆஸ்திரேலியா |
| 2. 49 போட்டிகளில் | 250 விக்கெட் | டேல் ஸ்பெயின் | தென் ஆப்பிரிக்கா |
| 3. 50 போட்டிகளில் | 250 விக்கெட் | ஆலன் டொனால்ட் | தென் ஆப்பிரிக்கா |
| 4. 45 போட்டிகளில் | 250 விக்கெட் | அஸ்வின் | இந்தியா |

## இந்தியாவுக்கு சாம்பியன் பட்டம்:

- பார்வையற்றோருக்கான டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி இந்தியாவில் நடந்தது.
- இதில் பெங்களூருவில் இறுதிப் போட்டியில் இந்திய அணி பாகிஸ்தானை எதிர்த்து விளையாடியது.
- இதன் மூலம் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.
- இப்போட்டியில் இந்திய அணிக்காக 99 ரன்களைக் குவித்த பிரகாஷ் **ஜெயராமையா** ஆட்ட நாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இந்த தொடரில் அதிகபட்சமாக 570 ரன்களைக் குவித்த பாகிஸ்தான் வீரர் **பதர் முனிர்,** தொடர் நாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### பார்வையற்றோர் டி-20

| ஆண்டு | வெற்றி பெற்ற நாடுகள் |
|---|---|
| 1998 | தென் ஆப்பிரிக்கா |
| 2002 | பாகிஸ்தான் |
| 2006 | பாகிஸ்தான் |
| 2014 | தென் ஆப்பிரிக்கா |
| 2012 | இந்தியா |
| 2017 | இந்தியா |

## உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல்: வெண்கலம் வென்றார் பூஜா கட்கர்:

- சர்வதேச துப்பாக்கி சுடுதல் சம்மேளனத்தின் உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல் போட்டியின் மகளிர் 10 மீ. ஏர் ரைபிள் பிரிவில் **இந்தியாவின் பூஜா கட்கர் வெண்கலம்** வென்றார்.
- இதன்மூலம் **உலகக் கோப்பையில் முதல் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார் பூஜா கட்கர்.**
- இதே பிரிவில் **சீனாவின் மெங்யாள் ஷி** 252.1 புள்ளிகளுடன் **தங்கம் வென்றதோடு**, புதிய உலக சாதனையும் படைத்தார்.
- மற்றொரு **சீன வீராங்கனையான டாங் லிஜீ** 248.9 புள்ளிகளுடன் **வெள்ளிப் பதக்கம்** வென்றார்.

**பூஜா கட்கர்:**

- 2017-ன் மார்சில் ஆசிய ஏர் கன் சாம்பியன் ஷிப்பில் தங்கம் வென்று வரலாற்று சாதனை படைத்தார்.

## துபை ஓபன் சாம்பியன்!

- துபையில் நடைபெற்ற துபை ஓபன் டென்னிஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றார் **உக்ரைனின் எலினா ஸ்விட்டோலினா.** இறுதிச் சுற்றில் **எலினர் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கியை** தோற்கடித்தார்.

## உலக மகளிர் செஸ் ஹரிகாவுக்கு வெண்கலம்:

- உலக மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் **ஹரிகா துரோணவல்லி** தொடர்ந்து **மூன்றாவது** முறையாக **வெண்கலம்** வென்றார்.
- **ஈரான் தலைநகர் டெஹ்ரானில்** நடைபெற்று வரும் இந்தப் போட்டியின் அரையிறுதியில் **டைபி** ரேக்கர் முறையில் **சீனாவின் டேன் ஜாங்கியிடம்** தோல்வியடைந்தார் ஹரிகா இதனால் இறுதிச் சுற்று வாய்ப்பை இழந்த ஹரிகா, வெண்கலப்பதக்கத்தோடு வெளியேறினார்.

| ஆண்டு | நடைபெற்ற இடம் |
|---|---|
| 2012 | ரஷ்யா |
| 2013 | சைனா |
| 2015 | ரஷ்யா |
| 2016 | இரான் |
| 2017 | உக்ரைன் |

## டெஸ்ட் தரவரிசை: அஸ்வின் தொடர்ந்து முதலிடம்:

- கிரிக்கெட் பந்துவீச்சாளர்கள் மற்றும் **ஆல்ரவுண்டர்கள் தரவரிசையில் இந்தியாவின் அஸ்வின் தொடர்ந்து முதலிடத்தில்** உள்ளார்.
- இதேபோல் **பேட்ஸ்மேன்கள் தரவரிசையில்** இந்திய கேப்டன் **கோலி 2-ஆவது** இடத்தைத் தக்க வைத்துக் கொண்டார்.
- இந்திய அணியின் தரவரிசையில் 46-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.
- பேட்ஸ்மேன்கள் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் **ஆஸ்திரேலிய கேப்டன் ஸ்டீவன் ஸ்மித்,** இந்தியாவுக்கு எதிராக சதமடித்ததன் மூலம் 939 ரேட்டிங் புள்ளிகளைப் பெற்றிருக்கிறார்.
- இதன்மூலம் அதிக ரேட்டிங் புள்ளிகளை பெற்றவர்கள் வரிசையில் 6-ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

**பேட்ஸ்மேன்**

| **எண்** | **பெயர்** | **நாடு** |
|---|---|---|
| 1st | ஸ்டீவன்ஸ்மித் | ஆஸ்திரேலியா |
| 2nd | கோலி | இந்தியா |
| 3rd | ஜேம்ஸ்ரூட் | இங்கிலாந்து |

**பௌலர்ஸ்**

| **எண்** | **பெயர்** | **நாடு** |
|---|---|---|
| 1st | அஸ்வின் | இந்தியா |
| 2st | ஜடேஜா | இந்தியா |
| 3nd | ஜோஷ் ஹேஸில்வுட் | இங்கிலாந்து |

## ஹாக்கி இந்திய லீக்: கலிங்கா லேன்சர்ஸ் சாம்பியன்:

- ஹாக்கி இந்திய லீக் போட்டியில் **கலிங்கா லேன்சர்ஸ்** அணி சாம்பியன் பட்டம் வென்றது.
- **சண்டிகரில்** நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் கலிங்கா லேன்சர்ஸ் அணி டபாங் மும்பை அணியைத் தோற்கடித்தது.

- கலிங்கா லேன்சர்ஸ் அணி தரப்பில் கேப்டன் **மோரிட்ஸ் பியூர்ஸ்டே** பெனால்டி வாய்ப்பில் இரு கோல்களையும் (30 மற்றும் 58-ஆவது நிமிடங்களில்), **கிளன் டர்னர்** இரு கோல்களையும் (18-ஆவது நிமிடம்) அடித்தனர்.
- முன்னதாக நடைபெற்ற வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் உத்தரப் பிரதேச விஸார்ட்ஸ் அணி டெல்லி வேவ்ரைடர்ஸ் அணியைத் தோற்கடித்தது.

## சர்வதேச குத்துச்சண்டை வெள்ளி வென்றார் முகமது:

- சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் இந்திய வீரர் **முகமது ஹுஸாமுதீன்** வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- பல்கேரிய தலைநகர் சோபியாவில் நடைபெற்ற இந்தப் போட்டியில் ஆடவர் **56 கிலோ** எடைப் பிரிவு இறுதிச் சுற்றில் **முகமது ஹுஸாமுதீன்** உக்ரைனின் **மைகோலா புட்சென்கோவிடம்** தோல்வி கண்டார்.
- இதனால் **முகமது ஹுஸாமுதீன் வெள்ளிப் பதக்கத்தோடு** வெளியேறினார்.
- இதன்மூலம் இந்தப் போட்டியை 3 பதக்கங்களுடன் நிறைவு செய்துள்ளது இந்தியா.
- முன்னதாக **அமித் பாங்கல்** (49 கிலோ), **மீனாகுமாரி மைஸ்னம்** (54 கிலோ) ஆகியோர் **வெண்கலப் பதக்கம்** வென்றனர்.

## ரியோ சாம்பியன்!:

- பிரேசிலின் ரியோ டி ஜெனீரோ நகரில் நடைபெற்ற **ரியோ ஓபன் டென்னிஸ் போட்டியில்** சாம்பியன் பட்டம் வென்ற **ஆஸ்திரியாவின் டொமினிக் தீம்** ஸ்பெயினின் கரீனோ பஸ்டாவை தோற்கடித்தார்.

## ஏடிபி தரவரிசை:

## சோங்கா முன்னேற்றம்:

- சர்வதேச ஆடவர் டென்னிஸ் (ஏடிபி) தரவரிசையில் பிரான்ஸின் **ஜோ வில்பி ரைட் சோங்கா** 7-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.
- பிரான்ஸில் நடைபெற்ற **மார்சீலி ஓபன் டென்னிஸ் போட்டியில் சாம்பியன் பட்டம்** வென்றதன் மூலம் அவர் 11-ஆவது இடத்திலிருந்து 7-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

- மற்றொரு பிரான்ஸ் வீரரான **லூகாஸ் போய்லி** இரு இடங்கள் முன்னேறி 15-ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.
- ஆஸ்திரியாவின் **டொமினிக் தீம்**, ரியோ ஓபனில் சாம்பியன் பட்டம் வென்றபோதும், ஓர் இடத்தை இழந்து 8-ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.
- **டெல்ரே பீச் ஓபன்** டென்னிஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற **அமெரிக்காவின் ஜேக் சாக்** மூன்று இடங்கள் முன்னேறி 18-ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

**ஏடிபி தரவரிசை**

| எண் | பெயர் | நாடு |
|---|---|---|
| 1st | ஆன்டி முர்ரே | பிரிட்டன் |
| 2nd | ஜோகோவிச் | செர்பியா |
| 3rd | வாவ்ரிங்கா | ஸ்விட்சர்லாந்து |
| 4th | மிலோஸ் ரயோனிச் | கனடா |
| 5th | நிஷிகோரி | ஜப்பான் |
| 6th | ரபேல் நடால் | ஸ்பெயின் |

## விராட் கோலிக்கு கிரிக்இன்போ விருது:

- 2016-ஆம் ஆண்டின் **சிறந்த கேப்டனுக்கான இ.எஸ்.பி.என் கிரிக்இன்போ விருது** இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் **விராட் கோலிக்கு** கிடைத்துள்ளது.
- இங்கிலாந்து ஆல் ரவுண்டர் **பென் ஸ்டோக்ஸ்** ஆண்டின் **சிறந்த டெஸ்ட் பேட்ஸ்மேனுக்கான** விருதைத் தட்டிச் சென்றார்.
- இங்கிலாந்து வேகப் பந்து வீச்சாளர் **ஸ்டூவர்ட் பிராட்** ஆண்டின் **சிறந்த பந்துவீச்சாளராக** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- தென் ஆப்பிரிக்காவின் **டிகாக்**, ஆண்டின் **சிறந்த ஒரு நாள் போட்டிக்கான பேட்ஸ்மேன்** விருதையும், **சிறந்த ஒருநாள் பந்துவீச்சாளருக்கான** விருதை மேற்கிந்தியத் தீவுகளின் **சுநீல் நரேனும்** பெற்றனர்.

- மேற்கிந்தியத் தீவுகளின் **கார்லோஸ் பிரத்வெயிட் சிறந்த டி20 பேட்ஸ்மேனுக்கான** விருதைப் பெற்றார்.
- வங்கதேச வேகப்பந்து வீச்சாளர் **முஸ்தாபிஜுர் ரஹ்மான்** ஆண்டின் **சிறந்த டி20 பந்துவீச்சாளர்** விருதைப் பெற்றார்.
- இந்த முறை வீராங்கனைகளுக்கும் விருது வழங்கப்பட்டது.
- மேற்கிந்தியத் தீவுகளின் **ஹாய்லே வில்லியம் (சிறந்த பேட்டிங்),** நியூஸிலாந்தின் **லீ காஸ் பெரீக் (சிறந்த பந்துவீச்சாளர்)** ஆகியோருக்கு விருது கிடைத்தது.
- கிரிக்இன்போவின் மூத்த ஆசிரியர்கள், முன்னாள் வீரர்களான **இயான் சேப்பல்**, **மார்க் பௌச்சர்** உள்ளிட்டோர் அடங்கிய தேர்வுக் குழு மேற்கண்ட விருதுகளுக்கு வீரர்களை தேர்வு செய்தது.

## உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல்: அங்குர் மிட்டலுக்கு வெள்ளி:

- உலக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல் போட்டியின் ஆடவர் டபுள் டிராப் பிரிவில் இந்திய வீரர் **அங்குர் மிட்டல் வெள்ளிப் பதக்கங்கள்** வென்றார். **தில்லியில்** நடைபெற்றுவரும் இந்தப் போட்டியில் **அங்குர் 2-ஆவது இடத்தைப்** பிடித்தார்.
- இதே பிரிவில் ஆஸ்திரேலியாவின் **ஜேம்ஸ் வில்லட் 75 தங்கப் பதக்கங்கள்** வென்றதோடு உலக சாதனையும் படைத்தார்.
- பிரிட்டனின் **ஜேம்ஸ் டெட்டமான்** வெண்கலம் வென்றனர்.

**அங்குர் மிட்டல்:**

- இந்திய துப்பாக்கி சுடும் வீரர்
- **2014 காமன்வெல்த்** போட்டியில் ஆண்கள் பிரிவில் பங்கேற்றார்.

## ஜிது ராய் - ஹீனா ஜோடிக்கு தங்கம்:

- **10 மீ. கலப்பு இரட்டையர் ஏர் பிஸ்டல்** பிரிவில் இந்தியாவின் **ஜிது ராய் - ஹீனா சித்து ஜோடி தங்கம்** வென்றது.
- ஜப்பானின் யூகாரி கொனிஷி-டோமோயூகி மட்கடா ஜோடியைத் தோற்கடித்தது.
- **ஸ்லோவேனியாவின் நபாஸ்வான்-கெவின் வென்டா** ஜோடிக்கு 3-ஆவது இடம் கிடைத்தது.

**ஜிது ராய்:**

- ஜிதுராய் (பிறப்பு 26 ஆகஸ்ட் 1987) இந்திய விளையாட்டு வீரர்
- 10 மீட்டர் துப்பாக்கி சுடுதல் பிரிவிலும், 50 மீட்டர் வெடி குழல் பிரிவிலும் பங்கேற்றுள்ளார்.
- 2014 ஆசிய விளையாட்டு 50 மீட்டர் துப்பாக்கி சுடுதல் பிரிவில் தங்கமும், 10 மீட்டர் பிரிவில் வெண்கல பதக்கமும் வென்றார்.

## ஆடவர் 50 கி.மீ. நடைப் போட்டி: சந்தீப் குமார் தேசிய சாதனை:

- ஆடவர் **50 கி.மீ.** நடைப் போட்டியில் **சந்தீப் குமார்** தேசிய சாதனை படைத்தார். தில்லியில் நடைபெற்ற தேசிய அளவிலான நடைப் போட்டியில் 50 கி.மீ. பிரிவில் பங்கேற்ற சந்தீப் குமார் **3 மணி, 55 நிமிடம், 59.05 விநாடிகளில்** இலக்கை எட்டினார். இதன் மூலம் **தங்கப் பதக்கம்** வென்றார்.
- **2014-இல் சீனாவில் நடைபெற்ற உலக நடைப் போட்டியில் சந்தீப் குமார்** 3 மணி, 56 நிமிடம், 22 விநாடிகளில் இலக்கை எட்டியதே தேசிய சாதனையாக இருந்தது. சந்தீப் குமாருக்கு அடுத்தபடியாக **ஜிதேந்தர் சிங்** (4:02:11.58) வெள்ளிப் பதக்கமும், **சந்தன் சிங்** (4:04:18.41) வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

## ஆசிய ரக்பி: இந்தியாவுக்கு வெள்ளி:

- **ஆசிய ரக்பி செவன்** போட்டியில் இந்திய மகளிர் அணி **வெள்ளிப் பதக்கம்** வென்றது.
- **லாவ்ஸ் தலைநகர் வியன்டியான்** நகரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இந்தியா, தென் கொரியா, பிலிப்பின்ஸ், மலேசியா, நேபாளம், பாகிஸ்தான், லாவ்ஸ் என மொத்தம் 7 அணிகள் பங்கேற்றன. இந்தியா 5-0 என்ற கணக்கில் பாகிஸ்தானை தோற்கடித்தது. ஆனால் இந்தியா, தென் கொரியாவிடம் தோற்றது.

**ஆசிய ரக்பி விளையாட்டு:**

- தொடங்கப்பட்டது - 2000
- அதிக முறை சாம்பியன் பட்டம் வென்ற நாடு - ஜப்பான்

## பிசிசிஐ பொது மேலாளர் ஆர்.பி.ஷா ராஜிநாமா:

- இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (பிசிசிஐ) பொது மேலாளர் **ஆர்.பி.ஷா** தனது பதவியை ராஜிநாமா செய்துள்ளார்.

## 2- ஆவது இடத்தில் மிதாலி ராஜ்:

- சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐசிசி) ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான பேட்டிங் தரவரிசையில் **இந்திய மகளிர் அணி கேப்டன் மிதாலி ராஜ் 2-ஆவது இடத்துக்கு** முன்னேறியுள்ளார்.
- அதேபோல், இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர்களான **தீப்தி சர்மா** 17 இடங்கள் முன்னேறி **38-ஆவது இடத்துக்கும், திருஷ் காமினி** 11 இடங்கள் முன்னேறி **41-ஆவது** இடத்துக்கும் வந்துள்ளனர்.
- இவர்கள் இருவரும் இந்த இடத்துக்கு முன்னேறியிருப்பது இது முதல் முறையாகும்.

| தரவரிசை | பெயர் | நாடு |
|---|---|---|
| 1 | மெக்லானிங் | ஆஸ்திரேலியா |
| 2 | மிதாலிராஜ் | இந்தியா |
| 3 | எல்லிச் பொரி | ஆஸ்திரேலியா |
| 4 | சுசீ பேட்ஸ் | நியூசிலாந்து |
| 5 | ஆமி சதா வெட்டி | நியூசிலாந்து |

## எ.ஃப்.ஐ.எச்: விருது டோமென், நவோமி தேர்வு:

- சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் (எ.ஃப்.ஐ.எச்.) சார்பில் வழங்கப்படும் ஆண்டின் சிறந்த வீரர், வீராங்கனைக்கான விருதுக்கு **பெல்ஜியம் கேப்டன் ஜான் டோமென், நெதர்லாந்து வீராங்கனை நவோமி வான்** ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- **சிறந்த கோல் கீப்பர் விருதுக்கு** இந்திய கேப்டன் **ஸ்ரீஜேஷ், சிறந்த வளர்ந்து வரும் வீரர்** விருதுக்கு **இந்திய வீரர் ஹர்மான்ப்ரீத் சிங்** ஆகியோரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டிருந்தன.

**எ.ஃப்.ஐ.எச்: விருது:**

- ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு ___ 1998.
- சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பு ஆண்டு தோறும் உலகின் சிறந்த ஆண் மற்றும் பெண் ஹாக்கி விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## இந்தியா-உஸ்பெகிஸ்தான் டேவிஸ் கோப்பை: பெங்களூரில் நடைபெறுகிறது:

- இந்தியா-உஸ்பெகிஸ்தான் இடையிலான **ஆசிய-ஓசியானியா குரூப்-1 டேவிஸ் கோப்பை** டென்னிஸ் போட்டி **பெங்களூரில்** நடைபெறுகிறது.
- விளையாடாத கேப்டனான (நான் பிளேயிங் கேப்டன்) **மகேஷ் பூபதியின்** தலைமையில் இந்திய அணி பங்கேற்கவுள்ள முதல் தொடர் இது.

## இந்தியா அணி சாம்பியன்:

- **ஐசிசி மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட்** போட்டியில் தென் ஆப்பிரிக்க அணியை வீழ்த்தி **இந்திய அணி சாம்பியன் பட்டம்** வென்றது.
- **இலங்கை தலைநகர் கொழும்பில்** நடைபெற்றது.
- இந்தியாவின் **தீப்தி சர்மா ஆட்ட நாயகியாகவும்**, தென் ஆப்பிரிக்காவின் **சுனேலஸ் தொடர் நாயகியாகவும்** அறிவிக்கப்பட்டனர்.

## துப்பாக்கி சுடுதல் உலகக் கோப்பை போட்டியை 2019-இல் நடத்துகிறது இந்தியா:

- 2019-ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த **உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியை இந்தியாவில் நடத்துவதற்கு** ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- இந்தப் போட்டியில் வெற்றி பெறுபவர்கள் **2020-ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்கு** தகுதி பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
- முன்னதாக, இந்த துப்பாக்கி சுடுதல் உலகக் கோப்பை போட்டியை நடத்த இந்தியா முன்மொழிந்திருந்தது.

- இந்நிலையில், **புதுதில்லியில் நடைபெற்ற சர்வதேச துப்பாக்கி சுடுதல்** போட்டிகளுக்கான சம்மேளனத்தின் (ஐஎஸ்எஸ்எ.்ப்) நிர்வாகக் கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

- இந்த உலகக் கோப்பை போட்டியில் **ஷாட்கன், ரைபிள், பிஸ்டல்** ஆகிய 3 பிரிவுகள் உள்ளன.

## துளிகள்....

- ஆசிய ஹாக்கி சம்மேளனத்தின் துணைத் தலைவராகவும், அந்த அமைப்பின் வர்த்தக மற்றும் தொலைக்காட்சிக் குழுவின் தலைவராகவும் **அபிஜித் சர்கார்** நியமிக்கப்பட்டார்.

- விஜய் ஹசாரே டிராபி கிரிக்கெட் போட்டியில் **தோனி ஜார்க்கண்ட்** அணிக்கும், **ஹர்பஜன் பஞ்சாப் அணிக்கும்** தலைமை தாங்குகின்றனர்.

## ஐபிஎல் ஏலம்: பென் ஸ்டோக்ஸை ரூ. 14.5 கோடிக்கு வாங்கியது புணே:

- **பத்தாவது** ஐபிஎல் வீரர்கள் ஏலத்தில் **இங்கிலாந்து ஆல்ரவுண்டரான பென் ஸ்டோக்ஸ்** அதிகபட்சமாக ரூ. 14.5 கோடிக்கு ஏலம் போனார்.

- அவரை **ரைஸிங் புணே சூப் பர்ஜயண்ட்ஸ்** அணி வாங்கியது.

- பென் ஸ்டோக்ஸுக்கு அடிப்படை விலையாக ரூ. 2 கோடி நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், அதைவிட 7 மடங்கு அதிக விலைக்கு ஏலம் போயிருக்கிறார்.

- அவருக்கு அடுத்தபடியாக மற்றொரு **இங்கிலாந்து வீரரான டைமல் மில்ஸை** ரூ. 12 கோடிக்கு வாங்கியது **பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸ்.**

## தமிழக வீரர் நடராஜனுக்கு ரூ. 3 கோடி:

- சர்வதேசப் போட்டிகளில் விளையாடாத இந்திய வீரர்கள் பலர் நல்ல விலைக்கு ஏலம் போயினர்.
- அவர்களில் அதிகபட்சமாக **தமிழக வீரர் டி. நடராஜன்** ரூ. 3 கோடிக்கு ஏலம் போனார்.
- இவர் தனது அடிப்படை விலையைவிட (ரூ. 10 லட்சம்) 30 மடங்கு அதிக விலைக்கு ஏலம் போயிருக்கிறார். அவரை **பஞ்சாப் அணி** வாங்கியுள்ளது.
- வேகப்பந்து வீச்சாளர் **முகமது சிராக்கை** ரூ. 2.6 கோடிக்கு ஹைதராபாதும், இடது கை வேகப்பந்து வீச்சாளரான **அனிகெட் சௌத்ரியை** ரூ. 2 கோடிக்கு பெங்களூரும், ஆல்ரவுண்டர்

**கிருஷ்ணப்பா கௌதமை** ரூ. 2 கோடிக்கு மும்பை அணியும், தமிழக வீரர் **முருகன் அஸ்வினை** ரூ. 1 கோடிக்கு டெல்லி அணியும் வாங்கின.

## தென்னிந்திய கபடி: அரியலூர் சாம்பியன்:

- **புதுக்கோட்டை மாவட்டம்**, வெள்ளனூரில் நடைபெற்ற தென்னிந்திய அளவிலான ஆடவர் கபடிப் போட்டியில், **அரியலூர் மாவட்ட அணி சாம்பியன்** ஆனது. 65 அணியினர் பங்கேற்றனர்.
- இதில், அரியலூர் மாவட்டம், **வென்னங்குடி அணி முதலிடத்தைப்** பிடித்துள்ளது.
- 2-ஆவது இடம் பிடித்து நாகப்பட்டினம். 3-ஆவது இடத்தைப் பிடித்தது சேலம்.

## விடை பெற்றார் அப்ரிதி:

- பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரரான **ஷாகித் அப்ரிதி** சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
- இதன் மூலம் அவருடைய **21 ஆண்டுகால சர்வதேச கிரிக்கெட்** வாழ்க்கை முடிவுக்கு வந்துள்ளது.
- பாகிஸ்தான் சூப்பர் லீக் போட்டியில் இன்னும் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து விளையாடுவேன் என்றார்.
- சிக்ஸர்களை விளாசி எதிரணி பந்துவீச்சாளர்களுக்கு கிலியை ஏற்படுத்துவது என்பது அப்ரிதிக்கு கை வந்த கலை._ **'பூம் பூம்' அப்ரிதி** என அழைக்கப்பட்டார்.

## சர்வதேச பாட்மிண்டன்:

- சர்வதேச பாட்மிண்டன் தரவரிசையில் இந்திய வீராங்கனை **பி.வி.சிந்து 5-ஆவது இடத்துக்கு** முன்னேறியுள்ளார். சாய்னாவுக்குப் பிறகு தரவரிசையில் முதல் 5 இடங்களுக்குள் முன்னேறிய 2-ஆவது இந்திய வீராங்கனை சிந்து ஆவார். இதுதான் சிந்துவுக்கு அதிகபட்ச தரவரிசை என்பது குறிப்பிடத்தக்கது.

## பார்வையற்றோருக்கான உலகக் கோப்பை கிரிக்கெட்:

- பார்வையற்றோருக்கான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் சாம்பியனான இந்திய அணியின் கேப்டன் - **அஜய் குமார்.**

## ஆசியன் கால்பந்து கூட்டமைப்பு:

- ஆசியன் கால்பந்து கூட்டமைப்பின் 18 வயதிற்குட்பட்டோருக்கான கால்பந்து சாம்பியன்சிப் போட்டிகள் 2017 **மியான்மரில்** நடைபெறவுள்ளது.

## ஆசிய ஹாக்கி:

- ஆசிய ஹாக்கி கூட்டமைப்பின் துணைத்தலைவராக இந்தியாவின் **அபிஜித் சர்க்கார்** நியமிக்கப்பட்டுள்ளார்.

## பெண்களுக்கான உலக செஸ் சாம்பியன்சிப் போட்டி 2017:

- பெண்களுக்கான உலக செஸ் சாம்பியன்சிப் போட்டி 2017 **ஈரான் நாட்டின் தலைநகர் டெக்ரானில்** நடைபெற்று வருகிறது.

## 'Spor Tale':

- 'Spor Tale' என்ற பெயரில் இந்தியாவின் முதல் விளையாட்டு இலக்கிய திருவிழா நடைபெறும் நகரம் - **பூனே**

## ஐ.சி.சி. 11வது பெண்கள் கிரிக்கெட்:

- ஐ.சி.சி. 11வது பெண்கள் கிரிக்கெட் உலகக்கோப்பைப் போட்டிகள் 2017 **இங்கிலாந்தில்** ஜீன் 2017 மாதத்தில் நடைபெறவுள்ளன.

## கத்தார் சாம்பியன்!:

- **கத்தார் ஓபன் டென்னிஸ்** போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற **செக் குடியரசின் கரோலினா பிளிஸ்கோவ** கத்தார் தலைநகர் தோஹாவில் நடைபெற்ற இறுதிச் சுற்றில் பிளிஸ்கோவர் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கியை தோற்கடித்தார்.

**பாதுகாப்பான இணைய தினம் - பிப்ரவரி 7**

# தமிழ்நாடு

## தமிழகத்தில் ஜல்லிக்கட்டு:

- தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கக் கோரி நடைபெற்ற போராட்டத்தில் நடந்த **வன்முறைச் சம்பவங்கள் குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி எஸ்.ராஜேஸ்வரன் தலைமையில் விசாரணை ஆணையம்** அமைக்கப்பட்டுள்ளது.

## சென்னை எண்ணூர்காமராஜர் துறைமுகம்:

- சென்னை எண்ணூர்காமராஜர் துறைமுகம் அருகே இரு கப்பல்கள் மோதிக் கொண்டதில் கடந்த ஜனவரி 29-ஆம் தேதி கடலில் எண்ணெய் கசிவு ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தால் சென்னை கடல் பகுதியில் வெகு தொலைவுக்கு எண்ணெய் கசிவு படலம் படர்ந்துள்ளது.

## ஒடிஷா மாநிலத்திலுள்ள தாழ்த்தப்பட்டோர் ஜாதிகள்:

- ஒடிஷா மாநிலத்திலுள்ள தாழ்த்தப்பட்டோர் ஜாதிகள் பட்டியலில் மாற்றங்களைச் செய்வதற்காக, மத்திய அரசு **1950 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு** (பட்டியலினத்தவர்) ஆணையில் திருத்தம் மேற்கொண்டுள்ளது.

## பள்ளி பொதுத்தேர்வு விண்ணப்பம்:

- பள்ளி பொதுத்தேர்வு விண்ணப்பங்களில் **மூன்றாம் பாலினம் எனும் பிரிவை பீகார் அரசு** அறிமுகப்படுத்தியுள்ளது. உச்சநீதிமன்றம் கடந்த 2014 ஆம் ஆண்டில், திருநங்கைகளை மூன்றாம் பாலினமாக அங்கீகரித்தது குறிப்பிடத்தக்கது.

## “ஆப்பிள்” மொபைல் ஃபோன் நிறுவனம்:

- “ஆப்பிள்” மொபைல் ஃபோன் நிறுவனம் இந்தியாவில் தனது தயாரிப்புத் தொழிற்சாலையைத் துவங்கவுள்ள நகரம் - **கர்நாடகா**

## தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு துறைகள்:

- தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு துறைகளைச் சேர்ந்த சாதனையாளர்களை கௌரவிக்கும் வகையில், **“தமிழகத்தின் பெருமை”** (பிரைட் ஆஃப் தமிழ்நாடு) எனும் சாதனையாளர் விருது ரவுண்ட் டேபிள் இந்தியா அமைப்பின் சார்பில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

## "இ-காபினட்" முறையை:

- "இ-காபினட்" முறையை முதன்முதலில் அமல்படுத்தியுள்ள **வடகிழக்கு மாநிலம் - அருணாச்சலப் பிரதேசம்.** இந்த திட்டத்தின் மூலம் காபினட் அமைச்சர்கள் கூட்டங்கள் தொடர்பான குறிப்புகளை முன்னதாகவே டிஜிட்டல் முறையில் படித்துக்கொள்ள முடிவதோடு, அனைத்து காபினட் நடவடிக்கைகளும் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன.

## "பெண்கள் சம உரிமை வரைவு மசோதா-2016":

- பெண்களுக்கு சம உரிமைகள் வழங்கப்படுவதை உறுதி செய்யும் வரைவு மசோதாவை ஆய்வு செய்ய மூத்த அமைச்சர்கள் அடங்கிய குழுவினை பிரதமர் நரேந்திர மோடி அமைத்துள்ளார்.
- சமூகத்தில் பல்வேறு நிலைகளில் பெண்களுக்கு வாய்ப்பளிக்கு வகையில் அப்போதைய தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சிக்காலத்தில் "பெண்களுக்கு அதிகாரமளித்தல் வரைவு மசோதா-**2001" உருவாக்கப்பட்டது.** எனினும், பல்வேறு காரணங்களால் இந்த வரைவு மசோதா சட்டமாக்கப்படவில்லை.
- இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி மீண்டும் அமைந்ததும் இந்த வரைவு மசோதாவில் பல்வேறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர், **"பெண்கள் சம உரிமை வரைவு மசோதா-2016"** என்ற பெயரில் புதிய வரைவு தயாரிக்கப்பட்டது.
- வாழ்வின் அனைத்து நிலைகளிலும் பெண்களுக்கும் சம உரிமைகள் வழங்கும் வகையிலான சமூகத்தை உருவாக்குவதே இந்த வரைவு மசோதாவின் முக்கிய நோக்கமாகும்.

## காகிதம் உற்பத்தி:

- கேரள மாநிலம், மூணார் அருகே **யானையின் சாணத்திலிருந்து காகிதம் உற்பத்தி** செய்யப்படுகிறது. மூணார் அருகே சிருஷ்டி நல்வாழ்வு சங்கம் சார்பில் **"அதுல்யா"** எனப்படும் கைகளால் தயாரிக்கப்படும் காகித உற்பத்திப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இங்கு யானையின் சாணத்திலிருந்து காகிதத்தை உற்பத்தி செய்கின்றனர்.

## பிப்ரவரி 2017:

- பிப்ரவரி 2017-ல் சர்வதேச சிறப்புக் கல்வி மாநாடு நடைபெறவுள்ள மாநிலம் - **கேரளா**

## ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 14:

- ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 14 ஆம் தேதியை **"பெற்றோரை வழிபடும் தினமாக"** (Parents' Worship Day / Matru-Pitru Diwas) என அனுசரிக்கும் மாநிலம் - **சட்டிஸ்கர்**

## கம்பளா போட்டி நடத்த சட்ட மசோதா கர்நாடக சட்டப்பேரவையில் தாக்கல்:

- கர்நாடக மாநிலம் மங்களூருவை சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் துளு மக்கள் கடந்த 200 ஆண்டுகளுக்கும் மேலாக கம்பளா போட்டியை நடத்தி வருகின்றனர்.
- சங்கராந்தி திருவிழாவின்போது எருமை, காளைகளை வயலில் விரட்டி செல்லும் போட்டி நடத்தப்படும்.
- கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் கம்பளா போட்டிக்கு நீதிமன்றம் தடை விதித்தது.
- இதே போல கர்நாடகாவில் கம்பளா போட்டி நடத்த, புதிய சட்டம் இயற்ற வேண்டும் என இளைஞர்கள் கூறுகின்றனர்.

**கம்பளா விளையாட்டு:**

- கம்பளா விளையாட்டு என்பது கர்நாடக மாநிலத்தின் சில கடலோர மாவட்டங்களில் கொண்டாடப்படும் ஒரு வகை விளையாட்டாகும்.
- இவ்விளையாட்டின் போது எருமை காளைகளைச் சேற்றில் விரட்டி செல்லுவர்.
- 200 ஆண்டுகள் பழமை வாய்ந்த இவ்விளையாட்டு விலங்குகள் நலவாரியத்தால் சில ஆண்டுகளுக்கு முன் கர்நாடக உயர் நீதி மன்றத்தால் தடை செய்யப்பட்டது.

## சத்திய ஞான சபை:

- கடலூர் மாவட்டம், வடலூரில் வள்ளலார் நிறுவிய **சத்திய ஞான சபையில் 146**-ஆவது தைப் பூச ஜோதி தரிசன விழா நடைபெற்றது.
- இதையடுத்து, வள்ளலார் சித்தி பெற்ற மேட்டுக்குப்பம் சித்தி வளாகத்தில் திருஅறை தரிசனம் நடைபெற்றது.

**வள்ளலார்:**

- பிறந்த ஆண்டு - 1823
- பிறந்த ஊர் - கடலூர் மாவட்டம் சிதம்பரம் (மருதூரில்
- இவர் கொள்கை : கடவுள் ஜோதி வடிவம் ஆவர்
- நூல்கள் : திருவருட்பா, மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம்
- இறப்பு : 30 ஜனவரி 1873

## பண்பாட்டு போராட்டத்தைத் தாங்கிப் பிடித்திருக்கும் தமிழ் மொழி:

- பண்பாட்டு போராட்டத்தை தாங்கிப் பிடித்திருக்கும் சிறப்பு பெற்றது தமிழ் மொழி என குன்றக்குடி ஆதீனம் பொன்னம்பல அடிகளார் பேசினார்.
- **சேலம் கம்பன் கழகத்தின் 43 -ஆம்** ஆண்டு விழா தொடங்கியது.

## தட்டம்மை ரூபல்லா:

- **தட்டம்மை ரூபல்லா:** பிறந்த குழந்தைகளுக்கு வழங்கப்படும் தட்டம்மை தடுப்பூசியுடன், ரூபல்லா அம்மைக்கான தடுப்பூசியையும் சேர்த்து ஒரே ஊசியாக போடும் திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- பிறந்து **9 மாதம் நிறைவடைந்த குழந்தைகளில் இருந்து 15 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு** இந்த தடுப்பூசி வழங்கப்படும்.
- தமிழகத்தில் தட்டம்மை ரூபல்லா தடுப்பூசி முகாம் நடைபெற்று வருகிறது.

### ரூபெல்லா தட்டம்மை:

- ரூபெல்லாவை **ஜெர்மனிய தட்டம்மை** அல்லது **மூன்றுநாள் தட்டம்மை** என அழைக்கப்படும்.
- ரூபெல்லா **வைரஸால்** ஏற்படும் ஒரு தொற்று ஆகும்.
- இந்நோய் **18-ம் நூற்றாண்டில்** கண்டறியப்பட்டது.
- **பிரெடெரிக் ஹா.ஃப்மேன்** என்பவர் 1740-ல் ரூபெல்லா நோய்க்கு முதல் மருத்துவ விளக்கம் கொடுத்தார்.

## சுகாதாரத்தில் முதலிடம் பெற்ற கும்பகோணம் ரயில் நிலையம்:

- கடந்த ஆண்டு ரயில்வே நிர்வாகம் வெளியிட்ட அகில இந்திய அளவில் சுகாதாரமான ரயில் நிலையங்கள் பட்டியலில் **இந்திய அளவில் 5-வது இடத்தையும், தென்னக ரயில்வே அளவில் முதலிடத்தையும்** பெற்ற கும்பகோணம் ரயில் நிலையம் இன்று 141-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.
- கடந்த 15.2.1877-ம் ஆண்டு தஞ்சாவூர்-மயிலாடுதுறை இடையே ரயில் பாதை அமைக்கப்பட்டு அதில் முதல் ரயில் விடப்பட்டது.
- கும்பகோணம் வழியாக செல்லும் இந்த **ரயில் பாதை மெயின் லைன்** என அழைக்கப்படுகிறது.
- இந்த வழியாகத்தான், **போட் மெயில்** என்றழைக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ரயில் **சென்னை எழும்பூரில் இருந்து தனுஷ்கோடி** வரை இயக்கப்பட்டது.

## உ.பி. தேர்தல்: மாற்றுத் திறனாளி வாக்காளர்களுக்கு இலவச வாகன வசதி:

- உத்தரப் பிரதேச பேரவைத் தேர்தலில் மாற்றுத் திறனாளிகள் வாக்களிப்பதற்கு வசதியாக சிறப்பு ஏற்பாடுகளை **கான்பூர்** மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.
- அந்த மாவட்டத்தில் உள்ள மாற்றுத் திறனாளி வாக்காளர்களின் வீடுகளுக்குச் சென்று வாகனங்கள் மூலம் அவர்களை வாக்குச் சாவடிக்கு அழைத்து வருவதற்கும், திருப்பிக் கொண்டு சென்று விடுவதற்கும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

## ஐ.நா. பாதுகாப்புக் குழு அவசரக் கூட்டம் நடத்த வலியுறுத்தல்:

- வட கொரியா மீண்டும் ஏவுகணை சோதனை நடத்தியதைத் தொடர்ந்து **ஐ.நா. பாதுகாப்புக் குழு அவசரக் கூட்டம்** கூட்டி விவாதிக்க வேண்டும் என்று அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தியுள்ளன.
- வட கொரியா புதிய ஏவுகணை சோதனையை நிகழ்த்தியது.
- ஐ.நா. பாதுகாப்புக் குழு அந்நாட்டின் மீது கடுமையான தடைகளை விதித்திருந்தது.
- அந்தத் தடைகளையும் மீறி புதிய ஏவுகணை சோதனை நடத்தப்பட்டது.
- இதையடுத்து, வட கொரியாவின் அத்துமீறல் குறித்து விவாதிக்க ஐ.நா. பாதுகாப்புக் குழு அவசரக் கூட்டம் நடத்த வேண்டும் என்று **அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா** உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தியுள்ளன.
- கடந்த 2006-ஆம் ஆண்டு தனது முதல் ஏவுகணை சோதனையை அந்நாடு நடத்தியது.
- அப்போதிலிருந்து வட கொரியா மீது ஐ.நா. பாதுகாப்புக் குழு சார்பில் 6 கட்டுப்பாட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என்பது நினைவுகூரத்தக்கது.
- இதே போர் விமான தளத்திலிருந்து அணு ஆயுதம் ஏற்றிச் செல்லும் திறன் கொண்ட முசுடான் ஏவுகணையை கடந்த ஆண்டு இரு முறை வெற்றிகரமாக வட கொரியா சோதனை செய்தது நினைவுகூரத் தக்கது.

## ஹைட்ரோ கார்பன் எரிவாயு திட்டம்:

- நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் **ஓஎன்ஜிசி நிறுவனம்** மூலம் பல ஆயிரம் அடி ஆழத்துக்கு ஆழ்துளை கிணறுகள் அமைத்து **இயற்கை எரிவாயு** இருப்பது கண்டறியப்பட்டு வருகிறது.
- **புதுக்கோட்டை** மாவட்டம் **நெடுவாசல்** கிராமத்தில் **ஓஎன்ஜிசி** நிறுவனத்தின் மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு எரிவாயு சோதனை நடத்தப்பட்டது.
- 2 ஆயிரம் அடி ஆழத்துக்கு ஆழ்துளைக் கிணறு அமைத்து நடத்திய சோதனையில், நிலத்தடியில் எரிவாயு இருப்பது கண்டறியப்பட்டது.

- இந்நிலையில், தமிழகத்தில் நெடுவாசல், புதுச்சேரி மாநிலம் காரைக்கால் உட்பட நாடு முழுவதும் **31 இடங்களில் ஹைட்ரோ கார்பன் வாயுவை** எடுக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்து உத்தரவிட்டது.

## ஜல்லிக்கட்டு இளைஞர்களின் 'என் தேசம் என் உரிமை' புதிய கட்சி உதயம்:

- ஜல்லிக்கட்டு போராட்டம் நடத்திய இளைஞர்கள் **'என் தேசம் என் உரிமை'** என்ற பெயரில் புதிய கட்சியை தொடங்கியுள்ளனர்.
- சென்னை மெரினா கடற்கரையில் ஜல்லிக்கட்டுக்காக இளைஞர்கள் நடத்திய போராட்டம் நாட்டையே திரும்பி பார்க்க வைத்தது.
- அந்த இளைஞர்கள் இணைந்து **புதிய அரசியல் கட்சிக்கு 'என் தேசம் என் உரிமை'** என்று பெயரிட்டுள்ளனர்.
- அதைத் தொடர்ந்து கட்சி கொடியையும் அறிமுகம் செய்தனர்.
- **தேசிய கொடியின் வண்ணமும், கொடியின் நடுவில் இளைஞர் ஒருவர் அடிமை சங்கிலியை** உடைத்தது போன்ற படமும் இடம் பெற்றுள்ளது.

## எச்1என்1 வைரஸ்

## தமிழகத்தில் நிலை கொண்டுள்ளதா?:

- தமிழகத்தில் பன்றிக் காய்ச்சலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், அதற்குக் காரணமான **எச்1என்1 வைரஸ்** தமிழகத்திலேயே நிலை கொண்டுள்ளது என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.
- **பருவகால காய்ச்சல்:** பன்றிக்காய்ச்சலை பருவகால காய்ச்சல் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துவிட்டது.
- எனவே, பன்றிக் காய்ச்சல் உயிர்க்கொல்லி இல்லை.
- ஆனால் ஆரம்ப நிலையில் சிகிச்சை, தொடர் கண்காணிப்பு இல்லாவிட்டால் உயிரிழப்பு நேரக்கூடும்.
- **தமிழகத்திலேயே நிலை கொண்டுள்ளது:** மனிதரிடம் இருந்துதான் மற்றொருவருக்குப் பரவுகிறது.
- சில ஆண்டுகளுக்கு முன்பு வெளிநாடுகளில் இருந்து **பன்றிக் காய்ச்சல் வைரஸ் இந்தியாவுக்கு** வந்தது.
- எச்1என்1 வைரஸின் முக்கிய தங்குமிடமாக தமிழகம் உள்ளது.
- இந்த வைரஸானது தமிழகத்திலேயே நிலை கொண்டுள்ளது.

- அந்த வைரஸ் பரவுவதற்கு ஏற்ற காலநிலை ஏற்படும்போது, அது தன் கோர முகத்தைக் காட்டுகிறது.

## கூடங்குளம் முதல் அணு உலையில் 3 மாதங்களுக்குப் பின் மின் உற்பத்தி:

- திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளத்தில் அமைந்துள்ள முதலாவது அணு உலையில், மூன்று மாதங்களுக்குப் பின்னர் மின் உற்பத்தி தொடங்கியுள்ளது.
- இந்திய-ரஷிய கூட்டு முயற்சியில் கூடங்குளத்தில் தலா ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தித் திறன் மிக்க இரு அணு உலைகள் இயங்கி வருகின்றன.
- **முதலாவது அணு உலையில் 2014** ஆம் ஆண்டு வணிக ரீதியிலான மின் உற்பத்தி தொடங்கி மத்திய மின் தொகுப்பில் இணைக்கப்பட்டது.
- கூடங்குளம் முதலாவது அணு உலையில் **6244.24 மில்லியன் யூனிட் மின்சாரம்** உற்பத்தி செய்யப்பட்டது.

## மகளிருக்கு மானியத்தில் இரு சக்கர வாகனத் திட்டம்:

- உழைக்கும் **மகளிருக்கு 50 சதவீத மானியத்துடன்** இரு சக்கர வாகனங்கள் வாங்கும் திட்டத்துக்கான கோப்பில் **முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி (**பிப்.20) கையெழுத்திட்டார்.
- இந்தத் திட்டம், மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் நினைவாக '**அம்மா இரு சக்கர வாகனத் திட்டம்**' என்ற பெயரில் அமைக்கப்படும் என அவர் அறிவித்தார்.
- மேலும் **500 டாஸ்மாக் கடைகள்** மூடப்படுவது உள்ளிட்ட ஐந்து முக்கியத் திட்டங்களுக்கான கோப்புகளில் அவர் கையெழுத்திட்டு தனது பணிகளைத் தொடங்கினார்.

1. பணியிடங்களுக்கும், பிற வேலைகளுக்கும் மகளிர் எளிதில் செல்லும் வகையில் இரு சக்கர வாகனங்கள் வாங்க **50 சதவீதம் மானியம்** வழங்கப்படும் என்று அதிமுக தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

   இந்தத் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் ஆண்டுக்கு ஒரு லட்சம் மகளிருக்கு இரு சக்கர வாகனம் வாங்க 50 சதவீதம் மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.20 ஆயிரம் வழங்கப்படும்.
2. **மீனவர்களுக்கு வீடுகள்:** மீனவர்களுக்கென தனியாக வீடு கட்டும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, தமிழகத்தில் மீனவர்களுக்கான தனி வீட்டு வசதி திட்டத்தைச் செயல்படுத்த உத்தர விட்டு அதற்கான கோப்பில் முதல்வர் கையெழுத்திட்டார்.

3. **மாதாந்திர உதவித் தொகை:** வேலைவாயப்பற்ற இளைஞர்களுக்கு இப்போது வழங்கப்பட்டு வரும் மாதாந்திர உதவித் தொகை இரண்டு மடங்காக உயர்த்தப்படும்.

   அதன்படி, 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாத இளைஞர்களுக்கு வழங்கி வரும் மாதாந்திர உதவித் தொகை ரூ. 200 ஆகவும், தேர்ச்சி பெற்றோருக்கு ரூ. 300 ஆகவும், பிளஸ் 2 தேர்ச்சி பெற்றோருக்கு ரூ. 400 ஆகவும், பட்டப்படிப்பு, முதுநிலை படித்த இளைஞர்களுக்கு ரூ. 600 ஆகவும் உயர்த்தி அதற்கான கோப்பில் முதல்வர் கையெழுத்திட்டார்.

4. **மகப்பேறு நிதியுதவித் திட்டம்:** ஏழைப் பெண்களுக்கு வழங்கப்பட்டு வந்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி கடந்த 2011-ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்பட்டது. இந்தத் தொகையானது, ரூ. 12 ஆயிரத்திலிருந்து ரூ. 18 ஆயிரமாக உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

5. **மேலும் 500 டாஸ்மாக் கடைகள் மூடப்படும்:** மேலும் 500 டாஸ்மாக் கடைகள் மூடப்படும் என்று முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்தார்.

## ஜல்லிக்கட்டு போராட்டம்:

- ஜல்லிக்கட்டு போராட்டத்தில் நிகழ்ந்த வன்முறை குறித்து விசாரணை நடத்த அமைக்கப்பட்டுள்ள ஒரு நபர் விசாரணைக் குழுவின் தலைவர் **நீதிபதி எஸ். ராஜேஸ்வரன்** ஆவர்.

## காவிரி நதிநீர் நடுவர் மன்றம்:

- காவிரி நதிநீர் நடுவர் மன்றத்துக்கு புதியத் தலைவராக அபய் மனோகர் சாப்பே என்பவரை உச்சநீதிமன்றம் நியமனம் செய்துள்ளது. காவிரி நதிநீர் நடுவர் மன்றத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்து வந்த **பல்வீரசிங் சௌகான்** 1990 ஜூன் 2 ஆம் தேதி பதவியிலிருந்து விலகினார். அதன் பிறகு இந்தப் பொறுப்புக்கு வேறொருவரை நியமிக்காமல் மத்திய அரசு காலம் தாழ்த்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

## அதிக அளவில் முனைவர் பட்டம்:

- அதிக அளவில் முனைவர் பட்டம் பெற்ற மாணவ, மாணவர்களை உருவாக்குவதில் பிற இந்திய மாநிலங்கள் அனைத்தையும் விட தமிழ்நாடு முன்னிலையில் இருப்பதாக மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## ‘சிசேரியன்’ முறையில் குழந்தை: இரண்டாம் இடத்தில் தமிழகம்:

- நாட்டிலேயே அதிகமாக, **தெலுங்கானாவில்,** அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில், **58 சதவீத குழந்தைகள்**, சிசேரியன் அறுவை சிகிச்சை மூலம் பிறக்கின்றன. அடுத்ததாக, **தமிழகத்தில்** உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில், **34.1 சதவீத குழந்தைகள்,** சிசேரியன் மூலம் பிறக்கின்றன. **தெலுங்கானாவில்**, தனியார் மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளில், **74.9 சதவீதம்,** சிசேரியன் முறையில் பிறக்கின்றன. **மேற்கு வங்கத்தில்** உள்ள தனியார் மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளில்**, 70.9 சதவீதம்**, சிசேரியன் முறையில் பிறக்கின்றன.

## கீழடி நாகரிகம்:

- ‘கீழடி நகர நாகரிகம், **கி.மு., இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது’** என, அமெரிக்காவில் செய்யப்பட்ட, கார்பன் பகுப்பாய்வின் மூலம், தெரிய வந்துள்ளது. மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில், 2014 முதல், இரு கட்டங்களாக, மத்திய தொல்லியல் துறை அகழாய்வை மேற்கொண்டது. அதில், 5,800 தொல் பொருட்கள் கிடைத்தன. அவற்றில், 1.95 மீட்டர் ஆழத்தில் கிடைத்த, கட்டட தொல்பொருட்களில் இருந்து, இரு கரிமப் பொருட்கள், அமெரிக்காவின், புளோரிடா மாகாணத்திற்கு, பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன. அங்குள்ள, **“பீட்டா” பகுப்பாய்வு கூடத்தில், கார்பன் பகுப்பாய்வு சோதனை** நடந்தது. இதன் முடிவுகள், தற்போது வெளியாகி உள்ளன. அதில், கீழடி கரிமப் பொருட்கள், கி.மு., இரண்டாம் நூற்றாண்டை சேர்ந்தவை என, தெரிய வந்துள்ளது. இதனால், கீழடி நகர நாகரிகத்திற்கான காலம் வரையறுக்கப்பட்டுள்ளது.
- கீழடி அகழாய்வு பிரிவின் தலைவராக **அமர்நாத் ராமகிருஷ்ணன்** உள்ளார்.

## பால் உற்பத்தியில் தமிழகம் 10 வது இடத்திற்கு முன்னேற்றம்:

- பால் உற்பத்தியில், 12வது இடத்தில் இருந்த தமிழகம், தற்போது, 10வது இடத்திற்கு முன்னேறி உள்ளது. இந்தியாவில், 1991ல், தனி நபருக்கு, நாளொன்றுக்கு கிடைத்த பாலின் அளவு, 176 கிராமாக இருந்தது. தற்போது இந்த அளவு, 322 கிராமாக அதிகரித்திருக்கிறது. குஜராத் மாநிலம், நாள் ஒன்றுக்கு, 60 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்து, இந்தியாவில் முதலிடத்தை பிடித்துள்ளது. பால் உற்பத்தியில், 12வது இடத்தில் இருந்த தமிழகம், தற்போது நாளொன்றுக்கு, 30 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்து, 10வது இடத்திற்கு முன்னேறி உள்ளது. அதேபோல், தமிழகத்தில் சேலம் ஆவின், 4.4 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்து முதல் இடத்தையும்;

வேலூர் ஆவின், 4.4 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்து, இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது.

## இந்தியாவில் பால் உற்பத்தியில் முதல் 5 இடங்கள்

| தரம் | மாநிலம் |
|---|---|
| 1st | உத்திரபிரதேசம் |
| 2nd | ராஜஸ்தான் |
| 3rd | ஆந்திரபிரதேசம் |
| 4th | குஜராத் |
| 5th | பஞ்சாப் |

## "தணல்" தன்னார்வத் தொண்டு நிறுவனம்:

- சமீபத்தில் செய்திகளில் வந்துள்ள கேரள மாநிலத்தில் செயல்பட்டு வரும் இத்தொண்டு நிறுவனம் **கழிவு மேலாண்மை பற்றிய தொழில்நுட்ப வசதியை** வழங்குவதற்காக இலவச தொலைப்பேசி எண் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

## மொழி சிறுபான்மை:

- மொழி சிறுபான்மை பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பொதுத்தேர்வின் போது தமிழ் பாடத் தேர்வை எழுதுவதில் இருந்து விலக்களித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
    - ❖ **கட்டாய தமிழ் கற்றல் சட்டத்தை தமிழக அரசு 2006-ஆம்** ஆண்டு ஜூன் 12-இல் கொண்டு வந்ததால் அனைத்து வகையான பள்ளிகளிலும் முதல் பாடமாக தமிழ் கட்டாயமாக்கப்பட்டது.
    - ❖ தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது உள்ளிட்ட பிற மொழிகளிலும் பயிலும் மாணவர்களும் பொதுத் தேர்வுகளின்போது, தமிழ் பாடத் தேர்வை கட்டாயம் எழுத வேண்டிய சூழல் உருவாகியது.
    - ❖ இந்த உத்தரவை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், 2015-16 ஆம் கல்வியாண்டில் பிற மொழி மாணவர்கள் தமிழ் பாடத் தேர்வு எழுத விலக்களித்து உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

## 100 நாள் வேலைத்திட்டத்தில் கூடுதலாக 50 நாட்கள் வேலை: தமிழக அரசு அறிவிப்பு:

- **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்** கீழ் கூடுதலாக **50 நாள்கள்** சேர்த்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதனால், பணிநாட்களின் எண்ணிக்கை **150-ஆக** உயர்ந்துள்ளது. இந்தத் திட்டமானது தமிழகத்தின் 31 கிராமப்புற மாவட்டங்களில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளிலும் செயல்படுத்தப்படுகிறது குறிப்பிடத்தக்கது.

## "பிரகன் நாட்டியாஞ்சலி 2017":

- **"பிரகன் நாட்டியாஞ்சலி 2017"** எனும் பெயரில் உலகெங்கிலுமுள்ள 600 நடனக் கலைஞர்களின் நடன நிகழ்வுகள் தஞ்சாவூர் பெரிய கோயிலில் பிப்ரவரி 24 முதல் மார்ச் 2 தேதி வரை நடைபெறுகின்றன.

## 7வது ஊதியக் குழு:

- **7வது ஊதியக் குழுவின் அடிப்படையில்** அரசு ஊழியர்களின் ஊதிய விகிதத்தை மாற்றியமைக்க 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை முதல்வர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

### இக்குழுவில் கீழ்கண்ட உறுப்பினர்கள் இருப்பர்

1. கூடுதல் தலைமை செயலாளர், நிதித்துறை
2. முதன்மை செயலாளர், உள்துறை
3. முதன்மை செயலாளர், பள்ளி கல்விதுறை
4. செயலாளர் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த துறை
5. டாக்டர். பி.உமாநாத் - உறுப்பினர் செயலாளர்

## காற்று மாசுபாட்டால் நிமிடத்துக்கு 2 இந்தியர்கள் மரணம் !:

- காற்று மாசுபாடு காரணமாக நிமிடத்திற்கு இரு இந்தியர்கள் மரணமடைவதாக பிரிட்டனின் **'தி லான்ஸட்'** மருத்துவ இதழில் வெளியான ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- உலகில் காற்று மாசுபாட்டால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட நகரங்களின் பட்டியலில் இந்தியாவின் நகரங்களும் இடம் பெற்றுள்ளன.
- கடந்த 2010-ஆம் ஆண்டு புள்ளிவிபரங்களின் அடிப்படையில், காற்று மாசுபாடு காரணமாக உலகம் முழுவதும் 27 லட்சம் முதல் 34 லட்சம் வரையிலானோர் மரணமடைந்தனர்.

- இந்தியாவின் வடக்குப் பகுதியில் தான் காற்று மிக அதிக அளவில் மாசுபடுத்தப்படுகிறது.
- இதன் காரணமாக, இந்தியா முழுவதும் நிமிடத்துக்கு இரண்டு பேர் உயிரிழக்கின்றனர்.
- மேலும், இந்த உயிரிழப்புகள் காரணமாக மனித ஆற்றல் குறைந்து, இந்தியாவுக்கு 3,800 டாலர் (சுமார் ரூ. 2.5 லட்சம் கோடி) இழப்பு ஏற்படுவதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.
- காற்று மாசுபாடு ஏற்படுவது மனிதர்கள் அகால மரணடைவதற்கான காரணிகளில் நான்காவது இடத்தை வகிக்கிறது.
- இந்தியாவில் காற்று மாசுபாடு ஏற்படுத்துவதில், நிலக்கரியால் இயங்கும் மின் நிலையங்கள்தான் **50 சதவீத அளவுக்கு** பங்கு வகிக்கின்றன என அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதல்வராக எடப்பாடி பழனிசாமி பதவியேற்பு:

- தமிழக முதல்வராக எடப்பாடி கே.பழனிசாமி பதவியேற்றார்.
- ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு கடந்த டிசம்பர் 5-ம் தேதி தமிழக முதல்வராக பதவியேற்ற ஓ.பன்னீர்செல்வம், கடந்த பிப்ரவரி 5-ம் தேதி பதவியை ராஜினாமா செய்தார்.
- அதிமுக சட்டப்பேரவைக் குழுத் தலைவராக வி.கே.சசிகலா தேர்வு செய்யப்பட்டார்.

**உலக நன்செய்நில தினம் - பிப்ரவரி 2**

# தேசிய நிகழ்வுகள்

## மத்திய அரசின் அட்டர்னி ஜெனரல்:

- **மத்திய அரசின் அட்டர்னி ஜெனரல்** அலுவலகமானது **தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்** கீழ் வராது என்று உச்ச நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு தீர்ப்பளித்துள்ளது.

### அட்டர்னி ஜெனரல்:

- Art 76 - அட்டர்னி ஜெனரலை குடியரசு தலைவர் நியமனம் செய்கிறார்.
- இவர் இந்திய அரசுத் தலைமை வழக்கரைஞர் ஆவார்.
- தற்போதைய இந்திய அரசு தலைமை வழக்கறிஞர் முகில் ரோகத்.

## நாகாலாந்தில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்:

- நாகாலாந்தில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் பெண்களுக்கு **33 சதவீத** இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.

## மணிப்பூரைச் சேர்ந்த மனித உரிமை:

- மணிப்பூரைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர் **இரோம் ஷர்மிளா** துவங்கியுள்ள புதிய கட்சியின் பெயர் - **மக்கள் எழுச்சி மற்றும் நீதி கூட்டணி.**

## மத்திய இடைநிலைக் கல்வி ஆணையம்:

- மத்திய இடைநிலைக் கல்வி ஆணையம் எனப்படும் சி.பி.எஸ்.இ பாடத்திட்டத்தின் கீழ் 10-ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு அடுத்த ஆண்டு **முதல் பொதுத் தேர்வு கட்டாயமாக்கப்படுவதாக** அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியர்கள் உள்ளிட்ட வெளிநாட்டினர்:

- இந்தியர்கள் உள்ளிட்ட வெளிநாட்டினர் பணி நிமித்தமாக அமெரிக்கா செல்வதற்கு வழிவகை செய்யும் **“ஹெச்1பி’ விசா** முறையில் கடுமையான கட்டுப்பாடுகளை விதிப்பதற்கான சீர்திருத்த வரைவு மசோதா அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது, தகவல் தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்த இந்தியர்களையும், இந்திய நிறுவனங்களையும் மிகக் கடுமையாக பாதிக்கும் என்று கூறப்படுகிறது.

## 31வது “சுராஜ்கண்ட் சர்வதேச கைவினைப் பொருட்கள் கண்காட்சி”:

- 31வது ”சுராஜ்கண்ட் சர்வதேச கைவினைப் பொருட்கள் கண்காட்சி” நடைபெற்ற மாநிலம் - **ஹரியானா.** (இவ்வாண்டு எகிப்து நாட்டின் கைவினைப் பொருட்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது)

## இந்திய தகவல் தொழில்நுட்ப கல்வி நிறுவனம்:

- நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படவிருக்கும் **இந்திய தகவல் தொழில்நுட்ப கல்வி நிறுவனம்** (சட்ட திருத்த) மசோதா, 2017 இன் படி **ஆந்திரப்பிரதேசம், குர்னூலில்** அமைந்துள்ள இந்திய தகவல் தொழில்நுட்ப, வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு நிறுவனத்திற்கு தேசிய அளவிலான முக்கிய கல்விநிறுவன அந்தஸ்து வழங்கப்படவுள்ளது.

## இந்தியாவின் மிகப்பெரிய தொழில்முனைவோருக்கான ஊக்குவிப்பகம்:

- இந்தியாவின் மிகப்பெரிய தொழில்முனைவோருக்கான ஊக்குவிப்பகம் இந்திய-அமெரிக்க தொழிலதிபரும் கொடையாளருமான குருராஜ் தேஸ்பாண்டே அவர்களால் **கர்நாடக மாநிலம் ஹீப்பள்ளியில்** அமையவுள்ளது.

## நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின்:

- நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் வாகன ஓட்டுநராகவும், அவரது இந்திய தேசிய ராணுவத்தில் கர்னலாக இருந்தவருமான **நிஜாமுதீன்** (116), உத்தரப் பிரதேச மாநிலத்தில் உடல்நலக் கோளாறு காரணமாக காலமானார். **கடந்த 1901-ஆம் ஆண்டில் பிறந்த நிஜாமுதீன், நேதாஜியின் இந்திய தேசிய ராணுவத்தில் 1943-ஆம் ஆண்டு முதல் 1945-ஆம் ஆண்டு வரை கர்னலாக** சேவையாற்றினார். நேதாஜியின் நம்பிக்கைக்குரிய தளபதிகளில் ஒருவராக அவர் விளங்கினார்.

## முதன்மைப் பொருளாதார ஆலோசகர்:

- மத்திய நிதியமைச்சரின் முதன்மைப் பொருளாதார ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளவர் - **சஞ்சீவ் சன்யால்.**

## நீருக்கடியிலான துறைமுகம்:

- இந்திய கடற்படையினால் அமைக்கப்பட்டுள்ள, ஒருங்கிணைந்த நீருக்கடியிலான துறைமுகப் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு முறைமை துவங்கப்பட்டுள்ள நகரம் - **மும்பை.**

## இந்தியாவின் முதல் சமூக புதுமைபடைத்தலுக்கான மையம்:

- இந்தியாவின் முதல் சமூக புதுமைபடைத்தலுக்கான மையம், **"காகத்தியா சமூக புதுமை படைத்தலுக்கான கண்டுபிடிப்பு மையம்"** எனும் பெயரில் **தெலுங்கானா** அரசால் நிசாமாபாத் நகரில் அமைக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் "ஸ்மார்ட் காவல் நிலையம்":

- இந்தியாவின் முதல் **"ஸ்மார்ட் காவல் நிலையம்"** ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் அமையவுள்ளது.

## இந்தியாவின் முதல் மாற்றுத்திறன் விளையாட்டு வீரர்கள்:

- இந்தியாவின் முதல் மாற்றுத்திறன் விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு மையம் **குஜராத்தின் காந்திநகரில்** அமையவுள்ளது.

## மத்திய அரசின் "ஹஜ் பயண கொள்கைக்கான குழு" ஆசப் அமனுல்லா:

- மத்திய அரசின் **"ஹஜ் பயண கொள்கைக்கான குழு" ஆசப் அமனுல்லா தலைமையில்** அமைக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டின் உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் ஆணையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இந்த குழுவின் நோக்கம் இஸ்லாமிய மதத்தினருக்கு வழங்கப்படும் **"ஹஜ்" புனித பயணத்திற்கான சலுகைகளை ஒழுங்குபடுத்துவதும்**, படிப்படியாக குறைத்து, 2020 ஆம் ஆண்டிற்குள் முழுமையாக முடிவுக்கு கொண்டு வருவதுமாகும்.

## பெண்ணதிகாரம் குறித்து:

- பெண்ணதிகாரம் குறித்து விவாதிப்பதற்கான **"தேசிய மகளிர் நாடாளுமன்றம்"** என்ற 3 நாள் கருத்தரங்கை பிரதமர் நரேந்திர மோடி **ஆந்திரப் பிரதேசத்தின் அமராவதியில்** 10-02-2017 அன்று தொடக்கி வைத்துள்ளார்.

## நியாய விலைக் கடைகளின் செயல்பாடுகள்:

- இந்தியாவிலேயே முதல் மாநிலமாக, பொது விநியோகத்திட்டத்தின் மூலம் உணவு தானியங்கள் வழங்குவதில் முழுவதுமாக பணப்பரிமாற்றமில்லாத மாநிலம் எனும் பெருமையை **குஜராத்** பெற்றுள்ளது.
- இம்முறையில், உணவு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உணவுப்பொருட்கள் பெறும் பொதுமக்கள் ஆதார் அட்டைகளை எடுத்து வருவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- **குஜராத், ஆந்திரம், ராஜஸ்தான்** ஆகிய மாநிலங்களில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளின் செயல்பாடுகளும் 'ஆதார்' அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குஜராத்திலுள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் பயனாளிகள் விரல் ரேகைப் பதிவின் மூலம் பணம் செலுத்தும் வசதி ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## மீனா ஹேமச்சந்திரா:

- இணைய பாதுகாப்பிற்க்கு **மீனா ஹேமச்சந்திரா** தலைமையிலான பலதுறைப்பட்ட வல்லுநர்களடங்கிய குழுவை ரிசர்வ் வங்கி அமைத்துள்ளது.

## US Chamber of Commerce (USCC):

- US Chamber of Commerce (USCC) எனும் அமைப்பு வெளியிட்டுள்ள உலகின் 45 பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நாடுகளின் **அறிவுசார் சொத்து குறியீட்டு பட்டியல் 2017** ல் (Intellectual Property Index) **இந்தியா 43 வது இடத்தைப்** பெற்றுள்ளது.

| தரம் | நாடு |
|---|---|
| 1 | அமெரிக்கா |
| 2 | இங்கிலாந்து |
| 3 | ஜெர்மனி |
| 4 | ஜப்பான் |
| 5th | Sweden |

**43rd, India 44th Pakistan 45th வெனின்சுலா.**

## திரைப்படம், செய்திப்படம்:

- திரைப்படம், செய்திப்படம் அல்லது ஆவணப்படம் ஆகியவற்றில் **தேசிய கீதம்** இசைக்கப்படும்போது பொதுமக்கள் எழுந்து நிற்கத் தேவையில்லை என்று உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. நாடு முழுவதிலுமுள்ள அனைத்து திரையரங்குகளிலும் திரைப்படங்களை திரையிடுவதற்கு முன் தேசிய கீதத்தை இசைக்க வேண்டும் என்று 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ஆம் தேதி உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் காதலர் தின:

- **பாகிஸ்தானில் காதலர் தின** கொண்டாட்டங்களுக்கு தடை விதித்து **இஸ்லாமாபாத்** உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

## "பிராதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்ஷார்தா அபியான்":

- "**பிராதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்ஷார்தா அபியான்**" திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம், மார்ச் 2019 க்குள் 6 கோடி **கிராமப்புற மக்களுக்கு டிஜிட்டல் கல்வி** வழங்குவதாகும்.

பிராதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்ஷார்தா அபியான் திட்டம் பிப்ரவரி 8, 2017 அன்று நரேந்திர மோடியால் தொடங்கப்பட்டது.

## இந்திய மணல் சிற்பக்கலை நிபுணர் சுதர்சன் பட்னாயக்:

- இந்திய மணல் சிற்பக்கலை நிபுணர் **சுதர்சன் பட்னாயக்,** ஒடிஷா மாநிலம் பூரி கடற்கரையில் உலகிலேயே மிக உயரமான மணல்சிற்பம் அமைத்து கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளார்.

**சுதர்சன் பட்னாயக்:**

- இவர் ஒரு இந்திய மணற்சிற்ப கலைஞர்.
- 2014 - பத்ம ஸ்ரீ விருது பெற்றார்.
- உலகளவில் பல கின்னஸ் சாதனையை படைத்துள்ளார்.

## பிப்ரவரி 12 முதல் 18:

- **பிப்ரவரி 12 முதல் 18 தேதிவரை தேசிய உற்பத்தித் திறன் வாரமாக** அனுசரிக்கப்படவுள்ளது. தேசிய உற்பத்தித் திறன் குழுவினால் இந்நிகழ்வு நடத்தப்படுகிறது. **மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகத்தின்** கீழ் இயங்கிவரும் இவ்வமைப்பு **பிப்ரவரி 12, 1958-ல்** மத்திய அரசினால் ஏற்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவின் முதல் மிதக்கும் தொடக்கப்பள்ளி:

- இந்தியாவின் முதல் மிதக்கும் தொடக்கப்பள்ளி, **"லோக்டக் மிதக்கும் துவக்கப்பள்ளி"** எனும் பெயரில் **மணிப்பூர் மாநிலம் "லோக்டக் ஏரியின்"** மீது அமைக்கப்பட்டுள்ளது.

## POPSK என்பதன் விரிவாக்கம்:

- POPSK என்பதன் விரிவாக்கம் - **Post Office Passport Seva Kendras.**

## ரிலையன்ஸ், பேடிஎம் நிறுவனங்களுக்கு நோட்டீஸ்:

- பிரதமர் மோடியின் புகைப்படத்தை விதிகளுக்குப் புறம்பாக விளம்பரங்களில் பயன்படுத்தியதாக **முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனத்துக்கும், பேடிஎம் நிறுவனத்துக்கும்** மத்திய அரசு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.
- **டிஜிட்டல் இந்தியா திட்டத்துக்கு ஜியோ சேவை** அர்ப்பணிக்கப்படுகிறது என்ற வாசகங்கள் அதில் இடம்பெற்றிருந்தன.
- மேலும், பிரதமர் மோடியின் புகைப்படமும் விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது..
- அதுதொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அளிக்கும் விளக்கங்களைப் பொருத்து அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து முடிவு எடுக்கப்படும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கோலார் தங்கவயல் ரயில் நிலையங்களில் தமிழில் எழுதப்பட்ட பெயர்கள் நீக்கம்:

- ஆங்கிலேயர்களால் **1880-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தங்கச் சுரங்கத்தில் பணியாற்றுவதற்காக உருவான நகரம் கோலார் தங்கவயல்.**
- பெயர்ப் பலகையில் இருந்து தமிழ் எழுத்துகளை அழித்துவிட்டு **கன்னடம், இந்தி**, **ஆங்கிலத்தில்** மட்டும் பெயர்ப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.
- கர்நாடக மாநிலம், பங்கார்பேட் வட்டத்தில் உள்ள கோலார் தங்கவயலில் **தமிழ்மொழி பேசும் மக்கள் 90 சதவீதம்** பேர் வாழ்ந்து வருகிறார்கள்.
- சுதந்திரத்துக்கு முன்பும், பின்பும் கோலார் தங்கவயலில் உள்ள ரயில் நிலையங்களில் தமிழ் பெயர்ப் பலகைகள் இருந்தன.
- ஆனால், அண்மையில் **கன்னடம், இந்தி, ஆங்கிலத்தில்** மட்டும் எழுதியுள்ளனர்.

## புதிய தலைமை நீதிபதி:

- உச்ச நீதிமன்ற நீதிபதியாக, சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.கே.கௌஸ் பதவி உயர்வு பெற்றதையடுத்து, கர்நாடக மாநில உயர்நீதிமன்றத்தில் பணிபுரியும் மூத்த நீதிபதி **ஹூலுவாடி கங்காதரப்பா ரமேஷ்,** சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவியேற்பார் எனத் தெரிகிறது.

- கடந்த 1957-ஆம் ஆண்டு, ஜனவரி 16-ஆம் தேதி பிறந்த இவர், கடந்த 1982-ஆம் ஆண்டு ஜூலை 16 ஆம் தேதி வழக்குரைஞராக பதிவு செய்து கொண்டார்.
- கர்நாடக மாநில உயர்நீதிமன்றத்தில் கடந்த 2003-ஆம் ஆண்டு மே 12 ஆம் தேதி கூடுதல் நீதிபதியாக நியமிக்கப்பட்டு, 2004, செப்டம்பர் 24 முதல் நிரந்தர நீதிபதியாக பணியாற்றி வருகிறார்.

## மேற்குவங்கத்தில் புதிதாக 3 மாவட்டங்கள்:

- மேற்குவங்க மாநிலத்தில் வடக்கு பகுதியில் உள்ள **கலிம்பாங்** என்ற புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. **அசன்சோல், ஜர்கிராம்** ஆகிய மேலும் 2 புதிய மாவட்டங்கள் உதயமாகும் என்று தெரிவித்தார்.
- மேற்குவங்கத்தில் மொத்தம் 24 மாவட்டங்கள் உள்ளன.

| எண் | மாவட்டத்தின் பெயர் |
|---|---|
| 21 | மெட்னிபூர் |
| 22 | கலிம்பாங் |
| 23 | அசன்சோல் |
| 24 | ஜர்கிராம் |

## ஸ்னோடென்னை அமெரிக்காவுக்கு திருப்பி அனுப்ப ரஷ்யா திட்டம்:

- அமெரிக்க உளவுத் துறை முன்னாள் ஊழியர் **ஸ்னோடென்னை** அமெரிக்காவுக்கு திருப்பி அனுப்ப **ரஷ்ய அரசு** திட்டமிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.
- அமெரிக்காவின் உளவு அமைப்பான தேசிய பாதுகாப்பு அமைப்பில் (என்.எஸ்.ஏ.) பணியாற்றிய **எட்வர்ட் ஸ்னோடென் அந்த நாட்டின் ரகசிய ஆவணங்களைத் திருடி விக்கிலீக்ஸ்** மூலம் வெளியிட்டார்.
- எனவே அமெரிக்காவுக்கு பரிசாக **எட்வர்ட் ஸ்னோடென்னை** தாய்நாட்டுக்கு திருப்பி அனுப்ப ரஷ்ய அரசு முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

## உலக வானொலி தினம்: மோடி வாழ்த்து:

- ஒவ்வோர் ஆண்டும், **பிப்ரவரி மாதம் 13-ஆம் தேதி உலக வானொலி தினமாக** கொண்டாடப்படுகிறது.
- வானொலி ரசிகர்களுக்கும், வானொலி துறையில் பணியாற்றுபவர்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று மோடி தெரிவித்துள்ளார்.
- இந்தத் துறையை செயல்பாடு நிறைந்ததாகவும் துடிப்பானதாகவும் நிலைநிறுத்த வேண்டும்.
- வானொலி என்பது பிறருடன் தொடர்பு கொள்வதற்கும், கலந்துரையாடுவதற்கும், கற்றுக் கொள்வதற்கும் ஏற்ற சிறந்த சாதனமாகும்.
- வானொலியில் ஒலிபரப்பாகும் **எனது 'மனதின் குரல்' நிகழ்ச்சி** இந்தியாவின் அனைத்துத் தரப்பு மக்களுடனும் நான் தொடர்பு கொள்ள உதவுகிறது என்று மோடி தெரிவித்துள்ளார்.

## இந்தியா போஸ்ட் வங்கிக்கு மத்திய அரசு ரூ. 500 கோடி ஒதுக்கீடு:

- இந்தியா போஸ்ட் பேமென்ட் வங்கிக்கு (ஐ.பி.பி.பி.) வரும் நிதியாண்டுக்கு மத்திய அரசு

  ரூ. 500 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.
- வரும் செப்டம்பர் மாதத்துக்குள் **ஐ.பி.பி.பி.** நாடு தழுவிய அளவில் 650 கிளைகளை தொடங்க முடிவு செய்துள்ளது.
- **இந்தியா போஸ்ட் பேமென்ட் வங்கி** முன்னோட்ட நடவடிக்கையாக **ராய்ப்பூர்** மற்றும் **ராஞ்சி** நகரங்களில் கிளைகளைத் தொடங்கி செயல்பாட்டை ஆரம்பித்தது.
- இந்தியா போஸ்ட் வங்கியில் மேற்கொள்ளப்படும் ரூ. 25,000 வரையிலான டெபாசிட்டுகளுக்கு 4.5 சதவீத வட்டியும், ரூ. 25,000 - ரூ. 50,000 வரையிலான

டெபாசிட்டுகளுக்கு 5 சதவீத வட்டியும், ரூ. 50,000 - ரூ. 1 லட்சம் வரையிலான டெபாசிட்டுகளுக்கு 5.5 சதவீத வட்டியும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- இந்தியா போஸ்ட் வங்கியில் தனி நபர் கணக்கில் ரூ. 1 லட்சம் ரூபாய் வரையில் டெபாசிட் செய்யலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

## 1,200 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட அணு உலைகளை நிறுவ முடிவு:

- அணு மின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, இனிமேல் 1,200 மெகாவாட் உற்பத்தித் திறனுக்கு மேற்பட்ட வெளிநாட்டு அணு உலைகளை நிறுவ மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- "கூடங்குளத்தில் 1,200 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட வெளிநாட்டு அணு உலைகளை ஏற்கெனவே நிறுவி உள்ளோம்.
- இந்நிலையில் ரஷ்யாவின் கூட்டு முயற்சியுடன் 2-வது அணு மின் நிலையம் அமைப்பதற்காக ஆந்திர மாநிலம் கவாலியில் இடம் ஒதுக்கப்படும் என தகவல்கள் கூறுகின்றன.
- மேலும் அமெரிக்க நிறுவனம் சார்பில் **ஆந்திராவின் கொவ்வடாவில்** அமைய உள்ளது.
- இதுபோல **மகாராஷ்டிர மாநிலம் ஜெய்தாபூர்** அணு மின் நிலையத்தில் தலா 1,650 மெகாவாட் திறன் கொண்ட 6 அணு உலைகள் அமைக்கப்படும்.

## இந்தியாவின் முதல் இரண்டாம் தலைமுறை:

- இந்தியாவின் முதல் இரண்டாம் தலைமுறை **எத்தனால் உயிரி தொழில்நுட்ப எண்ணை சுத்திகரிப்பு ஆலை மத்திய அரசு நிறுவனமான இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேசன் மூலம் பஞ்சாப் மாநிலம், பத்திண்டா மாவட்டத்திலுள்ள தர்கான்வாலா** எனும் பகுதியில் அமைக்கப்படவுள்ளது.

## ம.பி.யில் நாட்டின் முதல் தபால் நிலைய கடவுச் சீட்டு மையம் தொடக்கம்:

- நாட்டிலேயே முதன்முறையாக **மத்தியப்பிரதேசத்திலுள்ள தலைமை தபால் நிலையத்தில் கடவுச் சீட்டு மையம்** தொடங்கப்பட்டது.
- விதிஷா நகரிலுள்ள தலைமை தபால் நிலையத்தில் கடவுச் சீட்டு மையத்தை மத்தியப் பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சௌஹான் திறந்து வைத்தார்.
- முன்னாள் பிரதமர் **அடல் பிகாரி வாஜ்பாய்,** வெளியுறவுத்துறை அமைச்சராகப் பதவிவகித்தபோது மத்தியப் பிரதேசத்தில் முதலாவது கடவுச் சீட்டு மையம் தொடங்கப்பட்டது.

- தற்போது, **சுஷ்மா ஸ்வராஜ்** வெளியுறவுத்துறை அமைச்சராகப் பதவிவகிக்கும்போது தபால் நிலையத்தில் செயல்படும் **முதல் கடவுச் சீட்டு மையம்** இங்கு தொடங்கப்பட்டுள்ளது.

## இந்தியாவிலேயே பணக்கார நகரம் மும்பைதான்:

- இந்தியாவின் வர்த்தக தலைநகரான **மும்பை** தான், நாட்டிலேயே பணக்கார நகரம் என்று ஆய்வு அறிக்கை தகவல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இதுகுறித்து **'நியூ வேர்ல்டு வெல்த்'** எனும் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்.
- மும்பைக்கு அடுத்து **தில்லி, பெங்களூரு** நகரங்கள் 2 மற்றும் 3-ஆவது இடத்தில் உள்ளன.

## இந்தியாவில் உள்ள பணக்கார நகரம்

| எண் | நகரம் |
|---|---|
| 1st | மும்பை |
| 2nd | டெல்லி |
| 3rd | கொல்கத்தா |
| 4th | பெங்களூர் |
| 5th | ஹைதராபாத் |

## ப. சிதம்பரம் தலைமையில் நாடாளுமன்ற நிலைக் குழுக் கூட்டம் தொடக்கம்:

- முன்னாள் மத்திய அமைச்சரும் மாநிலங்களவை காங்கிரஸ் உறுப்பினருமான **ப.சிதம்பரம் தலைமையில் மத்திய உள்துறை அமைச்சகத்துக்கான நாடாளு மன்ற நிலைக்குழுக் கூட்டம் தில்லியில்** நடைபெற உள்ளது.
- **அதிமுக குழுக்கள்:** மத்திய உள்துறை அமைச்சகத்துக்கான நாடாளுமன்ற நிலைக் குழுவில் சிதம்பரம், திரிணாமூல் காங்கிரஸின் டெரக் ஓ பிரெய்ன் உள்பட 10 மாநிலங்களவை உறுப்பினர்கள், காங்கிரஸைச் சேர்ந்த **மல்லிகார்ஜுன கார்கே, அதிர் ரஞ்சன் செளத்ரி** உள்பட 21 மக்களவை உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர்.

## உணவுத் தயாரிப்பை மீண்டும் கையில் எடுக்கிறது ஐஆர்சிடிசி:

- மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ள புதிய கொள்கையின்படி, ரயில் பயணிகளுக்கு உணவுத் தயாரிக்கும் பணியினை இந்திய ரயில்வே உணவுக் கழகம் (ஐ.ஆர்.சி.டி.சி.) மீண்டும் கையில் எடுக்கவுள்ளது.
- இந்த புதிய கொள்கையை **ரயில்வே துறை அமைச்சர் சுரேஷ் பிரபு** அறிமுகப்படுத்தினார்.

- இந்நிலையில், தற்போது புதிய கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ரயில் நிலையங்களில் கடைகள் அமைப்பதில் **3.3 சதவீத** இடம் **பெண்களுக்கு** ஒதுக்கப்பட்டுள்ளது.
- மேலும், ரயில் நிலையங்களில் பால் மையங்களை அமைக்க ஒப்பந்தப் புள்ளி கோரப்படும் என்பது உள்ளிட்ட அறிவிப்புகளையும் ரயில்வே நிர்வாகம் வெளியிட்டுள்ளது.

## மேலும் ஒரு கிராமத்தை தத்தெடுத்தார் சச்சின்:

- எம்.பி.க்கள் கிராமத்தை தத்தெடுக்கும் திட்டத்தின் கீழ், முன்னாள் கிரிக்கெட் வீரரும், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினருமான **சச்சின் டெண்டுல்கர், மகாராஷ்டிர மாநிலத்தின் ஒஸ்மானாபாத் மாவட்டத்தில் உள்ள தோஞ்சா கிராமத்தை** தத்தெடுத்துள்ளார்.
- முன்னதாக, கிராம மக்களின் மேம்பாட்டுக்காக **ஆந்திரபிரதேச மாநிலத்தின் நெல்லூர்** மாவட்டத்தைச் சேர்ந்த **புத்தம்ராஜீஷு கன்ட்ரிகா** கிராமத்தை தத்தெடுத்திருந்த நிலையில், தற்போது 2-ஆவதாக தோஞ்சா கிராமத்தை தத்தெடுத்துள்ளார்.

## சட்லஜ்-யமுனை கால்வாய் விவகாரம்:

- **சட்லஜ்-யமுனை** இணைப்புக் கால்வாய்த் திட்டத்துக்காக பள்ளம் வெட்டும் பணிகளை பஞ்சாப் அரசு தொடங்க வேண்டும்.
- **ராவி, பியாஸ், சட்லஜ்** ஆகிய மூன்று நதிகளின் நீரைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக **பஞ்சாபுக்கும், ஹரியாணா, ராஜஸ்தான்** உள்ளிட்ட அண்டை மாநிலங்களுக்கும் இடையே கடந்த **1981**-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி ஒப்பந்தம் கையெழுத்தானது.
- இது தவிர **தில்லி, ஜம்மு-காஷ்மீர்** ஆகிய மாநிலங்களுக்கு இந்த நதிகளின் நீரைப் பகிர்ந்து கொள்ளவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.
- இந்த நீர்ப் பகிர்வை மேற்கொள்ள 2-ஆண்டுகளுக்குள் 214 கி.மீ. நீள சட்லஜ்-யமுனை இணைப்புக் கால்வாயை பஞ்சாப் அமைக்க வேண்டும் என்பது அந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாகும்.

## டெலிநார் நிறுவனத்தை கையகப்படுத்துகிறது பார்தி ஏர்டெல்:

- தொலைத் தொடர்பு சேவையில் ஈடுபட்டு வரும் **பார்தி ஏர்டெல் நிறுவனம் டெலிநார் இந்தியாவை** கையகப்படுத்துவதாக தெரிவித்துள்ளது.
- நார்வே நாட்டை சேர்ந்த டெலிநார் குழுமத்தின் டெலிநார் (இந்தியா) நிறுவனத்தை, பார்தி ஏர்டெல் கையகப்படுத்த உள்ளது.

- இதற்காக, டெலிநார் சவுத் ஏசியா இன்வெஸ்ட்மென்ட் உடன் பார்தி ஏர்டெல் நிறுவனம் உடன்பாட்டை மேற்கொண்டுள்ளது.
- ஏர்டெல் நிறுவனம், 26.9 கோடி தொலைத் தொடர்பு வாடிக்கையாளர்களைக் கொண்டு 33 சதவீத சந்தை பங்களிப்புடன் முதலிடத்தில் உள்ளது.
- டெலிநார் இணைப்பையடுத்து சந்தைப் பங்களிப்பு மேலும் வலுப் பெரும் என்று பார்தி ஏர்டெல் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## தீர்ப்பாயங்களின் எண்ணிக்கையை பாதியாக குறைக்க மத்திய அரசு திட்டம்:

- தீர்ப்பாயங்களின் எண்ணிக்கையை **36-இல் இருந்து 18-ஆக** பாதியாக குறைப்பதற்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- இதற்காக நாடாளுமன்றத்தில் மத்திய அரசு விரைவில் மசோதாவை கொண்டு வரவிருக்கிறது.
- நாட்டில் தற்போது 36 தீர்ப்பாயங்கள் உள்ளன.
- இந்த தீர்ப்பாயங்கள், வருமான வரி, மின்சாரம், நுகர்வோர் பாதுகாப்பு, நிறுவனங்கள் சட்டம், ரயில்வே விபத்துகள் தொடர்பான விவகாரங்களைக் கையாண்டு வருகின்றன

## கனடாவுக்கான புதிய இந்தியத் தூதர் விகாஸ் ஸ்வரூப்:

- வெளியுறவுத் துறை செய்தித்தொடர்பாளராக பதவி வகித்துவந்த **விகாஸ் ஸ்வரூப், கனடாவுக்கான புதிய இந்தியத் தூதராக** நியமிக்கப்பட்டுள்ளார்.
- கடந்த **1985-ஆம்** ஆண்டு பிரிவு வெளியுறவு அயல் பணி அலுவலராகத் தேர்வு செய்யப்பட்டவர் **விகாஸ் ஸ்வரூப்.**
- முன்னதாக, கனடாவுக்கான **இந்தியத் தூதராக அருண் குமார் சாஹு** பதவி வகித்து வந்தார்.
- கடந்த 2015-ஆம் ஆண்டு முதல் வெளியுறவுத் துறை செய்தித்தொடர்பாளராக பதவி வகித்துவந்த **ஸ்வரூப்,** அதற்கு முன்பு அந்தத் துறையின் **ஐ.நா. பிரிவு கூடுதல் செயலராகவும்** பதவி வகித்திருக்கிறார்.
- **துருக்கி, அமெரிக்கா, எத்தியோப்பியா, பிரிட்டன், தென் ஆப்பிரிக்கா, ஜப்பான்** ஆகிய நாடுகளிலும் தூதரகப் பதவிகளை விகாஸ் ஸ்வரூப் வகித்திருக்கிறார்.

## பிரதமர் மோடியுடன் மைக்ரோசோ.ஃப்ட் தலைவர் சத்யா நாதெள்ளா சந்திப்பு:

- **மைக்ரோசோ.ஃப்ட் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி சத்யா நாதெள்ளா** பிரதமர் நரேந்திர மோடியை தில்லியில் சந்தித்துப் பேசினார்.

- இந்த சந்திப்பின்போது, கிராமப்புறங்களில் கல்வி, சுகாதார வசதிகளை கணினித் தொழில்நுட்பத்தின் மூலம் மேம்படுத்துவது தொடர்பாக அவர்கள் ஆலோசித்தனர்.
- சத்யா நாதெள்ளா உடனான சந்திப்பு குறித்து ரவி சங்கர் பிரசாத் கூறியதாவது: நிதியமைச்சர் அருண் ஜேட்லி அண்மையில் தாக்கல் செய்த மத்திய பட்ஜெட்டில் **'மின்னணு கிராமம்**' என்னும் புதிய திட்டத்தை அறிவித்துள்ளார்.
- இதன்படி, முதல்கட்டமாக மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள **ஹரிசால் கிராமம்** முற்றிலுமாக மின்னணுமயமாக்கப்பட உள்ளது.
- இதில், **மைக்ரோசோ∴ப்ட் நிறுவனம்** பெரும் பங்களிப்பை அளித்து வருகிறது.
- குறிப்பாக கல்வி, சுகாதாரம் ஆகியவற்றில் கணினித் தொழில் நுட்பத்தின் பயன்பாடு அதிகரிக்கப்பட்டுள்ளது.

## சூரிய ஒளி, காற்றாலை மின் உற்பத்தி:

- சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் ரயில்வே துறையின் மின்சார செலவை குறைக்க பல்வேறு இடங்களில் **சூரிய ஒளி மற்றும் காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி** செய்யப்படவுள்ளது.
- இதற்காக தெற்கு ரயில்வே சார்பில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
- தற்போதுள்ள நிலவரப்படி ஆண்டுதோறும் சுமார் **18 ஆயிரம் கோடி கிலோவாட் மின்சாரத்தை** ரயில்வே பயன்படுத்தி வருகிறது.
- இது நாட்டின் **மொத்த மின் உற்பத்தியில் 1.8 சதவீதமாகும்.**
- நடப்பு நிதியாண்டில் 10 மெகாவாட், 2017-18-ல் 290 மெகாவாட், 2018-19-ல் 500 மெகாவாட், 2019-20-ல் 200 மெகாவாட் என மொத்தம் 1,000 மெகாவாட் சூரியஒளி கருவிகளை நிறுவி மின்சாரம் உற்பத்தி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.
- **500 மெகாவாட் மின்சாரம் மேற்கூரைகள் மூலமும், 500 மெகாவாட் தரை தளங்கள்** மூலமும் உற்பத்தி செய்யப்படவுள்ளது.

## 'காதி' பெயர்கள் நீக்கம்: ∴பேப் இந்தியா அறிவிப்பு:

- **∴பேப் இந்தியா நிறுவனம்** தனது பிராண்ட்களில் இருந்து **காதி பெயரை** விலக்கீ கொண்டுள்ளது.
- பருத்தி துணிகள் விற்பனையை அதிகரிப்பதற்காக **காதி என்கிற பெயரில் பிராண்டை இந்த நிறுவனம்** பிரபலப்படுத்தி வந்தது.
- இந்த பெயரைப் பயன்படுத்துவது முறையற்ற வர்த்தக நடவடிக்கை எனவும், காதி பெயரை பயன்படுத்தினால் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் **காதி கிராமத்**

**தொழில்கள் வாரியம் (கேவிஐசி), ஃபேப் இந்தியா நிறுவனத்துக்கு** நோட்டீஸ் அனுப்பி இருந்தது.

- இந்த நிலையில் தனது பிராண்டில் காதி பெயர் பயன்படுத்துவதை விலக்கிக் கொள்வதாக ஃபேப் இந்தியா நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளது.

## மகாத்மா காந்தி:

- **மகாத்மா காந்தி கொலை வழக்கில் ஜே.எல்.கபூர் கமிஷன்** அறிக்கையின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த தகவல்களை வெளியிட வேண்டுமென்று பிரதமர் அலுவலகத்துக்கு மத்திய தகவல் ஆணையம் (சிஐசி) உத்தரவிட்டுள்ளது.
- **வீர சாவர்க்கர்** மற்றும் அவரைச் சேர்ந்தவர்கள் **மகாத்மா காந்தி கொலை** சதியில் ஈடுபட்டார்கள் என்று கபூர் கமிஷன் அறிக்கையில் குற்றம்சாட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.

## புதிதாக நீதிபதிகள்:

- புதிதாக நீதிபதிகள் **சஞ்சய் கிஷன் கௌல், எஸ்.எம். மல்லிகார்ஜுன கௌடா, எஸ்.அப்துல் நசீர், நவீன் சின்ஹா, தீபக் குப்தா** ஆகிய ஐந்து பேர் உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக பதவியேற்றுக் கொண்டனர். இவர்களுக்கு, தலைமை நீதிபதி **ஜே.ஸ்.கேஹர்** பதவிப் பிரமாணம் செய்து வைத்தார் இவர்கள், 65 வயதை எட்டும் வரை நீதிபதி பதவியில் இருப்பர். இதையடுத்து, உச்ச நீதிமன்றத்தில் காலியாக உள்ள நீதிபதிகள் பணியிடங்களின் எண்ணிக்கை 3-ஆக குறைந்தது.
- உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி உள்பட மொத்தம் 31 நீதிபதிகளுக்கான பணியிடங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது பணியிலுள்ள 28 நீதிபதிகளில் தற்போது, **ஆர்.பானுமதி** மட்டுமே உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாக பதவி வகிக்கும் **ஒரே பெண்** ஆவார்.

- கடந்த 2014-ஆம் ஆண்டு, சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றார் **நீதிபதி எஸ்.கே.கௌல்.**

## பாரத ஸ்டேட் வங்கி:

- பாரத ஸ்டேட் வங்கியுடன் அதன் **5 துணை வங்கிகளை** ஒன்றிணைக்கும் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. எனினும், **பாரதிய மகிளா வங்கியை ஸ்டேட்** வங்கியுடன் இணைப்பது தொடர்பாக மத்திய அமைச்சரவை எந்த முடிவும் எடுக்கவில்லை.

- பாரத ஸ்டேட் வங்கியின் கீழ் **ஸ்டேட் பாங்க் ஆ்ப் பிகானீர், ஸ்டேட் பாங்க் ஆ்ப் மைசூர், ஸ்டேட் பாங்க் ஆ்ப் திருவாங்கூர், ஸ்டேட் பாங்க் ஆ்ப் பாட்டியாலா, ஸ்டேட் பாங்க் ஆ்ப் ஹைதராபாத்** ஆகிய 5 துணை வங்கிகள் இயங்கி வருகின்றது குறிப்பிடத்தக்கது.

## “சங்கம் திட்டம்”:

- இந்தியாவில் வேலை தேடுபவர்களுக்கு பயிற்சி மற்றும் வாய்ப்புகளை வழங்குவதற்கான **“லிங்கட் இன்”** நிறுவனத்துடன் இணைந்து மத்திய அரசு செயல்படுத்தவிருக்கும் **“சங்கம் திட்டம்”** எனப்படும் திட்டத்தை **மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி சத்யா நாத்தெல்லா** துவங்கி வைத்துள்ளார்.

## ஆதார் அடிப்படையிலான அரசு மானியங்கள்:

- ஆதார் அடிப்படையிலான அரசு மானியங்கள், சேவைகள் மற்றும் நிதியுதவிகள் மசோதா, 2017யை நிறைவேற்றியுள்ள இந்திய மாநிலம் - **குஜராத்**

## “சாத்தியா ரிசோர்ஸ் கிட்”:

- **“ராஷ்டிரிய கிஷோர் ஸ்வஸ்த்யா கார்யாக்ராம்”** திட்டத்தின் ஒரு பகுதியாக வளர் இளம் பருவத்தினருக்கு வழங்கப்படும் இந்த பரிசுப்பொருள் பெட்டகத்தில் செயல்பாட்டு புத்தகம், கல்வி குறிப்பேடு, கேள்வி-பதில் புத்தகம் ஆகியவை அடங்கியிருக்கும். இந்த பரிசுப்பெட்டகத்தை ஐ.நா வின் மக்கள்தொகை நிதியம் மற்றும் இந்திய மக்கள்தொகை நிறுவனம் ஆகியவை இணைந்து உருவாக்கியுள்ளன.

**“ராஷ்டிரிய கிஷோர் ஸ்வஸ்த்யா கார்யாக்ராம்”:** ஜனவரி 2014ல் துவக்கப்பட்ட இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், 10-19 வயதிலுள்ள வளர் இளம் பருவத்தவர்க்கு போதுமான அளவு ஊட்டச்சத்து, பாலின ஆரோக்யம், பாலின சமத்துவம் போன்றவற்றை உறுதி செய்வதாகும்.

## உலகப்புகழ் பெற்ற கஜீராகோ நடனத் திருவிழா:

- உலகப்புகழ் பெற்ற **கஜீராகோ நடனத் திருவிழா** பிப்ரவரி 20, 2017ல் **மத்திய பிரதேச மாநிலத்தில்** நடைபெற்றது. இந்நிகழ்வில் இவ்வாண்டு **பங்களாதேச நாடு** சிறப்பு விருந்தினராக பங்கேற்றது.

## “புள்ளி விபரங்களை சேகரித்தல் சட்டம், 2008”:

- “புள்ளி விபரங்களை சேகரித்தல் சட்டம், **2008”ல்** திருத்தம் செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திருத்தத்தின் மூலம் **ஜம்மு காஷ்மீர் மாநிலமும்** இச்சட்டத்தின் வரையறைக்குள் கொண்டுவரப்படவிருக்கிறது.

## "Welcome to Nowhere":

- "Welcome to Nowhere" என்ற புத்தகத்தின் ஆசிரியர் - **எலிசபத் லையார்டு**

## "Army and Nation:

- The Military and Indian Democracy since Independence"? எனும் புத்தகத்தின் ஆசிரியர் - **ஸ்டீபன் வில்க்கின்சன்**

## ஏழாவது, தேசிய விதைகள் காங்கிரஸ்:

- ஏழாவது, தேசிய விதைகள் காங்கிரஸ் பிப்ரவரி 2017ல் **கல்கத்தாவில்** நடைபெற்றது.

- National Seed Congress 2017 Theme – Seed of Joy

## "Aardram":

- "**Aardram**" எனும் பெயரில் பொதுசுகாதார நிலையங்களை மேம்படுத்தும் திட்டத்தை **கேரள அரசு** அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் அரசு **பொது சுகாதார மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை** மேம்படுத்துவதாகும்.

## "Jobless Clueless Reckless":

- "Jobless Clueless Reckless" என்ற புத்தகத்தின் ஆசிரியர் - **ரேவதி சுரேஷ்**

## "உயர்கல்வி நிதி முகமை":

- "உயர்கல்வி நிதி முகமை" யை செயல்படுத்துவதற்காக மத்திய மனித வளத்துறையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ள வங்கி - **கனரா வங்கி**

## Cyber Swachhta Kendra (CSK):

- **டிஜிட்டல் இந்தியா திட்டத்தின்** ஒரு அங்கமாக, **Cyber Swachhta Kendra** எனப்படும் மையம் **மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால்** அமைக்கப்பட்டுள்ளது. இம்மையமானது, பல்வேறு **இணையதள வைரஸ் மற்றும் பிற பாதிப்புகளைக்** கண்டறிந்து நீக்கும்.

## உலக சுகாதார நிறுவனம்:

- சர்வதேச அளவில் தற்கொலையில் **இந்தியா முதலிடம்** வகிப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. **15 முதல் 29 வயதுடைய** இளம் பருவத்தினரே அதிகம் தற்கொலை செய்து கொள்கின்றனர். மன அழுத்த நோயால் ஆண்களை விட பெண்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். **சர்வதேச அளவில் சராசரியாக 40 விநாடிகளுக்கு** ஒருவர் தற்கொலை செய்து கொள்கிறார் என்று கூறப்பட்டுள்ளது.

## "அந்தியோதயா எக்ஸ்பிரஸ்":

- **இந்திய இரயில்வேயின் முதல் "அந்தியோதயா எக்ஸ்பிரஸ்"** இரயிலான **எர்னாகுளம் - கௌரா** அந்தியோதயா எக்ஸ்பிரஸ் 27.02.2017 துவக்கி வைக்கப்பட்டது. 2016-2017 பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருந்த இந்த "அந்தியோதயா எக்ஸ்பிரஸ்", முழுவதும் முன்பதிவற்ற, நெடுந்தூரம் பயணிக்கும் அதிவேக இரயில் வண்டியாகும்.

## இந்தியாவின் முதல் மலை மிதிவண்டி சாலை:

- இந்தியாவின் முதல் மலை மிதிவண்டி சாலை **டார்ஜிலிங்கில்** துவங்கப்பட்டுள்ளது.

## "தூய்மை இந்தியா திட்டத்தின்":

- **"தூய்மை இந்தியா திட்டத்தின்"** புதிய நல்லெண்ண தூதுவராக பாலிவுட் நடிகை **சில்பா ஷெட்டி** நியமிக்கப்பட்டுள்ளார்.

## பாலித்தீன் பைகளின் பயன்பாடு:

- பாலித்தீன் பைகளின் பயன்பட்டை மாநிலம் முழுவதும் தடை செய்வதாக அறிவித்துள்ள மாநிலம் - **ஜார்க்கண்ட்**

## "அருண்-3 நீர்மின்சக்தி திட்டம்":

- "அருண்-3 நீர்மின்சக்தி திட்டம்" எனப்படும் திட்டத்தின் மூலம் **நேபாளில், 900 மெகாவாட் மின்சாரத்தை** தயாரிப்பதற்கான நிதி உதவி வழங்குவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

## விசாகப்பட்டிணம் - சென்னை தொழில்வழிசாலை:

- **விசாகப்பட்டிணம் - சென்னை தொழில்வழிசாலை** அமைப்பதற்காக **ஆசிய வளர்ச்சி**

**வங்கியிடமிருந்து** 375 மில்லியன் டாலர் கடனாகப்பெற இந்திய அரசு மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கிகளிடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

## சூரிய மின்சக்தி:

- தனது மாநிலத்திலுள்ள அனைத்து தனியார்ப் பள்ளிகளிலும் சூரிய மின்சக்தி முறைமைகளை நிறுவுவதை கட்டாயமாக்கியுள்ள மாநிலம் - **ஹரியானா**

## தபால் நிலையங்களில் இனி கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கலாம்:

- தபால் நிலையங்களில் கடவுச்சீட்டுக்கு (பாஸ்போர்ட்) விண்ணப்பிக்கும் புதியமுறை அமலுக்கு வரவிருக்கிறது.
- நாடு முழுவதும் பொது மக்களுக்கு கடவுச்சீட்டை அளிக்கும் பணியை **வெளியுறவு அமைச்சகம்** மேற்கொண்டு வருகிறது.
- அதன்படி, நாடு முழுவதும் தற்போது 38 கடவுச்சீட்டு அலுவலகங்களும், 89 கடவுச்சீட்டு சேவை அளிக்கும் மையங்களும் (பிஎஸ்கே) செயல்பட்டு வருகின்றன.
- தமிழகத்தில் **சேலம், வேலூரில்** இருக்கும் தபால் நிலையங்களில் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கலாம் என்றார்.

## நீதிமன்றங்களில் பிராந்திய மொழிகள்: நாடாளுமன்ற நிலைக் குழு வலியுறுத்தல்:

- நீதிமன்றங்களில் **தமிழ், ஹிந்தி** உள்ளிட்ட பிராந்திய மொழிகள் பயன்படுத்தப்பட வேண்டும் என்று சட்டம் மற்றும் பணியாளர் நலனுக்கான நாடாளுமன்ற நிலைக்குழு வலியுறுத்தியுள்ளது.
- இதுகுறித்து நாடாளுமன்றத்திடம் அந்தக் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
- சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் விரும்பினால், **ஆங்கிலம்** அல்லாத, பிற பட்டியலிடப்பட்ட மொழிகளை உயர் நீதிமன்றங்களில் பயன்படுத்த அரசமைப்புச் சட்டத்தில் இடம் உள்ளது.
- அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு **348-இன்படி** இதற்கான முழு அதிகாரம் மாநில அரசுக்கு உள்ளதால், இதுகுறித்து உச்ச நீதிமன்றத்தின் உத்தரவைப் பெற வேண்டிய அவசியம் மாநில அரசுக்கு இல்லை.
- எனவே, நீதிமன்றங்களில் பிராந்திய மொழிகளைப் பயன்படுத்த வேண்டும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி அல்தமஸ் கபீர் காலமானார்:

- உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை **நீதிபதி அல்தமஸ் கபீர்** காலமானார்.
- அவருக்கு வயது 68.
- உச்ச நீதிமன்றத்தின் **39-ஆவது தலைமை நீதிபதியாக அல்தமஸ் கபீர்** (68) கடந்த 2012-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29-ஆம் தேதி நியமிக்கப்பட்டார்.
- கடந்த **2013-ஆம்** ஆண்டு ஜூலை மாதம் 19-ஆம் தேதி அவர் தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.
- அதற்கு, முன்னதாக, **கொல்கத்தா, ஜார்க்கண்ட்** மாநில உயர்நீதிமன்றங்களில் தலைமை நீதிபதியாக பணிபுரிந்துள்ளார்.

## வீர சிவாஜி :

- **மராட்டிய மன்னர் வீர சிவாஜியின்** பிறந்த தினத்தையொட்டி பிரதமர் நரேந்திரமோடி அவருக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.
- சிவாஜியைப் போன்ற வீரம் மிக்க, உயர்ந்த மனிதரைப் பெற்றதற்காக இந்தியா பெருமை கொள்கிறது.
- அற்புதமான நிர்வாகத் திறமைகளைக் கொண்ட சிறந்த ஆட்சியாளராக அவர் திகழ்ந்தார்.
- நாட்டு மக்கள் நலமாக வாழ வேண்டும் என்பதே அவரது முக்கிய குறிக்கோளாக இருந்தது.
- **மும்பையையொட்டிய அரபிக் கடலில் வீர சிவாஜியின் சிலையை அமைப்பதற்காக அண்மையில் அடிக்கல்லை நாட்டினார்.**

## 'கலாசாரத்தை அழிக்கும் வளர்ச்சி நிலையானதல்ல':

- கலாசாரத்தை இழந்துவிட்டுப் பெறுகின்ற வளர்ச்சி நிலையானதல்ல என்று மக்களவைத் தலைவர் **சுமித்ரா மகாஜன்** தெரிவித்தார்.
- மத்தியப் பிரதேச மாநிலம், இந்தூரில் **'நிலையான வளாச்சி இலக்குகள்'** என்ற தலைப்பில் **தெற்காசிய நாடாளுமன்ற தலைவர்களின் மாநாடு நடைபெற்றது.**
- இதில் மக்களவைத் தலைவர் சுமித்ரா மகாஜன் கலந்து கொண்டுள்ளார்.

## பாகிஸ்தான் நாடாளுமன்ற மேலவை ஒப்புதல்:

- **பாகிஸ்தானில் சிறுபான்மையினராக உள்ள ஹிந்துக்கள் திருமணம் தொடர்பான மசோதா** அந்த நாட்டு நாடாளுமன்றத்தின் மேலவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

- **ஹிந்துக்களின் திருமணம், திருமணப் பதிவு, மண முறிவு, மறுமணம், வயது வரம்பு** ஆகியவற்றைக் குறித்த மசோதா ஏற்கெனவே அந்த நாட்டு **நாடாளுமன்றத்தின் கீழவையில்** கடந்த 2015-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது.

# வெளிநாட்டு நிகழ்வுகள்

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக்:

- **இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவரும், கேரள மாநிலம் மலப்புரம் பாராளுமன்ற தொகுதி மக்களவை உறுப்பினருமான இ.அகமது காலமானார்.** தில்லியில் நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டுக்கூட்டத்தில் பங்கேற்றிருந்த போது, மாரடைப்பால் மயங்கி விழுந்த அவர், தொடர்ந்து மருத்துவம் பயனின்றி மரணமடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ரஷிய நாட்டில் வரும் ஜூன் 2017:

- **ரஷிய நாட்டில்** வரும் ஜூன் 2017-ல் நடைபெறவுள்ள **செயின்ட் பீட்டர்ஸ்பெர்க் சர்வதேசப் பொருளாதார மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி சிறப்பு விருந்தினராக** கலந்து கொள்ளவுள்ளார்.

## 7 நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்கா நுழைவதற்குத் தடை:

- முஸ்லீம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட **ஈரான், இராக், யேமன், சிரியா, சூடான், லிபியா, சோமாலியா** ஆகிய 7 நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்கா நுழைவதற்குத் தடை விதித்து அதிபர் டிரம்ப் பிறப்பித்துள்ள உத்தரவைத் திரும்பப் பெறுமாறு **ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ்** வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## அமெரிக்காவின் புதிய வெளியுறவுத் துறை:

- அமெரிக்காவின் புதிய வெளியுறவுத் துறை அமைச்சராக தொழிலதிபர் **ரெக்ஸ் டில்லர்ஸன்** (64) பதவியேற்றுள்ளார். மேலும், அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக பழமைவாதக் கொள்கையைக் கொண்ட **நீல் கோர்ஸச்சை** (49) அதிபர் டொனால்ட் டிரம்ப் நியமித்துள்ளார்.

## வடக்கு ஆப்பிரிக்கா:

- வடக்கு ஆப்பிரிக்காவைச் சேர்ந்த **மொராக்கோ குடியரசு, 33 ஆண்டுகளுக்குப்** பிறகு ஆப்பிரிக்க **யூனியன் அமைப்பில்** இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அந்த நாடு உரிமை கொண்டாடி வரும் **மேற்கு சஹாராப் பகுதி, "சாஹ்ராவி அரபு ஜனநாயகக் குடியரசு'** என்ற சுதந்திர நாடாக ஆப்பிரிக்க யூனியன் அங்கீகரித்ததைத் தொடர்ந்து, அந்த அமைப்பிலிருந்து **மொராக்கோ 1984-**ஆம் ஆண்டு வெளியேறியது. தற்போது நீண்ட விவாதத்துக்குப் பிறகு ஆப்பிரிக்க யூனியனில் மொராக்கோ மீண்டும் இணைந்துள்ளது.

## ஒரே நேரத்தில் 10 அணுகுண்டுகளை ஏந்திச் செல்லும் "டிஎ.்.ப்-5":

- ஒரே நேரத்தில் 10 அணுகுண்டுகளை ஏந்திச் சென்று வீசக்கூடிய **"டிஎ.்.ப்-5"** எனப்படும் புதிய ரக ஏவுகணையை சீனா ரகசியமாக சோதித்துள்ளது. இந்தப் புதிய ரக ஏவுகணை, ஒரே நேரத்தில் 10 அணுகுண்டுகளை ஏந்திச் செல்லும் திறன் கொண்டது. இதில் பொருத்தப்படும் ஒவ்வோர் அணுகுண்டும் **தனித் தனியாக வெவ்வேறு இலக்குகளைக் குறி** வைத்துத் தாக்கக் கூடியவை ஆகும்.

## அமெரிக்காவுக்கும், மெக்ஸிகோவுக்கும் இடையே சுவர்:

- **அமெரிக்காவுக்கும், மெக்ஸிகோவுக்கும்** இடையே சுவர் எழுப்பும் திட்டத்தை வரவேற்று, **இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு** சுட்டுரை (டுவிட்டர்) வலைதளத்தில் மேற்கொண்ட பதிவுக்கு, **அந்த நாட்டின் அதிபர் ரூவென் ரிவ்லின்** மன்னிப்பு கோரினார்.

## விசா வழங்க தடை:

- **பாகிஸ்தான், ஈராக், ஈரான், சிரியா மற்றும் ஆப்கானிஸ்தான்** நாட்டு பயணிகளுக்கு விசா வழங்குவதை தடை செய்துள்ள நாடு - **குவைத்**

## ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ஹெஸ்ப்-இ-இஸ்லாமி:

- ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த **ஹெஸ்ப்-இ-இஸ்லாமி** பயங்கரவாத அமைப்பின் தலைவர் **குல்புதீன் ஹெக்மதியாரை**, தடை செய்யப்பட்ட பயங்கரவாதிகள் பட்டியலில் இருந்து நீக்கி, ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஆப்கான் அரசுடனான பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகளுக்கு பின், குல்புதீன் ஹெக்மதியார் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா. அறிவித்திருந்த கட்டுப்பாடுகள்:

- ஐ.நா. அறிவித்திருந்த கட்டுப்பாடுகளையும் மீறி அணு ஆயுதம் தாங்கும் ஏவுகணைச் சோதனையை நடத்தியதால், **ஈரான் நாட்டின்** மீது அமெரிக்கா பொருளாதாரத்தடையை விதித்துள்ளது.

## பிப்ரவரி 2017ல், இந்தியாவுடன், இரயில்வே துறை:

- பிப்ரவரி 2017ல், இந்தியாவுடன், இரயில்வே துறையில் பரஸ்பர ஒத்துழைப்பு பெறுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ள நாடு **- இத்தாலி**

## நான்காவது ஃபிம்ஸ்டெக் கூடுகை:

- **நான்காவது ஃபிம்ஸ்டெக் கூடுகை - 2017 நேபாளத்தில்** நடைபெறவுள்ளது. பங்களாதேசம், “வங்காளவிரிகுடா நாடுகளுக்கிடையேயான தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு கூட்டமைப்பு” எனும் இவ்வமைப்பு இந்தியா, மியான்மர், ஸ்ரீலங்கா, தாய்லாந்து, பூட்டான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளை உறுப்பினராகக் கொண்டு **1997 ஆம் ஆண்டில்** துவங்கப்பட்டது.

## அந்தமான் நிக்கோபார் தீவுகளின் முதல் இரயில்வே தடம்:

- அந்தமான் நிக்கோபார் தீவுகளின் முதல் இரயில்வே தடம் **போர்ட்பிளேயர் மற்றும் டிக்லிபூர்** நகரங்களிடையே அமைக்கப்படவுள்ளது.

## 2017 - 19-ஆம் ஆண்டுக்கான சீன - இந்திய ஆராய்ச்சித் திட்டம்:

- 2017 - 19-ஆம் ஆண்டுக்கான **சீன - இந்திய ஆராய்ச்சித் திட்டத்தின் தலைவராக, சென்னை ஐஐடி உதவிப் பேராசிரியர் ஜோ தாமஸ் கரக்கட்டு** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## "Mobile World Congress 2017":

- அலைப்பேசி தொழில்நுட்பத்திற்கான உலகளவிலான வருடாந்திர கூடுகையான **"Mobile World Congress 2017"** இவ்வாண்டு ஸ்பெயினின் பர்சிலோனா நகரில் நடைபெறவுள்ளது. இக்கூடுகையை Global System Mobile Association (GSMA) எனும் அமைப்பு நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில், இந்தியாவின் சார்பாக **ஹைதராபாத் ஐ.ஐ.டி நிறுவன ஆராய்ச்சியாளர்கள் C-RAN prototype for 5G technology** எனப்படும் ஐந்தாம் தலைமுறை மொபைல் தொழில்நுட்பத்தை காட்சிப்படுத்தவுள்ளனர்.

## பிரைய்லி முறையிலான உலக வரைபடம்:

- உலகிலேயே முதல் முறையாக **பார்வையற்றோருக்கான பிரைய்லி** முறையிலான **உலக வரைபடம்** (அட்லஸ்) இந்திய அரசின் கீழ் செயல்படும் **தேசிய வரைபட அமைப்பின்** மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

### பிரெயலி எழுத்து முறை:

- பிரெயலி என்கிற எழுத்து முறை 1821-ல் பார்வையற்றோர்க்கு படிக்க உதவ லூயி பிரெயில் என்கிற பிரெஞ்சரால் உருவாக்கப்பட்ட எழுத்து முறை ஆகும்.

## உலகின் தலைசிறந்த 15 விமான நிலையம்:

- உலகின் தலைசிறந்த **15 விமான நிலையங்களின் பட்டியலில்** முதல்முறையாக **இந்தியாவின் இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையம்** (புது தில்லி) இடம் பெற்றுள்ளது.

## ஜெர்மனி நாட்டின் அதிபர்:

- ஜெர்மனி நாட்டின் அதிபராக "**ஃபிராங்க் வால்டர் ஸ்டெயின்மேயர்**" தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## யுனெஸ்கோ இயற்கை பாரம்பரியம்:

- யுனெஸ்கோ இயற்கை பாரம்பரியத் திருவிழா 2017 (UNESCO Natural Heritage Festival) பிப்ரவரி 11, 12 தேதிகளில் **ஹிமாச்சல் பிரதேசத்திலுள்ள சாய்ரோபா** நகரில் நடைபெற்றது.

### யுனெஸ்கோ:

- 1972ல் உலக பாரம்பரிய தளத்தை உருவாக்குவதற்காக உ ருவாக்கப்பட்ட சாசனத்தை இந்தியா நவம்பர் 14, 1977 ல் ஏற்றுக் கொண்டது.
- இந்தியா உலக பாரம்பரியக் களங்களின் பட்டியலில் 7வது இடத்தில் உள்ளது.
- 2016 வரை இந்தியாவில் உலக பாரம்பரியக் களங்களாக 35 இடங்கள் யுனெஸ்கோவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## 2017-ஆம் ஆண்டிற்கான பிரிக்ஸ் அமைப்புகள்:

- 2017-ஆம் ஆண்டிற்கான பிரிக்ஸ் அமைப்பின் மாநாடு “வலிமையான கூட்டுறவு ஒளிமயமான எதிர்காலம்” எனும் நோக்கில் சீனாவின் ஜியாமென் நகரில் நடைபெறவிருக்கிறது.

## அகில இந்திய கால்பந்து போட்டி :

- 17 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக கோப்பை கால்பந்து போட்டி அடுத்த ஆண்டு **இந்தியாவில்** நடைபெற உள்ளது.
- இதையொட்டி போட்டிக்கான மஸ்கட்டை அறிமுகம் செய்யும் விழா **டெல்லியில்** நடைபெற்றது.
- விழாவில் **மத்திய விளையாட்டு துறை அமைச்சர் விஜய் கோயல்** மற்றும் **அகில இந்திய கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் பிரபல படேல்** ஆகியோர் போட்டியின் **மஸ்கட்டாக சிறுத்தையை அறிமுகம் செய்தனர்.**

## ஈரான் புரட்சி தினம்: நாடெங்கும் கொண்டாட்டம்:

- **ஈரானில் அயதுல்லா கொமேனி தலைமையில்** 1979-ஆம் ஆண்டு பிப்ரவரி 11-ஆம் தேதி நடைபெற்ற புரட்சியைத் தொடர்ந்து **பெஹலவி வம்சத்தினரின்** மன்னராட்சி வீழ்த்தப்பட்டது.
- அதைத் தொடர்ந்து அந்த நாட்டில் இஸ்லாமிய ஆட்சி அமைக்கப்பட்டது.
- இதையொட்டி ஈரானில் ஆண்டுதோறும் பிப்ரவரி 11-ஆம் தேதி புரட்சி தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.
- இந்நிலையில் **38-ஆவது புரட்சி தினம்** அனுசரிக்கப்பட உள்ளது.

## இலங்கை: புதிய கட்சி தொடங்கினார் கருணா:

- இலங்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதியான **கருணா**, **‘தமிழ் ஐக்கிய மக்கள் முன்னணி’** என்ற பெயரில் புதிய கட்சியை தொடங்கினார்.
- விநாயகமூர்த்தி முரளிதரன் என்ற கருணா, விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து கடந்த 2004-ஆம் ஆண்டு விலகி, **தமிழ் மக்கள் விடுதலை புலிகள்** என்ற அமைப்பை ஏற்படுத்தினார்.
- இலங்கையில் கடந்த 2009-ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் நிறைவுற்ற பின்னர், அப்போதைய அதிபர் ராஜபட்சவுடன் கைகோத்த கருணா, இலங்கை சுதந்திரா கட்சியின் துணைத் தலைவராக ஆக்கப்பட்டார்.
- பின்னர், ராஜபட்ச அரசில் துணை அமைச்சர் பதவியும் அவருக்கு அளிக்கப்பட்டது.
- அதிபர் தேர்தலில் ராஜபட்ச தோல்விக்குப் பிறகு, இலங்கை சுதந்திரா கட்சியில் இருந்து அவர் விலகினார்.

## ஜப்பான் பாதுகாப்புக்கு அமெரிக்கா உறுதுணை:

- ஜப்பானின் பாதுகாப்புக்கு அமெரிக்கா எப்போதும் உறுதுணையாக இருக்கும் என்று அமெரிக்க **அதிபர் டொனால்ட் டிரம்ப்** கூறினார்.
- அமெரிக்கா - ஜப்பான் நல்லுறவுதான் பசிபிக் பிராந்தியத்தில் அமைதி நிலவுவதற்கு அடிப்படையாக உள்ளது.
- வர்த்தக விவகாரங்களில் நியாயமான, இரு தரப்புக்கும் பரஸ்பர நன்மை பயக்கும் விதத்திலான புதிய ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்படும் என்று டிரம்ப் கூறினார்.

- ஜப்பான் பிரதமர் **ஷின்ஸோ அபே**, அமெரிக்க அதிபராக டிரம்ப் தேர்வானதும், பதவி ஏற்பதற்கு முன்பே அவரை நேரில் சந்தித்தார்.
- அந்த வகையில் அவரை சந்தித்த முதல் வெளிநாட்டுத் தலைவர் என்ற பெருமை பெற்றார் **அபே**,

## விண்ணில் துள்ளும் விமானங்கள்...

- பெங்களூரில் நடைபெற்று வரும் **'ஏரோ இந்தியா - 2017'** விமானக் கண்காட்சியின் ஒருபகுதியாக **எலஹங்கா** பகுதியில் வான்வழி சாகசத்தை நிகழ்த்தும் **பிரிட்டன் விமானக் குழுவினர்.**

## பாகிஸ்தான் சிறை அதிகாரிக்கு பிடியாணை:

- பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டிருந்த இந்தியர் **சரப்ஜித் சிங்** கொலை வழக்கு தொடர்பான விசாரணைகளில் ஆஜராகாமல் இருந்து வந்த சிறைத் துறை அதிகாரிக்கு அந்நாட்டு நீதிமன்றம் பிடியாணைப் பிறப்பித்துள்ளது.
- லாகூரில் கடந்த **1990-ஆம்** ஆண்டு நடைபெற்ற தொடர் குண்டுவெடிப்பு வழக்கில் பாகிஸ்தான் போலீஸாரால் கைது செய்யப்பட்டவர் **சரப்ஜித் சிங்.**
- இந்தியரான இவர், அங்குள்ள கோட் லாக்பாத் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.
- இந்நிலையில், கடந்த 2013-ஆம் ஆண்டு சரப்ஜித் சிங் தமது சக கைதிகள் இருவரால் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.
- இந்தக் கொலை வழக்கு தொடர்பாக விசாரணை மேற்கொள்ள, லாகூர் உயர் நீதிமன்ற நீதிபதி **மஸார் அலி அக்பர்** தலைமையிலான ஒரு நபர் குழு அமைக்கப்பட்டது.
- இந்தக் குழுவின் விசாரணை அறிக்கையானது **பாகிஸ்தான் அரசிடம் 2014-**ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டது.

## ஐ.நா. அமைதிப் படைக்கு புதிய தலைவர் நியமனம்:

- ஐ.நா. அமைதிப் படையின் புதிய தலைவராக, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த **ஜீன்-பியர் லாக்ரோயிக்ஸை** (56) ஐ.நா. பொதுச் செயலர் **ஆன்டோனியோ குட்டரெஸ்** நியமித்துள்ளார்.
- பிரான்ஸ் நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சகத்தில் ஐ.நா. விவகாரங்களுக்கான இயக்குநராகப் பணியாற்றி வரும் **ஜீன்-பியர் லாக்ரோயிஸ்,** ஐ.நா. அமைதிப் படைத் தலைவராக பொறுப்பு வகிப்பார்.
- 6 ஆண்டுகளாக அந்தப் பொறுப்பை வகித்து வரும் **ஹெர்வ் லாட்சூஸ்,** வரும் மார்ச் மாதத்துடன் ஓய்வு பெறவிருப்பதையடுத்து, அந்தப் பதவிக்கு ஜீன்-பியர்லாக்ரோயிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.
- எனினும், ஐ.நா. அரசியல் விவகாரங்களுக்கான பிரிவின் தலைவர் **ஜெ.ஃப்ரி ஃபெல்ட் மேனின்** பதவிக்காலம் மேலும் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

## ஹெச்1பி விசா:

- ஹெச்1பி விசாவில் பல மாறுதல்களை கொண்டுவர அமெரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.
- இந்த நிலைமையில், விசா மாறுதல் காரணமாக இந்திய ஐடி துறையில் ஏற்படும் பாதிப்புகள் என்ன என்பது குறித்து மத்திய அரசு விளக்கம் கேட்டிருக்கிறது.
- மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் **நிர்மலா சீதாராமன்** தலைமையிலான குழு விசா பிரச்சினை குறித்து விவாதித்தது.

- **ஹெச் 1 பி விசா** மூலம் அமெரிக்காவுக்கு செல்பவர்களின் குறைந்தபட்ச ஆண்டு சம்பளம் **60,000 டாலர்** என்ற அளவில் இருந்தது.
- இதனை 1.30 லட்சம் டாலராக உயர்த்த அமெரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.
- 1989-ம் ஆண்டு குறைந்தபட்ச சம்பளம் உயர்த்தப்படவில்லை.
- இந்திய ஜிடிபியில் ஐடி துறையின் பங்கு **9.3 சதவீத** அளவில் இருக்கிறது.
- ஒவ்வொரு ஆண்டிலும் ஆயிரக்கணக்கான பணியாளர்களை **ஹெச் 1 பி விசா** மூலம் ஐடி நிறுவனங்கள் அமெரிக்காவுக்கு அனுப்புகின்றன.

## அமெரிக்காவில் முதல் ஆலையை தொடங்குகிறது சுந்தரம் கிளேடன்:

- டிவிஎஸ் குழுமத்தைச் சேர்ந்த **சுந்தரம் கிளேடன் நிறுவனம்** அமெரிக்காவில் தன்னுடைய முதல் ஆலையை தொடங்குகிறது.
- இந்தியாவிலும் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள இந்த நிறுவனம் திட்டமிட்டிருக்கிறது.
- சர்வதேச **ஆட்டோமொபைல் நிறுவனங்களுக்கு தேவையான அலுமினிய பாகங்களை** இந்நிறுவனம் தயாரிக்கிறது.
- சென்னையில் மூன்று ஆலையும், ஒசூரில் ஒரு ஆலையும் இந்த நிறுவனத்துக்கு உள்ளன.
- **அமெரிக்காவின் தெற்கு கரோலினா** மாகாணத்தில் **50 ஏக்கரில்** இந்த ஆலை அமைய இருக்கிறது.
- 2018-ம் ஆண்டில் இந்த ஆலை செயல்படத் தொடங்கும்.
- சுந்தரம் கிளேடன் நிறுவனத்தின் மொத்த உற்பத்தியில் **40 சதவீதம்** ஏற்றுமதி செய்யப்படுகிறது.

## காஷ்மீரிலிருந்து இந்தியா வெளியேறாவிட்டால் பேரழிவு:

- காஷ்மீரிலிருந்து இந்தியா உடனடியாக வெளியேறாவிட்டால் பேரழிவு ஏற்படும் என்று பாகிஸ்தான் அதிபர் மம்னூன் ஹுசைன் மிரட்டல் விடுத்துள்ளார்.
- இதுகுறித்து, பாகிஸ்தானை நிறுவிய **முகமது அலி ஜின்னாவின்** பிறந்த நாளையொட்டி, பாகிஸ்தானிலிருந்து வெளியாகும் 'டான்' நாளிதழில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.
- காஷ்மீர் விவகாரத்தை சர்வதேசப் பிரச்சனையாக்க பாகிஸ்தான் அண்மைக் காலமாக எடுத்து வரும் முயற்சிகளில் ஒன்றாக, அதிபர் **மம்னூன் ஹுசைன்** இவ்வாறு பேசியுள்ளதாகக் கூறப்படுகிறது.

## 1,200 ஆண்டுகள் பழைமையான சமணச் சிற்பம் கண்டுபிடிப்பு:

- **சேலம் மாவட்டம், மேச்சேரி அருகே சுமார் 1,200 ஆண்டுகள் பழைமையான-கருங்கல்லில்** வடிவமைக்கப்பட்ட **சமணத் தீர்த்தங்கரரின்** சிலையை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- தமிழக மக்கள் **சைவம், வைணவம், சமணம், பௌத்தம்** ஆகிய நெறிகளைப் பன்னெடுங் காலமாய் பின்பற்றி வந்துள்ளனர்.
- சங்க காலத்தில் இருந்தே தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட **ஜைனர்கள்** எனப்படும் சமணர்கள் தமிழகம் முழுக்க வாழ்ந்துள்ளனர்.
- **நன்னூல், சீவக சிந்தாமணி** உள்ளிட்ட இலக்கணம், இலக்கியம், மருத்துவம், கணிதம், வானியல் எனப் பல துறைகளிலும் சமணத் துறவிகள் நூல்களைப் படைத்து உள்ளனர்.
- இரண்டாயிரம் ஆண்டுகள் தொன்மையான **பிராமி கல்வெட்டுத்** தகவல்களில் பெரும் பகுதி சமணம் சார்ந்தவையே.

## பயங்கரவாதத்துக்கு எதிராக கூட்டாகக் குரல் எழுப்ப வேண்டும்:

- பயங்கரவாதத்துக்கு எதிராக கூட்டாகக் குரல் எழுப்ப வேண்டியது அவசியம் என்று பிரிட்டன் எம்.பி.க்கள் குழுவிடம் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார்.
- இந்தியா வந்துள்ள பிரிட்டனைச் சேர்ந்த எட்டு எம்.பி.க்கள் அடங்கிய குழு, பிரதமர் மோடியை சந்தித்துப் பேசியது.
- இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையிலான உறவுகளுக்கு இரு நாடுகளிலும் வலுவான ஆதரவு உள்ளது என்று குறிப்பிட்டார்.
- இந்தியாவும், பிரிட்டனும் இயல்பான தோழமை நாடுகளாக விளங்குகின்றன.
- **2017-ஆம் ஆண்டை இந்திய-பிரிட்டன் கலாசார ஆண்டாகக் கொண்டாடுவதை** அவர் வரவேற்றார் என்று மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாகிஸ்தான் இஸ்லாமிய நீதிமன்றம் அங்கீகாரம்:

- **சோதனைக் குழாய்கள் மூலம் கருத்தரிக்கும் முறைக்கு பாகிஸ்தானின் இஸ்லாமிய நீதிமன்றம் சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்கியுள்ளது.**
- கணவரின் விந்தணுவும், மனைவியின் அண்ட அணுவும் மருத்துவமுறையில் பிணைக்கப்பட்டு கரு உருவாக்கப்பட்டு, அந்தக் கரு மீண்டும் அந்த மனைவியின் கருப்பைக்குள் வைக்கப்பட்டால் அது சட்டத்துக்கு உள்பட்டதே ஆகும்.
- சோதனைக் குழாயில் உருவாக்கப்படும் கரு, முறைப்படி திருமணம் செய்துகொண்டுள்ள கணவன் - மனைவியின் உயிரணுக்களால் உருவாக்கப்பட்டால் மட்டுமே, அந்த முறைக்கு சட்டப் பூர்வ அங்கீகாரம் வழங்கப்படும்.
- பரிந்துரைக்கப்பட்ட மருத்துவ முறைகளைக் கொண்டு கணவரும், மனைவியும் செயற்கைக் கருத்தரிப்பு முறையைக் கையாண்டால், பிறக்கும் குழந்தை அவர்களது சட்டப்பூர்வமான குழந்தை என்ற அங்கீகாரத்தைப் பெறும் என்று அந்த நீதிமன்றம் தெரிவித்தது.

## உலகின் மிகப்பெரிய மணல் கோட்டை:

- உலகின் மிகப்பெரிய மணல் சிற்ப கோட்டையை **ஒடிஷாவை சேர்ந்த மணல் சிற்ப கலைஞர் சுதர்சன் பட்நாயக்,** புரி கடற்கரையில் உருவாக்கியுள்ளார்.
- இது கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.
- அமெரிக்க மணல் சிற்ப கலைஞர் டெட் கடந்த 2015-ம் ஆண்டில் மியாமி கடற்கரையில் 45 அடி 10 அங்குலம் உயரத்துக்கு மணல் கோட்டையை உருவாக்கினார்.
- இதுதான் உலக சாதனையாக இருந்து வந்தது.
- அந்த சாதனையை ஒடிஷாவை சேர்ந்த சுதர்சன் பட்நாயக் முறியடித்துள்ளார்.
- உலக அமைதியை கருப்பொருளாக வைத்து எழுப்பப்பட்டுள்ள **இந்த மணல் கோட்டை 48 அடி 8 அங்குலம் உயரம்** கொண்டதாகும்.
- இது கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.

## இலங்கை வறட்சிக்கு இந்தியா உடனடி உதவி:

- இலங்கையில் ஏற்பட்டுள்ள வறட்சியை சமாளிக்க இந்தியா சார்பில் **மூன்று தண்ணீர் டாங்கர்கள், 100 மெட்ரிக் டன் அரிசி** ஆகியவை நன்கொடையாக வழங்கப்படவுள்ளது.

- இலங்கை தலைநகர் கொழும்புக்கு மூன்று நாள் அரசு முறைப் பயணமாக கடந்த (பிப். 18) இந்திய வெளியுறவுத் துறைச் செயலாளர் ஜெய்சங்கர் சென்றார்.

## நாடு கடத்துதல் தொடர்பான கோரிக்கைகள்: விரைந்து செயல்பட இந்தியா - பிரிட்டன் முடிவு:

- நாடு கடத்துதல் தொடர்பான கோரிக்கைகளை விரைந்து செயல்படுத்த இந்தியாவும், பிரிட்டனும் முடிவு செய்துள்ளன.
- இந்தியாவுக்கு கடந்த ஆண்டு பிரிட்டன் **பிரதமர் தெரஸா மே** வருகை தந்தார்.
- அப்போது, பிரதமர் நரேந்திர மோடி - தெரஸா மே இடையேயான ஆலோசனைக் கூட்டத்தில் நாடு கடத்துதல் தொடர்பாக இந்தியாவும், பிரிட்டனும் முன்வைக்கும் கோரிக்கைகளை விரைந்து செயல்படுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

## ஐ.நா.வுக்கான ரஷிய தூதர் திடீர் மரணம்:

- ஐ.நா.வுக்கான ரஷிய தூதர் **விடாலி சுர்கின்** (65) நியூயார்க்கில் திடீரென்று காலமானார்.
- கடந்த 2006-ஆம் ஆண்டு முதல் ஐ.நா.வுக்கான ரஷிய தூதராக அவர் பணியாற்றி வந்தார்.
- அவர் சோவியத் யூனியனின் தூதரகப் பணிகளிலும் பின்னர் ரஷியாவின் தூதரகப் பணிகளிலும் அவர் ஏறத்தாழ 40 ஆண்டு காலம் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.
- கனடா, பெல்ஜியம் உள்ளிட்ட நாடுகளுக்கான ரஷியத் தூதராக அவர் பணியாற்றியிருக்கிறார்.
- **2006-இல் ஐ.நா.வுக்கான தூதராக** நியமிக்கப்பட்டார்.

## ஹிட்லர் தொலைபேசி ரூ.1.62 கோடிக்கு ஏலம்:

- **ஜெர்மனி சர்வாதிகாரி அடால்ப் ஹிட்லர்** பயன்படுத்திய தொலைபேசி ரூ.1.62 கோடிக்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது.
- இரண்டாம் உலகப் போரின்போது லட்சக்கணக்கானோரைக் கொன்று குவித்த ஹிட்லர் பெரும்பாலும் **தொலைபேசி வாயிலாகவே** தனது படைகளுக்கு உத்தரவுகளைப் பிழப்பித்தார்.
- முதலில் **கறுப்பு நிறத்தில்** இருந்த அந்த தொலைபேசிக்கு பின்னர் **சிவப்பு வர்ணம்** தீட்டப்பட்டது.
- அதில் **ஹிட்லரின் பெயர் மற்றும் நாஜி படையின் சின்னம்** பொறிக்கப்பட்டிருந்தன.
- கடந்த 1945-ம் ஆண்டில் இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது.
- அப்போது **பெர்லினைக் கைப்பற்றிய ரஷ்ய படையினர் ஒரு பதுங்கு குழியில் ஹிட்லரின் தொலைபேசியைக்** கண்டுபிடித்தனர்.
- அந்த தொலைபேசியை நட்பின் அடிப்படையில் பிரிட்டிஷ் படைத் தளபதி **சர் ரால்ப் ரெய்னரிடம்** அளித்தனர்.
- சுமார் 72 **ஆண்டுகளுக்குப் பிறகு ஹிட்லரின் தொலைபேசி அமெரிக்காவின் மேரிலேண்ட் மாகாணத்தில்** உள்ள ஏல மையத்தில் ஏலம் விடப்பட்டது.

## ருவாண்டா-இந்தியா இடையே 3 ஒப்பந்தங்கள் கையெழுத்து:

- ருவாண்டா சென்றுள்ள குடியரசு துணைத் தலைவர் **ஹமீது அன்சாரி**, அந்நாட்டு அதிபர் **பால் ககாமேவை, தலைநகர் கிகாலியில்** சந்தித்துப் பேசினார்.

- இந்தச் சந்திப்பின்போது, **விமானப் போக்குவரத்து, விசா நடைமுறைகள், அறிவியல் கண்டுபிடிப்புகள்** ஆகியவை தொடர்பாக இருநாடுகளுக்கு இடையே 3 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

## 'இரு நாடுகள்' தீர்வே அமைதிக்கு வழி:

- **இஸ்ரேல், பாலஸ்தீனம்** என இரு தனி நாடுகள் அமைவதே அமைதி ஏற்படுவதற்கான சிறந்த வழி என்று **சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங்** கூறினார்.
- அவர் பேசுகையில், **'இஸ்ரேலும் சிங்கப்பூரும்** பல்வேறு விவகாரங்களில் ஒற்றுமையுள்ள நாடுகள்.
- இரு நாடுகளுமே பரப்பளவில் சிறியதாக இருந்தாலும், உயர் தொழில்நுட்ப சாதனங்கள், பாதுகாப்புத் தளவாடங்கள் தயாரிப்பதில் உலகின் முன்னணி நாடுகளாகத் திகழ்கின்றன என்றார்.

## அணு ஆயுத ஒப்பந்தம்:

- அணு ஆயுதங்களால் ஏற்படும் விபத்துக்களை தடுப்பதற்காக **பாகிஸ்தான்** நாட்டுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மேலும் **ஐந்து ஆண்டு காலம் நீட்டிப்பதற்கு இந்தியா** ஒப்புதல் வழங்கியுள்ளது.

## "ராட் - உல் - ஃபசாத்":

- "ராட் - உல் - ஃபசாத்" எனும் பெயரில் தேசிய அளவிலான தீவிரவாதத்திற்கெதிரான நடவடிக்கையை **பாகிஸ்தான் நாடு** துவக்கியுள்ளது.

# திட்டங்கள்

## ஜன்தன் திட்டம்:

- ஜன்தன் திட்டம் அல்லது பிரதமர் மக்கள் நிதி திட்டம் வீட்டுக்கு ஒரு வங்கிக் கணக்கு இருக்கும் வகையில் புதிய திட்டத்தை பிரதமர் நரேந்திர மோதி 28 ஆகஸ்டு 2014 அன்று புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டத்தின் கீழ், வங்கியில் கணக்கு இல்லாத 7½ கோடி குடும்பத்தினருக்குக் காப்பீடு வசதியுடன் வங்கிக் கணக்கு தொடங்கப்படுகிறது.
- நாடு முழுவதும் மாநில தலைநகரங்களிலும் மற்றும் முக்கிய மாவட்ட தலைநகரங்களிலும் இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்படுகிறது.
- இத்திட்டத்தின் கீழ், வங்கி கணக்கு தொடங்குவதற்கு ஆதார் அட்டை இருந்தால், வேறு ஆவணங்கள் தேவை இல்லை.
- வங்கி கணக்கு தொடங்கிய பிறகு, அவர்களுக்கு ஏ.டி.எம். கார்டு வழங்கப்படும்.
- அதை வைத்து நாடு முழுவதும் உள்ள ஏ.டி.எம்.களில் பணம் எடுத்துக்கொள்ளலாம்.
- ஒரு லட்சம் ரூபாய்க்கான விபத்து காப்பீடும் வழங்கப்படும்.
- ஓய்வூதியம், காப்பீடு போன்ற வசதிகளும் அளிக்கப்படும்.
- மத்திய, மாநில அரசுகள் அளிக்கும் நிதி உதவிகளை, வங்கிக் கணக்கு மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
- மாநில அரசுத் துறைகளின் திட்டங்களின் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு அதற்கான தொகை உடனுக்குடன் அனுப்பப்படும்.
- இந்தத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு ருபே கிஷான் அட்டைகளை வழங்குவதற்குக் கூட்டுறவு வங்கிகள் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

## பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா

### அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின் மூலம் 2022ம் ஆண்டுக்குள் வீடு:

- பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் தலைமையில் கூடிய மத்திய அமைச்சரவை, பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா வசதித் திட்டத்துக்கு ஒப்புதல் அளித்தது.
- இத்திட்டத்தின் கீழ் சொந்த வீடு இல்லாதவர்கள் மற்றும் சிதிலமடைந்த குடியிருப்பவர்களுக்கு வீடு கட்ட நிதி உதவி செய்யப்படும்.
- 2016-17 முதல் 2018-19 வரையிலான மூன்றாண்டு காலத்தில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு ரூபாய் 81,975 ன் தேவைப்படும்.
- ஒரு கோடி வீடுகளை 2016-17 முதல் 2018-19 வரையிலான காலகட்டத்தில் கட்டுவதென திட்டமிடப்பட்டுள்ள மற்றும் சண்டிகர் தவிர்த்து, இந்தியாவின் அனைத்து ஊரகப் பகுதிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
- இத்திட்டத்தின் செலவு மாநில அரசுகள் மற்றும் மத்திய அரசால் பகிர்ந்து கொள்ளப்படும்.

### இத்திட்டத்தின் விவரங்கள் வருமாறு:

- பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா - கிராமீன் ஊரக வீட்டு வசதித் திட்டத்தை செயல்படுத்துதல்.

- 2016-17 முதல் 2018-19 வரையிலான 3 ஆண்டு காலத்தில் 1 கோடி வீடுகள் கட்டப்படும்.
- சமதளத்தில் உள்ள இடங்களில் வீடு கட்ட ரூபாய் 1,20,000 நிதி உதவியும், மலைத்தளம் மற்றும் சமதளமல்லாத இட கட்ட 1,30,000 நிதி உதவியும் வழங்கப்படும்.

## திட்டத்தை செயல்படுத்தும் முறை:

- சமூக, பொருளாதார மற்றும் சாதி கணக்கெடுப்பின் அடிப்படையில் தகுதியானவர்கள் அடையாளம் கண்டு, வெளி முறையில் திட்டத்தை செயல்படுத்துதல்.
- தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பட்டியல் கிராம சபைகளிடம் அளிக்கப்பட்டு, சரிபார்க்கப்படும். இந்தியா சரிபார்ப்புக்கு பின் வெளியிடப்படும்.
- மத்திய மற்றும் மாநில அரசுகளால் வீடு கட்டுவதற்கான செலவுகள் 60 : 40 என்ற விகிதத்தில் சமதளப் பகுதிகளிலும் விகிதத்தில் மலைப்பகுதி மற்றும் வடகிழக்குப் பகுதிகளிலும் பகிர்ந்து கொள்ளப்படும்.
- கிராம சபைகளின் பங்கெடுப்போடு வருடாந்திர பயனாளர்களின் பட்டியல் தயாரிக்கப்படும். ஏற்கனவே பட்டியலில் திருத்தம் செய்யப்பட்டால் அதற்கான காரணங்களை கிராம சபை எழுத்துபூர்வமாக அளிக்க வேண்டும்.
- வீடு கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு பயனாளர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.
- உள்ளூர் தட்பவெப்பங்களுக்கு ஏற்ற, இயற்கை சீற்றங்களை எதிர்கொள்ளத் தக்க வீடு வடிவமைப்புகள் வழங்கப்படும்.
- வீட்டின் அளவு 20 சதுர மீட்டரிலிருந்து நவீன சமையலறைக்காக 25 சதுர மீட்டர் வரை அதிகரித்துக் கொள்ளலாம்.

# கட்டுரைகள்

## நிதிநிலை அறிக்கை (பட்ஜெட்) 2017-2018:

### முக்கிய அம்சங்கள்:

- முதல் முறையாக பிப்ரவரி 28-க்குப் பதிலாக பிப்ரவரி 1-ம் தேதியே பொது பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
- இதுவரை தனியாகத் தாக்கல் செய்யப்பட்டு வந்த ரயில்வே பட்ஜெட், இம்முறை பொது பட்ஜெட்டுடன் ஒருங்கிணைத்து வெளியிடப்பட்டது.
- 2017 - 18ம் நிதியாண்டுக்கான மொத்த பட்ஜெட் செலவு ரூ. 21,47,000. (சுதந்திர இந்தியாவில் தாக்கல் செய்யப்பட்ட முதல் பட்ஜெட்டில் மத்திய அரசின் மொத்த செலவு ரூ. 164 கோடி என்பது நினைவு கூர்த்தக்கது).
- மாற்றம், உத்வேகம், தூய்மை இந்தியாவே (டெக் இந்தியா). இந்த பட்ஜெட்டின் பிரதான அம்சங்களாக நிதியமைச்சர் அருண்ஜெட்லி தெரிவித்துள்ளார்.
- ‘ஜாம்’ எனப்படும் ஜன்தன் - ஆதார் - மொபைல் பரிவர்த்தனைகளே அரசின் இலக்காக உள்ளது என்று மத்திய நிதியமைச்சர் ஜேட்லி தெரிவித்துள்ளார்.
- அதேபோல, பிரிட்டிஷார் காலந்தொட்டு பல ஆண்டுகளாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த பழைய நடைமுறையை மாற்றி பிப்ரவரி மாதத்தின் தொடக்கத்திலேயே பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.

### வருமான வரி:

- வருமான வரி விலக்கு உச்ச வரம்பில் இந்த முறை எந்த மாற்றமும் செய்யப்படவில்லை அதேவேளையில் ஆண்டுக்கு ரூ. 5 லட்சம் வரை வருமானம் ஈட்டுவோருக்கு விதிக்கப்படும் வரி விகிதம் பாதியாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது ஆண்டுக்கு ரூ. 2.5 லட்சம் முதல் ரூ. 5 லட்சம் வரை வருமானம் ஈட்டுவோர்களுக்கு இதுவரை 10 சதவீத வருமான வரி விதிக்கப்பட்டு வந்தது. அந்த விகிதத்தை 5 சதவீதமாகக் குறைப்பதாக மத்திய பட்ஜெட்டில் அறிவிப்பு வெளியாகியுள்ளது.
- ஆண்டுக்கு ரூ. 50 லட்சத்திலிருந்து ரூ. 1 கோடி வரை வருமானம் ஈட்டுவோருக்கு கூடுதலாக 10 சதவீத உபரி வரி விதிக்கப்பட்டுள்ளது. அதே போன்று ரூ. 1 கோடிக்கு மேல் வருமானம் பெறுவோருக்கு 15 சதவீத உபரி வரி விதிக்கப்படும் என்றும் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

### சிறுதொழில் நிறுவனங்கள்:

- சிறுதொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், ஆண்டுக்கு ரூ. 50 கோடிக்கு மிகாமல் விற்றுமுதல் ஈட்டும் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டு வந்த 30 சதவீத வருமான வரி 25 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

## ஏழைகளுக்கு வீட்டு வசதி:

- உறைவிட வசதியில்லாத ஏழை மக்களுக்கு புதிதாக 1 கோடி வீடுகள் கட்டித் தரப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

## வறுமை ஒழிப்பு:

- வறுமைக் கோட்டிற்குக் கீழ் வசிக்கும் ஒரு கோடி குடும்பங்களை ஏழ்மையில் இருந்து விடுவிக்க புதிய திட்டம்.
- தூய்மை இந்தியா திட்டம் மூலம் கிராமங்களுக்கு குழாய் மூலம் குடிநீர்.
- நாட்டில் 2019ம் ஆண்டுக்குள் 50 ஆயிரம் கிராம பஞ்சாயத்துகளில் ஏழ்மை முழுமையாக நீக்கப்படும்.
- 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் பெண்களின் பங்கு 55 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## கருப்புப் பண ஒழிப்பு நடவடிக்கை:

- கருப்புப் பணத்தை ஒழிப்பதற்காக பட்ஜெட்டில் பல்வேறு அதிரடி அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.
- ரூ. 3 லட்சத்துக்கு மேல் ரொக்கப் பணப் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## விவசாயம்:

- அடுத்த நிதியாண்டுக்குள் ரூ. 10 லட்சம் கோடிக்கு வேளாண் கடன்களை வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- மேலும், பயிர்க்காப்பீட்டுத் திட்டத்துக்காக ரூ. 9,000 கோடியும், நுண் நீர்ப் பாசனத் திட்டத்துக்காக ரூ. 5,000 கோடியும் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.
- 2017-18 நிதியாண்டில் விவசாய வளர்ச்சி 4.1 சதவீதமாக இருக்கும். விவசாயிகளின் வருமானத்தை, 5 ஆண்டுகளுக்குள் இரட்டிப்பாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## கல்வித் துறை:

- உயர் கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கான அனைத்து நுழைவுத் தேர்வுகளையும் நடத்துவதற்காக, “தேசியத் தேர்வுகள் மையம்” உருவாக்கப்படும்.

## ரயில்வே துறை அறிவிப்புகள்:

- ரயில்வே துறைக்கு 2017-18-ஆம் நிதியாண்டுக்காக, ரூ.1.31 லட்சம் கோடி மதிப்பீட்டில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.

- அடுத்த 5 ஆண்டுகளில் ரூ. 1 லட்சம் கோடியில், "தேசிய ரயில்வே பாதுகாப்பு நிதியம்" உருவாக்கப்படும்.
- ஐஆர்சிடிசி இணையதளம் மூலம் முன்பதிவு செய்யப்படும் ரயில் டிக்கெட்டுகளுக்கு சேவை கட்டணம் கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது. வரும் 2020-ஆம் ஆண்டுக்குள் ஆளில்லா கடவுப்பாதைகளே இல்லை என்ற நிலை ஏற்படுத்தப்படும். வரும் 2019-ஆம் ஆண்டுக்குள், அனைத்து ரயில் பெட்டிகளிலும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத "பயோ கழிப்பறைகள்" அமைக்கப்படும்.

**பிற அறிவிப்புகள்:**

- குஜராத், ஜார்க்கண்டில் புதிதாக எய்ம்ஸ் மருத்துவமனை மையங்கள் அமைக்கப்படும்.
- நாடு முழுவதும் உள்ள ரேஷன் கடைகளில் விற்பனை செய்யப்படும் சர்க்கரைக்காக மாநிலங்களுக்கு மத்திய அரசு அளித்து வந்த மானியம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மருத்துவ உபகரணங்கள் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக, அந்தத் துறையில் 100 சதவீத அன்னிய நேரடி முதலீட்டுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. வறட்சியை சமாளிக்க நாடு முழுவதும் 5 லட்சம் குளங்கள் ஏற்படுத்தப்படும்.
- 1 லட்சத்து 55 ஆயிரம் கிராமங்களுக்கு இணையதள வசதி செய்து தரப்படும். கிராமங்களில் நாள்தோறும் 133 கி.மீ. தொலைவுக்கு சாலை அமைக்கப்படும். கிராமப்புறங்களில் வசிக்கும் கர்ப்பிணிகளுக்கு ரூ. 6 ஆயிரம் உதவித் தொகை வழங்கப்படும்.
- மத்திய பட்ஜெட்டில் விளையாட்டுத் துறைக்கு ரூ. 1,943 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் இந்த ஆண்டு கூடுதலாக ரூ. 350 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. **நிதிப்பற்றாக்குறை சதவீதம்:** 2017-18 ஆம் நிதியாண்டில் நிதிப் பற்றாக்குறை 3.2 சதவீதமாக இருக்கும். அதற்கடுத்த ஆண்டில் இது 3 சதவீதமாக இருக்கும்.

**அரசுக்கு வருமானம் வரும் வழிகள்:**

- சுங்க வரி மற்றும் கலால் வரி - 23%
- அரசு பெறும் கடன் - 19%
- கார்ப்பரேட் வரி - 19%
- வருமான வரி - 16%
- வரி இல்லாத ஆதாரங்கள் - 13%
- சேவை வரி - 10%

**அரசு செலவுகள்:**

- மாநிலங்களுடனான வரி மற்றும் நிதி பங்கீடு - 29%
- மத்திய அரசு நலத்திட்டங்கள் - 21%
- அரசு பெற்ற கடனுக்கான வட்டி செலுத்துதல் - 18%
- மற்ற செலவீனங்கள் - 13%
- மானியம் - 10%
- பாதுகாப்புத்துறை - 9%

# பொது அறிவு

## இதுவரை பி.எஸ்.எல்.வி. ராக்கெட்டின் பயணம் !

- இஸ்ரோ முதன் முதலாக 1993-ஆம் ஆண்டு (ThePolar Satellite Launch Vehicle) பி.எஸ்.எல்.வி. ராக்கெட்டில் ஐ.ஆர்.எஸ் - 1 இ என்ற செயற்கைக்கோளை விண்ணுக்கு அனுப்பியது.
- இது தோல்வியில் முடிந்தது.
- அதன்பின் அனுப்பிய பி.எஸ்.எல்.வி. ராக்கெட்டுகள் அனைத்தும் வெற்றி பெற்றுள்ளன.
- இஸ்ரோ வெற்றிகரமாக விண்ணுக்கு அனுப்பவுள்ளது 39-ஆவது பி.எஸ்.எல்.வி. வரிசை ராக்கெட்டாகும்.

| ஆண்டு | செயற்கைக்கோள் | முடிவு |
|---|---|---|
| 1993, செப்டம்பர் 20 | ஐ.ஆர்.எஸ்-1 இ | தோல்வி |
| 1994, அக்டோபர் 15 | ஐ.ஆர்.எஸ்-பி2 | வெற்றி |
| 1996, மார்ச் 21 | ஐ.ஆர்.எஸ்-பி3 | வெற்றி |
| 1997, செப்டம்பர் 29 | ஐ.ஆர்.எஸ்-1டி | பாதி வெற்றி |
| 1999, மே 26 | ஓசன்சாட்-1, கிட்சாட்-3, டூப்சாட் | வெற்றி |
| 2001, அக்டோபர் 22 | டி.இ.எஸ் | வெற்றி |
| 2002, செப்டம்பர் 12 | கல்பனா-1 (மெட்சாட்) | வெற்றி |
| 2003, அக்டோபர் 17 | ரிசோர்ஸ்சாட்- 1 (ஐ.ஆர்.எஸ்-பி6) | வெற்றி |
| 2005, மே 5 | கார்டோசாட் -1, ஹாம்சாட் | வெற்றி |
| 2007, ஜனவரி 10 | கார்டோசாட் -2, எஸ்.ஆர்.இ. -1. லபான் டூப்சாட், பெகியூன்சாட்-1 | வெற்றி |
| 2007, ஏப்ரல் 23 | ஏஜைல் | வெற்றி |
| 2008, ஜனவரி 21 | டெக்சார் | வெற்றி |
| 2008, ஏப்ரல் 28 | கார்டோசாட் -2ஏ, ஐ.எம்.எஸ்.1. 8 நானோ செயற்கைக்கோள்கள் | வெற்றி |
| 2008, அக்டோபர் 22 | சந்திராயன் - 1 | வெற்றி |
| 2009, ஏப்ரல் 20 | ரிசாட்-2, அனுசாட் | வெற்றி |
| 2009, செப்டம்பர் 23 | ஓசன்சாட்-2, ஆறு நானோ செயற்கைக்கோள்கள் | வெற்றி |
| 2010, ஜூலை 12 | கார்டோசாட் -2பி, அல்சாட்-2ஏ. என்.எல்.எஸ் 6.1, ஸ்டுட்சாட் | வெற்றி |
| 2011, ஏப்ரல் 20 | ரிசோர்ஸ்சாட்-2, யூத்சாட், எக்ஸ் சாட் | வெற்றி |
| 2011, ஜூலை 15 | ஜிசாட்-12 | வெற்றி |
| 2011, அக்டோபர் 12 | மேகா-ட்ராப்கியூஸ், எஸ்.ஆர்.எம்.சேட், வேசல்சேட், ஜூக்னு | வெற்றி |
| 2012, ஏப்ரல் 26 | ரிசாட்-1 | வெற்றி |
| 2012, செப்டம்பர் 9 | ஸ்பாட் 6 மற்றும் புரோடெரஸ் | வெற்றி |
| 2013, பிப்ரவரி 25 | சரல் மற்றும் 6 செயற்கைக்கோள்கள் | வெற்றி |
| 2013, ஜூலை | ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்-1 ஏ | வெற்றி |
| 2013, நவம்பர் 5 | செவ்வாய்க்கு விண்கலம் | வெற்றி |
| 2014, ஏப்ரல் 4 | ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்-1 பி | வெற்றி |

| | | |
|---|---|---|
| 2014, ஜூன் 30 | ஸ்பாட்7, கனடா எக்ஸ் 4, கனடா எக்ஸ் 5, எய்சாட், வெலக்ஸ் | வெற்றி |
| 2014, அக்டோபர் 15 | ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்-1 சி | வெற்றி |
| 2015, மார்ச் 28 | ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்-1 டி | வெற்றி |
| 2016, ஜனவரி 20 | ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்-1 இ | வெற்றி |
| 2016, மார்ச் 19 | ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்-1 எ.ஃ.ப் | வெற்றி |
| 2016, ஏப்ரல் 28 | ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்-1 ஜி | வெற்றி |
| 2016, மே 23 | ஆர்.எல்.வி.டிடி | வெற்றி |
| 2016, ஜூன் 22 | கார்டோசாட் 2 | வெற்றி |
| 2016, செப்டம்பர் 26 | ஸ்காட்சாட் | வெற்றி |
| 2016, டிசம்பர் 15 | ரிசோர்ஸ்சாட் | வெற்றி |

## நோபல் பரிசு பெற்ற இந்தியர்கள்

| பெயர் | ஆண்டு | துறை |
|---|---|---|
| ரவீந்திரநாத் தாகூர் | 1913 | இலக்கியம் |
| சர். சி.வி. ராமன் | 1930 | இயற்பியல் |
| ஹர்கோவிந்சிங்குரானா | 1968 | மருத்துவம் |
| அன்னை தெரசா | 1979 | அமைதி |
| எஸ். சந்திரசேகர் | 1983 | இயற்பியல் |
| அமர்த்தியா சென் | 1998 | பொருளாதாரம் |
| வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் | 2009 | வேதியியல் |
| கைலாஷ் சத்தியார்த்தி | 2014 | அமைதி |

## ஒருமுறைக்கு மேல் நோபல் பரிசு பெற்றவர்கள்

| | |
|---|---|
| ஜே. பார்டீன் | இயற்பியல் 1956, இயற்பியல் 1972 |
| மேடம் கியூரி | இயற்பியல் 1903, இயற்பியல் 1911 |
| எல். பவுலிங் | வேதியியல் 1954, அமைதி 1962 |
| எப். சாங்கெர் | வேதியியல் 1958, வேதியியல் 1980 |
| ஐ.நா. அகதிகள் ஆணையம் | அமைதி 1954, அமைதி 1981 |
| சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் | அமைதி 1917, அமைதி 1947, அமைதி 1954, அமைதி 1963 |

## வினா - விடைகள்

1. 2017ல் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்

   (A) காயிதே மில்லத் (B) இரப்ராஹிம் சுலைமான் (C) அகமது **(D) காதர் மொகீதீன்**

2. காவிரி ஆற்றின் குறுக்கே எந்த மாநிலம் புதிய அணை கட்ட முடிவெடுத்துள்ளது.

   (A) ஆந்திரா **(B) கர்நாடகா** (C) தமிழ்நாடு (D) கேரளா

3. மக்கள் எழுச்சி நீதிக் கூட்டணி என்ற புதிய கட்சியை தோற்றுவித்தவர் யார்?

   (A) ஒ. பன்னீர் செல்வம் (B) தீபா **(C) இரோம் ஷர்மிளா** (D) வைகோ

4. நாகலாந்தில் தற்போதைய முதல்வராக பதவி வகிப்பவர் யார்?

   **(A) லிஜிட்சு** (B) ஜிலியாங் (C) நைபிடிரியோ (D) ஜமீர்

5. 2016-ம் ஆண்டின் சிறந்த தகவல் தொழில்நுட்ப தொழில் துவக்க நிறுவன விருது எந்த நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

   **(A) லூசிடஸ்** (B) மைக்ரோசாப்ட் (C) இன்போசிஸ் (D) பாரடைஸ்

6. 2017-ல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி எத்தனை சதவீதம் என ரிசவ் வங்கி கணித்துள்ளது

   (A) 7.2% **(B) 7.4%** (C) 7.6% (D) 8%

7. சி.பி.ஐ யின் புதிய இயக்குநராக நியமிக்கப்பட்டவர் யார்?

   (A) A.P. சிங் **(B) அலோக்குமார்** (C) ரஞ்சித் சின்ஹா (D) ராகேஷ் அஸ்தானா

8. 2017-ல் பிப்ரவரியில் உளவுத் துறை ஐ.ஜியாக தேர்வு செய்யப்பட்டவர் யார்?

   (A) ரங்கநாதன் **(B) டேவிட்சன்** (C) சத்திய மூர்த்தி (D) நாரயண மூர்த்தி

9. கென்னத் ஆரோ எனும் அமெரிக்க பொருளாதார வல்லுநர் நோபல் பரிசு பெற்ற ஆண்டு

   (A) 1971 **(B) 1972** (C) 1973 (D) 1974

10. கீழ்கண்டவற்றுள் மின் ஆளுகைக்கான சிறந்த மாநிலங்களுக்கான விருது
(A) தமிழ்நாடு **(B) தெலுங்கானா** (C) கேரளா (D) ஆந்திரா

11. 2016-ம் ஆண்டிற்கான P.C. ராய் விருது யாருக்கு வழங்கப்பட்டது?
(A) ரவீந்ரா **(B) ரகுராம்** (C) கிருஷ்ணா (D) அருண குமாரி

12. 2016-ம் ஆண்டிற்கான சாகித்ய அகாதெமி விருது யாருக்கு வழங்கப்பட்டது
(A) ஆ. மாதவன் (B) பூமணி **(C) வண்ணதாசன்** (D) புவியரசு

13. அசோசோம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
(A) 1919 **(B) 1920** (C) 1921 (D) 1922

14. "AMAN 2017" என்ற பெயரில் பன்னாட்டு கடற்படை பயிற்சியை நடத்திய நாடு எது?
(A) தாய்லாந்து **(B) பாகிஸ்தான்** (C) அமெரிக்கா (D) வடகொரியா

15. 2012 - முதல் 2016 வரையிலான காலத்தில் ஆயுத இறக்குமதியில் முதலிடம் தக்கவைத்த நாடு
(A) பாகிஸ்தான் (B) வடகொரியா (C) அமெரிக்கா **(D) இந்தியா**

16. ஐ.என்.எஸ் விராட் போர்கப்பல் எந்த ஆண்டு இந்திய கடற்படையில் சேர்க்கப்பட்டது
(A) 1986 **(B) 1987** (C) 1988 (D) 1989

17. "கிரிப்பன் வகை போர் விமானங்கள்" இறக்குமதி செய்யவுள்ள நாடு எது?
(A) சுவிட்சர்லாந்து **(B) ஸ்வீடன்** (C) போர்ச்சுகல் (D) பிரான்ஸ்

18. 2017-ம் ஆண்டுக்கான சிறந்த விளையாட்டு வீரர் விருது யாருக்கு வழங்கப்பட்டது?
**(A) உசேன் போல்ட்** (B) ரோஜர்பெடரர்
(C) மெர்ஸி (D) கிறிஸ்டீனா ரொனால்டோ

19. 2017ல் சிறந்த மீண்டு வந்த வீரர் விருதை வென்றவர் யார்?
(A) அந்தோனி எர்வின் **(B) மைக்கேல் பிலிப்ஸ்**
(C) ஜேம்ஸ் பிஜென் (D) நாதன் அத்ரியன்

20. 'ஆப்பிள்' மொபைல் ஃபோன் நிறுவனம் தனது தொழிற்சாலையை நிறுவவுள்ள மாநிலம்
(A) மகாராஷ்டிரா **(B) கர்நாடகா** (C) ஆந்திரா (D) கேரளா